# திருமறைத்தீபம்



75 வது இதழ்

**BIBLE LAMP**
**திருமறைத்தீபம்**

**Issue No. 4 of 2013**
**ISBN 1173-7255**

இக்காலாண்டுப் பத்திரிகை யில் வெளிவரும் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியை யும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக் கூடாது.

**ஆசிரியர்: ஆர். பாலா**

**Editor:** R. Bala
**Design:** M. James
**Publisher:** Sovereign Grace Publications
**Address:** P O Box 62 159 Sylvia Park, Auckland 1644 New Zealand
**Telephone:** 64 9 272 8061
**e-mail:** blamp@ihug.co.nz
**Web site:** www.biblelamp.me (or) www.biblelamp.org

"கொள்கைகளையும் கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத் தடங்கல் என்றுதான் கூற வேண்டும்."

சி. எச். ஸ்பர்ஜன்
1834-1892

# வாசகர்களே!

இந்த இதழ் திருமறைத்தீபத்தின் 75வது இதழ். அதை நினைவுகூருமுகமாக என் நினைவில் அசைவாடிய எண்ணங்களை எழுதியிருக்கிறேன். இத்தனை காலமாக பத்திரிகையைத் தொடர்ந்து அச்சில் வைத்திருந்து சத்தியங்களை விளக்கி எழுதத் துணை செய்த ஆண்டவருக்கே எல்லா மகிமையும் சேரவேண்டும். பத்திரிகை எத்தனையோவிதங்களில் பயனுள்ளதாக இருக்கிறது என்று எழுதித் தெரிவிக்கிறவர்களும், தொடர்ந்து அதிகரிக்கும் புதிய வாசகர்களும் இந்தப் பணி தொடர எங்களுக்கு ஊக்கமளிக்கிறார்கள்.

கொஞ்சம் வித்தியாசமான ஓர் ஆக்கம் இந்த இதழில் வந்திருக்கிறது. கிறிஸ்தவத்திற்கு எதிர்வினை தெரிவித்து எழுதப்பட்டுள்ள Breaking India என்ற ஒரு நூலுக்கான என்னுடைய எதிர்வினையை இதில் தந்திருக்கிறேன். இந்த நூல் தமிழில் 'உடையும் இந்தியா' என்ற பெயரில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களால் எழுதப்பட்டிருக்கும் நூலாதலால் கிறிஸ்தவத்தைத் தவறான கோணத்தில் பார்த்து விமர்சித்திருக்கிறார்கள். இருந்தபோதும் அதிலிருந்து கிறிஸ்தவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய அநேக விஷயங்கள் இருக்கின்றன. நம்மைத் தவறாக கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள் எண்ணும்படி நடந்துகொள்வதை நாம் தவிர்த்துக்கொள்ளலாம் அல்லவா? ஆகவே கிறிஸ்தவர்களை எச்சரிக்கும் வகையில் என்னுடைய எதிர்வினையைத் தந்திருக்கிறேன். இது இந்தியா மட்டுமல்லாமல் ஸ்ரீ லங்காவில் இருக்கும் வாசகர்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும்.

ஜெ.சி. ரைலின் "பெற்றோரின் கடமைகள்" என்ற ஆக்கத்தின் இறுதிப் பகுதி இந்த இதழில் வந்திருக்கிறது. இது ஜூன் மாதம் நூலாக 'ஆவிக்குரிய பிள்ளை வளர்ப்பு' என்ற தலைப்பில் தமிழகத்தில் வெளியிடப்பட்டது. ஏற்கனவே அநேகர் ஆர்வத்தோடு இந்நூலை வாங்கி வாசிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். குடும்பங்களுக்கு நிச்சயம் அது பயனுள்ளதாக இருக்கும்.

அடுத்த வருடம் பத்திரிகை இருபதாவது வருடத்தை ஆரம்பிக்கிறது. அதுவே ஒரு மைல் கல். இந்தளவுக்கு நம்மை வழிநடத்தி தன் இராஜ்யத்தை விஸ்தரிக்க, தகுதியேயில்லாத நம்மையும் ஒரு சிறு கருவியாக இறையாண்மையுள்ள கர்த்தர் பயன்படுத்தி வருவதற்காக அவருக்கு நாம் பெரு நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

- ஆசிரியர்

# எழுபத்தைந்து!

### - முதிரும் வயதல்ல, இளமை ததும்பும் இதழின் எண் -

திருமறைத்தீபம் பத்திரிகையின் எழுபத்தைந்தாவது இதழாக இந்த இதழ் உங்கள் கைகளை வந்தடைந்திருக்கிறது. முதலாவது இதழை ஆரம்பித்தது நேற்று போல் இருக்கிறது. அந்தளவுக்கு காலம் வெகுவேகமாகக் கடந்து போயிருக்கிறது. ஆரம்பத்தில் A4 வடிவமைப்பில் வெளிவந்த பத்திரிகை அநேகருடைய வேண்டுகோளுக்கிணங்க கையடக்கமான வடிவமைப்பில் வெளிவர ஆரம்பித்தது. இன்றுவரை அதுவே தொடர்கின்றது. எழுபத்தைந்தாவது இதழ்வரை பத்திரிகை நகருமா என்றெல்லாம் நான் நினைத்துப் பார்த்ததில்லை. வாசித்து சத்தியத்தை அறிந்து வளர வேண்டும் என்ற வாஞ்சை கொண்ட இதயங்கள் இருக்கின்றவரை கர்த்தர் இது தொடர்ந்து அச்சில் இருக்கும்படிப் பார்த்துக்கொள்ளுவார் என்பதில் எங்களுக்கு சந்தேகம் இருக்கவில்லை. அதை அனுபவத்தில் கண்டு வருகிறோம். இதுவரை பத்திரிகையைத் தொடர அனுமதித்த, அருமையான சத்தியங்களை வெளியிட அனுமதித்த, எதிலும் நடுநிலை நோக்கில்லாமலும், சத்தியத்திற்கு பல முகங்கள் இருப்பது போன்ற தோற்றத்தை அளிக்க முயலாமலும் வேதம் போதிப்பவற்றை அப்படியே எழுத அனுமதித்த கர்த்தருக்கு முதற்கண் நன்றி செலுத்துகிறேன்.

இதற்குப் பின்னாலிருந்து பல்வேறு விதங்களில் பணியாற்றும், என் சபையுட்பட அநேகருக்கு நான் நன்றி சொல்ல வேண்டும். ஒரு காலத்தில் தனியொருவனாக அநேக பணிகளை நானே செய்திருந்தபோதும் அதற்கு அவசியமில்லாமல் இந்தியாவிலும், ஸ்ரீ லங்காவிலும் பல நண்பர்களை பத்திரிகைக்காக உழைக்க கர்த்தர் வழியேற்படுத்தித் தந்திருக்கிறார். தொடர்ந்து பத்திரிகையை லாப நோக்கங்களில்லாமல் இலவசமாக அனுப்பவும் அவர் கிருபை பாராட்டியிருக்கிறார். இப்படியொரு பத்திரிகை இருக்கிறதென்று அறிந்து ஆவலோடு கேட்டு எழுதுபவர்களுக்கு தொடர்ந்தும் இதை அனுப்பி வருகிறோம். அதை இன்னும் நெடுங்காலம் தொடர அவருடைய கிருபையும், தயவும் எங்களுக்குத் தேவை. இணையத்திலும், இணைய வசதியுள்ளவர்கள் பத்திரிகையை வாசித்துப் பயன்பெற வசதி செய்து தரப்பட்டிருக்கிறது.

திருமறைத்தீபத்தைப் பற்றி நினைக்கின்றபோது என்னால் ஆர்தர் பிங்க் என்ற அருமைப் போதகரைப் பற்றி நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. அவர் கொஞ்சம் வித்தியாசமான போதகர். ஆனால், சத்திய வாஞ்சையுள்ள, விசுவாசமுள்ள போதகர். ஆஸ்திரேலியாவிலும், அதற்குப் பிறகு பிரிட்டனிலும் பணியாற்றி இறுதியில் ஸ்கொட்லாந்து பகுதியில் ஓய்வு பெற்று இறுதியில் கர்த்தரை அடைந்தவர். பிங்க்

ஒரு பத்திரிகையை தன் ஊழியக்காலம் முழுவதும் நடத்தி வந்தார். அதில் அதிக துன்பங்களை வாழ்க்கையில் சந்தித்தார். யாருக்குப் பிடிக்கிறதோ இல்லையோ சத்தியத்தை மட்டுமே எழுதுவேன் என்று தீர்மானித்து அதைக் கடைசிவரை எழுதி வந்தார். Studies in Scripture என்ற அந்தப் பத்திரிகையைத் தொடர்ந்து வெளியிட பல வேளைகளில் பணத்துக்காக அவர் கஷ்டப்பட வேண்டியிருந்தது. வாசகர்கள் அனுப்பும் பணத்தை வைத்து அதை நடத்தி வந்தார். எந்தவிதத்திலும் பத்திரிகை பிரபலமாக வேண்டும் என்று சத்தியத்தை மாற்றிக்கொள்ள அவர் நினைத்ததேயில்லை. அத்தகைய ஆலோசனைகளை நிச்சயமாக அவருக்கு பலர் தந்திருந்திருப்பார்கள். வேத வசனங்களை ஆராய்ந்து, ஆராய்ந்து அதிலுள்ள மாணிக்கங்களையெல்லாம் ஒவ்வொன்றாக எடுத்து வாசிக்கிறவர்கள் கண்கள் திறக்க வேண்டும் என்ற பாரத்துடன் அவர்கள் முன் பத்திரிகை வாயிலாக வழங்கி வந்தார் பிங்க். அவருடைய வாழ்நாளில் அது பல்லாயிரக்கணக்கான வாசகர்களைக் கொண்டிருந்திராவிட்டாலும் இன்று அவை தொடர்ந்து அச்சிலிருந்து உலகின் பல பாகங்களில் கிறிஸ்தவர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதை எதற்குச் சொல்லுகிறேன் என்றால் அருமைப் போதகர் பிங்கைப் போல சத்தியத்தை சத்தியமாக விளக்குவதற்காக மட்டுமே திருமறைத்தீபமும் இருந்து வருகின்றது. அதனால்தான் அதை வழமையாக வரும் பத்திரிகைகள் போல் விளம்பரங்கள் இல்லாமல், பணத்தேவை பற்றி எழுதாமல், படங்களைப் போட்டு நிரப்பாமல் தற்காலத்துக்கு தேவையானதும், அவசியமானதுமான ஆத்மீகப் போதனைகள் எவை என்பதை ஜெபத்தோடு சிந்தித்துத் தீர்மானித்து எழுதி வெளியிட்டு வருகின்றோம்.

1995ம் ஆண்டு ஆரம்பமான பத்திரிகையில் பெரிய விஷயம் என்னவென்றால், கடந்த பத்தொன்பது வருட காலப்பகுதியில் அநேகரை அது எனக்கு அறிமுகப்படுத்தி வைத்திருக்கின்றது. இத்தனை வருடப் பத்திரிகை ஊழியப் பயணத்தில் கடிதத் தொடர்பு மூலம் அறிமுகமானவர்கள், நான் நேரில் சந்தித்தவர்கள், என்னை சிந்திக்க வைத்தவர்கள், பத்திரிகையினால் பயனடைந்து வளர்ந்து வருகின்றவர்கள், அதனால் ஆத்மீகப் புத்துயிரடைந்தவர்கள், காலத்துக்கும் மறக்க முடியாத நல்ல நண்பர்கள் என்று பலதரப்பட்டவர்களை பத்திரிகை எனக்கு அறிமுகப்படுத்தி வைத்திருக்கின்றது. இதற்காக நான் தனிப்பட்ட விதத்தில் கர்த்தருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முக்கியமாக, பத்திரிகை அறிமுகப்படுத்தி வைத்திருக்கும் சில நல்ல நண்பர்களை வேறுவகையில் நான் தெரிந்துகொண்டிருக்க வழியில்லை. திருமறைத்தீபம் எங்களை இணைத்திருக்கிறது. அதில் வெளிவரும் சத்தியங்கள் எங்களை இனங்கண்டுகொள்ளவும், ஐக்கியத்தை அனுபவிக்கவும் வழியேற்படுத்தித் தந்திருக்கிறது. அந்த நண்பர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களை சங்கடப்படுத்த நான் விரும்பவில்லை. அவர்களில் நன்றாகப் படித்தவர்களும், நல்ல போதகர்களும், நல்ல உழைப்பாளிகளும், கிராமத்து விவசாயிகளும், குடும்பஸ்தர்களும், வளர்ந்து வரும் வாலிப உள்ளங்களும், தமிழார்வம் கொண்டவர்களும் இருக்கிறார்கள். பயணங்களின்போது

இவர்களோடு பேசவும், பழகவும், ஆத்மார்த்தமான நட்பை அனுபவிக்கவும் பத்திரிகை வழியேற்படுத்தித் தந்திருக்கிறது. இந்த அனுபவத்தை நான் வேறு எதையும்விட வாழ்க்கையில் பெரிதாகக் கருதுகிறேன். இவர்களுக்கெல்லாம் வெகுதூரத்தில் இருப்பது மட்டுமே எனக்குப் பெருங்குறையாகத் தெரிகிறது. ஒருவரோடொருவர் நட்போடிருப்பதற்கு புணர்ச்சியும், பழகுதலும் அவசியம் இல்லை, ஒத்த உணர்ச்சிதான் முக்கியம் என்பதை 'புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும்' என்ற குறள் விளக்குகிறது. இந்த நண்பர்களோடு எனக்கிருக்கும் இந்த ஒத்த உணர்ச்சி எனக்குப் பெரிது. இதற்கெல்லாம் நான் அருகதையுடையவனா என்பது எனக்குத் தெரியவில்லை.

இந்தப் பத்திரிகை ஊழியம் தனிப்பட்ட விதத்தில் எனக்குப் பல உண்மைகளில் தெளிவேற்படுத்தியிருக்கிறது. நம்மினத்துக் கிறிஸ்தவத்தின் நிலை பற்றித் தெளிவானதொரு கண்ணோட்டத்தைக் கொண்டிருக்க உதவியிருக்கிறது. அது பாரத்தோடு அவசியமான, ஆவிக்குரிய விஷயங்களை எழுதவும், மொழிபெயர்த்து வெளியிடவும் துணை செய்கிறது.

மொழியின் அருமையையும், அவசியத்தையும் இது எனக்குக் கற்றுத் தந்திருக்கிறது. நம் மொழிதானே என்று அக்கறையில்லாது எதையும் எழுதிவிடாமல் மொழிக்கு மதிப்புத் தந்து சிந்தித்து எழுதவும், அதில் என்னை வளர்த்துக்கொள்ளவும் பத்திரிகை பெரிதும் உதவி வருகிறது. இதை நான் பெரிய ஆசீர்வாதமாகக் கருதுகிறேன். இதை எழுதுகிற வேளையில் ஒரு நூலுக்கு எதிர்வினையும் எழுதிக் கொண்டிருக்கிறேன். அந்த எதிர்வினைக்காக அந்த நூலைத்தவிர நான் வாசிக்க வேண்டிய வேறு சில விஷயங்களும் இருந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்து பணிபுரிந்த ஜி.யு. போப், கால்டுவெல் போன்றவர்களைப் பற்றி வாசிக்க நேர்ந்தது. அவர்கள் வெளிநாட்டவர்கள், நம்மொழி அறியாதவர்கள். இருவருமே தமிழைக் கற்று தமிழுக்கு அர்ப்பணிப்போடு பணியாற்றியிருக்கிறார்கள். அவர்களுடைய தமிழார்வமும், தமிழ் வளர்ச்சிக்கு செய்திருக்கும் பணிகளும் என்னை மலைக்க வைத்தன. சொந்த மொழியல்லாத இன்னொரு மொழியில் அதுவும் உலகத்திலேயே மிகவும் கஷ்டமான மொழிகளில் இரண்டாவது என்று சொல்லக்கூடிய இடத்தைப் பெற்றிருக்கும் தமிழைக் கற்று அதில் பாண்டித்தியம் அடைந்தது மட்டுமல்லாமல், அதை விருத்தி செய்வதிலும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த இவர்களுடைய பணி என்னை பிரமிக்க வைத்தது. தமிழோடு பிறந்திருக்கின்ற நாம் அதை அசட்டை செய்து வாழக்கூடாது என்பதை இவர்கள் கற்றுத் தருகிறார்கள்.

வாசிப்பது எனக்கு எப்போதுமே வழக்கமாக இருந்திருக்கிறது. வாசிப்பை நான் வலியுறுத்தாத நாட்களே இல்லை. நண்பர்களிடம் பேசும்போதெல்லாம், சபையாருக்கு போதனை அளிக்கும்போதெல்லாம் வாசிப்பின் அவசியத்தை அடிக்கடி விளக்கியிருக்கிறேன். திருமறைத்தீபம் என்னை அதிகம் வாசிக்க வைத்திருக்கிறது என்று சொல்லுவது மிகைப்படுத்தலல்ல. இருந்தபோதும் அதுகூட குறைவானது என்றுதான்

நான் நினைக்கிறேன். இன்னும் அதிகம் வாசிக்க வேண்டும் என்ற வாஞ்சை இருக்கிறது.

தமிழ் கிறிஸ்தவர்கள் வாசிப்பில் அக்கறை செலுத்துவதில்லை என்பது என்னைத் தொடர்ந்து வருந்த வைக்கின்றது. நான் சந்திக்கின்ற, என்னோடு பேசுகின்ற அநேகர் தாங்களாகவே முன்வந்து அதைத் தாழ்மையோடு ஒத்துக்கொள்கிறார்கள். அறிவுப்பூர்வமாக எதையும் அலசி ஆராய்ந்து நுணுக்கத்தோடு பேசுமளவுக்கு நம்மவர்கள் தங்களை வளர்த்துக்கொள்ளாமல் இருப்பதற்குக் காரணம் வாசிப்பின்மையே. வாசிப்பை ஊக்கப்படுத்தி சபையாரை வாசிக்க வைக்கின்ற திருச்சபைகளையும் விரல்விட்டு எண்ணிவிடலாம். எதற்கெல்லாமோ பணத்தை விரயம் செய்கிறவர்கள் பணம்கொடுத்து ஒரு நல்ல நூலை வாங்கி நேரத்தைக் கொடுத்து வாசிக்கத் தயக்கம் காட்டுகிறார்கள். வயிற்றுக்கு குறைவைக்காமல் இருக்கத் தெரிகின்ற நமக்கு அறிவுக்கு வஞ்சனை செய்கிறோம் என்ற உணர்வில்லாமல் இருக்கின்றது. வயிறாவது வலித்து தன் தேவையைத் தெரிவிக்கும்; அறிவு என்ன செய்யும் பாவம்!

என்னை ஆச்சரியப்பட வைத்த ஒரு சம்பவத்தை இங்கே சொல்லாமல் இருக்க முடியாது. நாம் வெளியிட்டுள்ள நூல்களில் நூறு நூல்களை வாங்கி எதிர்காலத்தில் அந்த நூல்கள் மறுபதிப்பாக வெளிவராமல் போனால் தேவைப்படுமே என்று தனியே அவற்றை விற்பனைக்கில்லை என்று ஒதுக்கி சேமித்து வைத்திருப்பதாக ஒரு சபைப் போதகர் என்னிடம் சொன்னார். இந்தளவுக்கு நல்ல நூல்களில் அக்கறை காட்டுகிறவர்களை நான் கண்டதுமில்லை; கேள்விப்பட்டதுமில்லை. இது விடியல்வேளை சூரியக் கதிர்களைப்போல நம்மவர்களின் எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையை எனக்குள் அதிகரிக்கச் செய்கின்றது.

தன்னைப்பற்றி அதிகமாக நாம் அறிந்துகொள்ளவும், அறிந்துகொண்ட உண்மைகளின் அடிப்படையில் தன்னோடு உறவுவைத்துக் கொள்ளவும் வாசிப்பு இன்றியமையாதது என்பதால்தான் நம் ஆண்டவர் நமக்கு வேதத்தை எழுத்தில் தந்து அதன் மூலமாக மட்டும் பேசி வருகிறார். அதில் நாம் அக்கறைகாட்டாமல் இருக்க முடியுமா? அதை ஆர்வத்தோடும், ஆழமாகவும், ஆராய்ந்தும், சிந்தித்தும் வாசிக்காவிட்டால் அவரோடு நமக்கிருக்கும் உறவும் வளர முடியாதே? திருமறைத்தீபத்தை ஆழமாக வாசித்துப் பயனடைகிறவர்கள் இருக்கிறார்கள் என்பது எனது மனக்குறையின் வலிக்கு மருந்தாக இருக்கின்றது. வாசியுங்கள் வாசகர்களே, வாசிப்பை நேசியுங்கள்! நல்ல நூல்கள் உங்களுக்கு நல்ல நண்பர்களாகட்டும். வாசிப்பு உங்களை வளர்க்கும், அதோடு உங்கள் வாசிப்பும் வளரும்.

திருமறைத்தீபம் வெளிவந்த நாளில் இருந்து பல நூல்களை வெளியிடவும் வகைசெய்து தந்திருக்கிறது. இன்றைக்கு திருச்சபை வரலாறு இரண்டு பாகங்களாக வர முடிந்திருக்கிறதென்றால் அதற்கு திருமறைத்தீபம் முக்கிய காரணம். இன்னும் இரண்டு பாகங்கள் வரவிருக்கின்றன. பத்திரிகையில் வெளிவந்திருக்கும் பல ஆக்கங்களை நூல்வடிவில் கொண்டு வரும் திட்டம் இருக்கின்றது.

எழுபத்தைந்தாவது இதழ் இது, என்று என் உடனூழியர் எனக்கு நினைவுபடுத்தியபோதுதான் இத்தனைத் தொலைவு கடந்து வந்திருக்கிறோம் என்பதை நான் உணர்ந்தேன். முன்னோக்கிப் போவதற்கு வழி ஒரு முறை பின்னோக்கியும் பார்ப்பதுதான். அதைத்தான் இதில் செய்திருக்கிறேன். பத்திரிகை ஊழியத்தின் இத்தனை காலப்பகுதியில் எத்தனையோ காரியங்கள் நடந்திருக்கின்றன. தந்தை தன் ஊழிய காலத்தில் வாசித்து அவர் மறைந்தபின் மகன் அதில் ஆர்வம் காட்டித் தொடர்ந்து வாசித்து ஊழியப்பணி செய்யுமளவுக்கு இரண்டு தலைமுறைக்கு அதை வாசித்து வருகிறவர்கள் இருக்கிறார்கள். திருமறைத்தீபத்தை வாசிக்கக்கூடாது என்று சொன்னவர்கள் உண்டு; ஆர்வத்தோடும், வாஞ்சையோடும் தொடர்ந்து வாசிப்பவர்கள் அநேகர்; புதிது புதிதாக பத்திரிகையை எழுதிக் கேட்கின்ற வாசகர்களையும் கண்டு வருகிறேன்.

வெறும் சரீர உணர்ச்சிக்கும், காட்சிக்கும், வாழ்க்கையில் செழிப்புக்கும் மட்டும் முக்கியத்துவம் கொடுத்து சிந்தனைக்குப் பூட்டுப்போட்டு வைத்திருக்கும், பரவலாக இன்று எங்கும் காணப்படும் ஒருவகை மாயக் 'கிறிஸ்தவத்திற்கு' வாழ்க்கையில் இடங்கொடுக்காது, வேத சத்தியங்களை ஆராய்ந்து கற்று கர்த்தரின் வழிகளை மட்டும் பின்பற்றி வாழவேண்டும் என்ற உணர்வுள்ளவர்கள் சிறு கூட்டமாக இங்கும் அங்குமாகப் பெருகி வர, அவர்கள் மத்தியில் இருந்து அவர்களுக்கு திருமறைத்தீபம் துணை போய்க்கொண்டிருக்கிறது என்பதறிந்து கர்த்தருக்கு நானும் என்னைச் சேர்ந்தவர்களும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். எங்களை ஜெபத்தில் நினைவுகூர மறவாதீர்கள். நன்றி!

# கவிதை

## தடம் மாறா தண்டவாளங்கள்


பிரியாமலும் இணையாமலும்
இடைவெளி இறுகாமலும்
எதிரிகளைப் போல் தெரிந்தாலும்
நண்பர்களாய் நடைபோட்டு
தடம் மாறாமலும்
குழப்பத்திற்கிடமில்லாமலும்
தடதட வென்றோடும் இரயில்
தண்டவாளங்களைப் போல்
சீராய் சமநிலையில்
நெருங்காமல் நீண்டோடும்
ஆத்மீக சத்தியங்கள்தான்
இறையாண்மையும் மனிதனின் பொறுப்பும்


— சுபி

# அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்

சமீபத்தில் நான் Breaking India என்ற நூலை ஆங்கிலத்தில் வாங்கி வாசிக்க ஆரம்பித்தேன். அது தமிழிலும் ‘உடையும் இந்தியா?’ என்ற தலைப்பில் கிழக்குப் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டிருக்கிறது. தமிழ் நூலை நான் முதலில் வாங்கியபோதும் அது ஆங்கில மொழிபெயர்ப்பு வாடை அடிக்க ஆரம்பித்ததால் ஆங்கில நூலை ஐபேட்டில் இறக்கி வாசித்தேன். இதை எழுதியிருப்பவர்கள் ராஜீவ் மல்கோத்திராவும், அரவிந்தன் நீலகண்டனும். ராஜீவ் மல்கோத்திரா ஓர் இந்திய அமெரிக்கர். அமெரிக்காவில் பென்சில்வேனியா மாநிலத்தில் பிரின்ஸ்டன் என்ற நகரில் அழகான வீட்டில் வசதியோடு வாழ்ந்து வருகிறார். அவர் பெரும் பணக்காரர். ‘இன்பினிடி’ என்ற பெயரில் ஒரு பவுன்டேஷனை அமைத்து அதன் மூலம் இந்திய விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆய்வுகள் செய்து நூல்களை வெளியிட்டு வருகிறார்.

இந்த நூலைப் பற்றி முதலில் கருத்துத் தெரிவிக்கலாமா, கூடாதா என்ற சிந்தனை எனக்கிருந்தது. கருத்துத் தெரிவிப்பதால் என்ன பயன் கிட்டும் என்று நான் சிந்திக்காமலில்லை. இதைப் பற்றி ஒன்றுமே சொல்லாமல் விட்டிருக்க முடியும். கிறிஸ்தவர்கள் என்ற முறையில் நாம் உலகம் தெரியாமல் இருந்துவிடக் கூடாது. இது நம்மைப் பற்றி எழுதப்பட்டிருக்கின்ற நூல், அதுவும் இந்துத்துவ கண்ணோட்டத்தில் ஒருவித காழ்ப்புணர்ச்சியோடு எழுதப்பட்டிருக்கின்ற நூல். அந்த வெறுப்புக்கும், கோபத்துக்கும், கிறிஸ்தவம் இவர்களுக்குப் பிடிக்காமல் போவதற்கும் என்ன காரணம் என்பதை நாம் தெரிந்துகொள்ளாமல் இருப்பது தவறு. நம்மில் தவறு இருந்தால் அதை ஏற்றுக்கொள்ளுவதும், நம்மைத் திருத்திக்



கொள்ளுவதுந்தான் கிறிஸ்தவர்களுக்கு அழகு. அதனால்தான் உங்களுக்கும் பயன்படட்டும் என்று இதை எழுதவும், வெளியிடவும் தீர்மானித்தேன்.

நூலின் கண்டுபிடிப்பே நூலுக்குத் தலைப்பாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களுடைய கண்ணோட்டத்தில் இந்தியாவை உடைக்கும் முயற்சியில் சில சக்திகள் ஈடுபட்டிருக்கின்றனவாம். அப்படியான மூன்று சக்திகளை அவர்கள் நூலில் அடையாளப்படுத்துகிறார்கள். (1) பாகிஸ்தானை அடிப்படையாகக் கொண்ட இஸ்லாமிய அடிப்படைவாதம், (2) சீன மாவோயிஸ்டுகள் நக்ஸலைட்டுகளாக இந்தியாவில் செய்து வருகின்ற யுத்தம், (3) மனித உரிமைக்குரல், கிறிஸ்தவ மதமாற்றம் என்ற போர்வையில் அமெரிக்காவும் அதைப்போன்றோரும் இந்தியாவில் முக்கியமாக தென்பகுதியில் ஆரிய, திராவிட இனப்பிரிவினை மூலம் செய்து வரும் செயல்கள். இதில் மூன்றாவதற்கே முக்கிய இடத்தைக் கொடுத்து நூல் ஆராய்கிறது.

இந்த நூலில் பத்தொன்பது அதிகாரங்களும், எழுபது பக்கங்களில் ஆய்வுக்குத் துணை செய்த ஆதாரக்குறிப்புகளும் உள்ளன. நூல் 760 பக்கங்களைக் கொண்டது. நூலாசிரியர்கள் ஐந்து வருடங்கள் ஆய்வு செய்து தங்களுடைய கண்டுபிடிப்புகளை நூலாக வெளியிட்டுள்ளனர். 2011ல் நூல் வெளியிடப்பட்டு இதுவரை மூன்று பதிப்புகள் போயிருக்கின்றனவாம். இது சாதாரண வாசகனுக்காக எழுதப்பட்ட நூலல்ல. இதை முக்கியமாக படித்தவர்கள், புத்திஜீவிகள், சிந்தனாவாதிகள், தொழிலதிபர்கள், மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள், அரசு ஊழியர்கள் மத்தியில் பிரபலப்படுத்துவதை நூலாசிரியர்கள் நோக்கமாகக் கொண்டிருப்பதை நூல் வெளியீட்டு விழாக்களிலேயே அறிவித்திருக்கிறார்கள்.

நூலாசிரியர்கள் முன்வைக்கின்ற கருத்தான, அமெரிக்கா இந்தியாவை உடைக்கும் முயற்சியில் மறைமுகமாக ஈடுபட்டு வருகின்றது என்பதை எத்தனையோ காரணங்களை வைத்து இவர்கள் நிலைநிறுத்தப் பார்த்தாலும் அதை நிரூபிக்கும் வகையில் ஆதாரங்கள் இல்லை. ஒரு ஊகத்தில் ஆரம்பித்து ஒன்றுக்கொன்று தொடர்புள்ளதுபோல் தோற்றமளிக்கும் சில விஷயங்களை ஒன்றிணைத்து அந்த ஊகத்தை நிலைநிறுத்தப் பார்க்கும்போது அது சரியானது போல கண்களுக்குத் தெரிவதில் ஆச்சரியமில்லை. அதை நம்புவதற்காகவும் அத்தகைய பார்வைகொண்ட அநேகர் இருப்பார்கள். அத்தகையவர்களுக்கு நூல் மகிழ்வைத் தரலாம். இதுவரையில் நூலுக்கு சார்பானவர்களும் எதிரானவர்களும் இருந்து வருகிறார்கள். கிறிஸ்தவர்களல்லாத எல்லோருமே நூலாசிரியர்களின் கருத்தைக் கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ளவில்லை. அதுவரை சிந்திக்கிறவர்கள் இருப்பது நல்ல செய்தி. நிச்சயம் நூல் பல விஷயங்களைப் பற்றிச் சிந்திக்கத் தூண்டுகிறது.

முக்கியமாக இந்நூல் இந்துத்துவாக்களுக்கு களிப்பூட்டும். அவர்களுடைய கொள்கைகளுக்கு ஒத்துப்போகும் விஷயங்களே நூலில் இருக்கின்றன. இந்த நூல் வெளியீட்டு விழாக்களில் அவர்களும், சுப்பிரமணிய சாமி, சோ போன்றோரும் தான் முக்கிய இடம்பெற்று உரை

நிகழ்த்தி வருகிறார்கள். ஆரிய இனம், திராவிட இனமென்ற பிரிவுகள் இருப்பதான கருத்து இன்று நேற்றில்லாமல் இருந்துவருகிறது. இதை நூல் உடைக்கப்பார்க்கிறது. இந்தப் பிரிவினைகளை ஏற்படுத்தியவர்கள் கால்டுவெல், மாக்ஸ்முல்லர் போன்ற மேல் நாட்டவர் என்றும் திராவிட இனம் என்று ஒன்று இருக்கவில்லை என்றும் ஆசிரியர்கள் வாதிடுகிறார்கள். 'ஆரிய' என்று இந்தியாவில் வித்தியாசமான கருத்தோடு பயன்படுத்தப்பட்டு வந்த ஒரு பதத்தை அதன் பொருளை மாற்றி ஓரினத்துக்குரியதாக அரசியல் நோக்கங்களுடன் மேற்கத்தியர்கள் மாற்றினார்களாம். அதுவும் இந்த மேற்கத்தியர்கள் அனைவரையும் கிறிஸ்தவர்களாக சித்தரித்து இவர்கள் இந்தியாவை கிறிஸ்துமயமாக்கப் பார்க்கிறார்கள் என்ற நூலாசிரியர்களின் முடிவுதான் பெருஞ்சிரிப்பூட்டுவதாகவும் அதேநேரம் இந்நூலுக்கு எதிர்வினையளிப்பதையும் தவிர்க்க முடியாததாக ஆக்குகிறது.

இந்த நூல் திராவிட இயக்கத்துக்கு கொஞ்சமும் பிடிக்காமல் போகும். இதை இந்துப் பிராமண ஆதிக்க வர்க்கத்தின் எண்ணப் பிரதிபலிப்பாகத்தான் அவர்கள் நிச்சயம் கருதுவார்கள். தென்னாட்டில் பிராமண ஆதிக்கத்தை மறுபடியும் உருவாக்க முயற்சிக்கும் சிலருடைய செயல்களில் ஒன்றாகவே இது கருதப்படும். அவர்கள் அப்படி நினைப்பதற்கு ஏதுவான அநேக விஷயங்கள் நூலில் இருக்கின்றன.

இந்நூலில் எழுப்பப்பட்டுள்ள இஸ்லாமிய தீவிரவாதம், மற்றும் மவோயிஸ்டு தாக்குதல்கள் பற்றியெல்லாம் கருத்துச் சொல்லி அரசியலில் நுழைய நான் விரும்பவில்லை. அதைவிட்டுவிட்டு கிறிஸ்தவம் சம்பந்தமான விஷயங்களுக்கு மட்டுமே எதிர்வினையளிக்க விரும்புகிறேன். ஒன்றை மட்டும் ஆரம்பத்திலேயே சொல்லிவிட வேண்டும். மெய்கிறிஸ்தவம் அரசியலிலெல்லாம் அநாவசிய அக்கறை காட்டாது. கிறிஸ்தவத்தோடு அரசியலை நுழைத்துக் கருத்துத் தெரிவித்திருப்பதே இந்நூலின் பெருந் தவறு. கிறிஸ்தவம் இந்தியாவை உடைக்க அமெரிக்காவை நாடி நிற்கிறது, மற்ற அமைப்புகளோடு சேர்ந்து இதற்காகப் பாடுபடுகிறது என்ற கண்மூடித்தனமான கருத்துக்களெல்லாம் கிறிஸ்தவத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாமல் எழுதப்பட்டிருக்கும் வார்த்தைகள். அவற்றிற்கெல்லாம் பதில் சொல்லி நேரத்தை வீணாக்கவும் நான் விரும்பவில்லை.

உண்மையில் இதுவரை கிறிஸ்தவத்தைப் பற்றிய இந்துக்களின் பார்வை எப்படிப்பட்டது என்று விளக்குகிற நூல்களை நான் வாசித்தது கிடையாது. அந்த வகையில் இது முதல் நூல். மல்கோத்திரா, நீலகண்டன் போன்றோரின் பார்வையில் எப்படி கிறிஸ்தவம் தெரிகிறது என்பதையும் அவர்கள் முன்வைக்கும் கருத்துக்களையும் அறிந்துகொள்ள நூல் உதவியது. அந்தக் கருத்துக்களில் அடிப்படையிலேயே உண்மையில்லாமலிருப்பதே நூலை நான் விமர்சித்து எழுதக் காரணம்.

'அரண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்பார்கள். நூலாசிரியர்கள் என்னதான் எழுதி தங்கள் கருத்துக்களை மற்றவர்களை நம்பவைக்க முயற்சி செய்தாலும் அப்படித்தான் எனக்குப் படுகிறது.

*சந்தர்ப்ப சூழ்நிலைகளை வைத்து உருவான ஊகத்தின் அடிப்படையில் நூலின் கண்டுபிடிப்புகள் இருக்கின்றன. இல்லாத ஒன்றை இருப்பதாக நம்பவைக்க இந்த நூல் முயற்சி செய்கிறது. இது கிறிஸ்தவர்களுக்கு அதிர்ச்சி தருகின்ற நூல். அது என் கருத்து. மற்றவர்களுக்கு அப்படி இல்லாமல் இருக்கலாம். கிறிஸ்தவன் என்ற அடிப்படையில் இதை வாசித்தபோது என்னுடைய மனதில் பலவிதமான உணர்வுகள் ஏற்பட்டன. அதிர்ச்சி, வருத்தம், கவலை, கோபம் என்று பலவித உணர்ச்சிகள் மாறி மாறி வராமலில்லை. அவற்றிற்கான காரணத்தை விளக்கத்தானே போகிறேன்.*

## எது கிறிஸ்தவம்?

*நூலாசிரியர்களுக்கு முதலில் எது கிறிஸ்தவம் என்பது தெரியவில்லை. அது ஒரு பெரும் குறைபாடு என்றாலும் இந்துக்களான அவர்களுக்கு அது தெரிந்திருக்க வழியில்லை. கிறிஸ்தவத்தோடு தொடர்பில்லாத கத்தோலிக்க மதத்தையும், வேத அதிகாரத்துக்கு முழுக்குப் போட்டுவிட்டு தாராளவாதக் கோட்பாடுகளைப் (Liberalism) பின்பற்றும் பாரம்பரிய சபை அமைப்புகளான சி.எஸ்.ஐ, மெத்தடிஸ்டு, லூதரன் போன்றவற்றையும், அறவே கிறிஸ்தவ நம்பிக்கை இல்லாத திராவிட இயக்கத்தைச் சேர்ந்த தெய்வநாயகம், தேவகலா போன்றோரையும், பணத்தை மட்டும் குறியாகக்கொண்டு மதமாற்றத்தில் ஈடுபட்டு கிறிஸ்தவப் போர்வையில் இயங்கிவரும் நிறுவனங்களையும் ஒட்டுமொத்தமாக கிறிஸ்தவமாக அடையாளப்படுத்திக் கருத்துக்களைத் தெரிவித்திருப்பது வருத்தமளிக்கிறது. அது நூலின் ஆய்வைத் திசை திருப்பி ஆசிரியர்களின் கண்டுபிடிப்புகளைத் தவறான வெறும் ஊகங்களாக்கி விடுகிறது.*

*உதாரணத்திற்கு ஆசிரியர்கள் உலகின் இரண்டு மிக முக்கிய வரலாற்றுப்புகழ் பெற்ற கிறிஸ்தவ மிஷனரிகளை, அவர்களுடைய வாழ்க்கை, அர்ப்பணிப்போடு கூடிய அவர்களுடைய பணி ஆகியன பற்றி எதுவும் தெரியாமல் 'இந்தியா கண்ட அருவருக்கத்தக்க (nastiest) மிஷனரிகளில் ஒருவர்' என்று வில்லியம் கேரியையும், 'வன்முறை மிஷனரி' என்று தரங்கம்பாடி வந்த சீகன்பால்கையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதன் தமிழ் மொழிபெயர்ப்பில் அரவிந்தன், கேரியை 'மோசமான' மிஷனரிகளில் ஒருவர் என்று மொழிபெயர்த்திருக்கிறார். Nastiest என்ற ஆங்கிலப் பதம் 'மோசமான' என்ற வார்த்தையைவிட ஆழமான கருத்துக்கொண்டது. ஏதாவது உணவுப் பதார்த்தத்தை சாப்பிட நினைத்து வாயில் போட்டு நினைத்ததுபோலில்லாமல் இருக்கும்போது உடனே துப்பிவிடத் தோன்றுமே அந்தக் கருத்துக்கொண்டது இந்த வார்த்தை. இந்த இரண்டு கடவுளின் ஊழியர்களையும் இந்தவிதத்தில் இழிவுபடுத்தி எழுதியிருக்கும் எந்த எழுத்தையும் இதுவரை நான் வாசித்ததில்லை. இதிலிருந்தே இந்துத்துவ நோக்க அடிப்படையில் கிறிஸ்தவ விரோதப்போக்கில் கிறிஸ்தவத்தைப் பற்றி சரியாக ஒன்றும் தெரியாமல் நூல் எழுதப்பட்டிருப்பது தெரிகிறது.*

*கருணையும், அன்பும், நேர்மையும், அர்ப்பணிப்பும், தியாகமும்*

கொண்ட வாழ்க்கை வாழ்ந்து, மனைவி, பிள்ளைகளை இழந்து பிராமணர்கள் முதல் அடிமட்ட இந்தியர்கள்வரை அவர்கள் நல்வாழ்வு வாழவேண்டும் என்ற எண்ணத்தோடு உழைத்தவர் கேரி. அந்தக்காலத்து பிராமணர்களுக்கு கேரி மீது பெரும் வெறுப்பு இருந்தது உண்மைதான். ஏன் தெரியுமா? இந்தியாவில் இன்றைக்கு தடைசெய்யப்பட்டுள்ள 'உடன்கட்டை' ஏறும் வழக்கத்தையும், சாதிவேறுபாட்டையும், சமுதாயக் கேடுகளையும் கேரி வைராக்கியத்தோடு எதிர்த்ததுதான். கேரி அவற்றை மனிதாபிமானத்துடன்தான் எதிர்த்தார். அவருக்கு பிராமணர்கள் மீது துவேஷம் இருக்கவில்லை. பிராமணரான, பின்பு கிறிஸ்துவை விசுவாசித்த கிருஷ்ணபால் கேரியின் நல்ல நண்பர். அநேக பிராமணர்கள் கேரிக்கு மொழிபெயர்ப்பு வேலையில் துணை செய்திருக்கிறார்கள். இதயமுள்ள, சிந்திக்கிற எந்த இந்தியன் இன்றைய நூற்றாண்டில் 'உடன்கட்டை' ஏறும் வழக்கத்துக்காக வக்காலத்து வாங்குவான்? மொழி இலக்கணமே இல்லாதிருந்த ஆறு இந்திய மொழிகளில் இலக்கண நூல்களை முதன் முதலாக எழுதி இந்திய மொழிகளுக்கு அரும்பணி ஆற்றிய கேரியை மதவிரோதப் போக்கோடும், அரசியல் கண்ணோட்டத்தோடும் பார்த்து அசிங்கப்படுத்தி எழுதியிருப்பது தகாது.

சீகன்பால்கு கேரிக்கு முன்பு இந்தியா வந்தவர். சாதாரண குடிசை வாழ் மக்கள் பேசும் தமிழைக்கற்று, அவர்கள் மத்தியில் வாழ்ந்து, உண்டு, உறங்கி அவர்களுடைய பேச்சு மொழியிலேயே வேதத்தை மொழிபெயர்த்து அவர்களுக்காக உழைத்தவர். சாதி வேறுபாடு காட்டியவராகவும், வன்முறையாளராகவும் அவரை வர்ணித்திருப்பது உண்மைக்கு மாறானது. அவருடைய சபையில் அன்று ஒருசிலர் பெஞ்சில் உட்கார்ந்திருப்பதையும், சிலர் நிலத்தில் உட்கார்ந்திருப்பதையும் கவனித்து சாதிவேறுபாடு கொண்டவராக சீகன்பால்கைக் காட்டியிருப்பது முழுத்தவறு. பெஞ்சில் உட்கார்ந்து பழக்கமில்லாத குடிசை வாழ் மக்கள் நிலத்தில் முழங்கால்களை மடக்கி உட்கார்ந்தால்தான் எங்களுக்கு உட்கார்ந்ததுபோல் இருக்கும் என்றால் அவர்களைக் கட்டித் தூக்கியா பெஞ்சில் உட்கார வைக்க முடியும்? சீகன்பால்க் இந்தவிஷயத்தில் நடைமுறைக்குத் தகுந்தவாறு நடந்திருக்கக் கூடும். நிச்சயமாக அவர் சாதிவேறுபாடு காட்டியவரல்ல.

ஜி.யு. போப்பும் சாதிவேறுபாடு காட்டியவரல்ல. அவர் தரங்கம் பாடியிலிருந்த லூத்தரன் மிஷனரிகளுக்கு எழுதிய நீண்ட ஆங்கிலக் கடிதத்தை இணையத்தில் வாசிக்கலாம். அதில் அவர் சாதிவேறுபாடு காட்டுவதை எந்தளவுக்கு வெறுத்தார் என்பதையும், அப்படி சாதிவேறுபாடு காட்டுபவர்களுக்கு சபையில் திருவிருந்து தருவதையும் நிறுத்திவிடுவதோடு, சபைக் கட்டுப்பாடும் கொண்டுவரும் விதத்தில் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருந்தவர் என்பதையும் அறிந்துகொள்ளுகிறோம். அதன் காரணமாக அவருக்கு எதிர்ப்பு ஏற்பட்டது உண்மைதான். தன் சபையில் மெய்க்கிறிஸ்தவர்கள் மட்டும் இருக்கும்படியாகப் பார்த்துக் கொள்ளுவதற்கு அவர் எடுத்த நடவடிக்கை சரிதான். உண்மைக் கிறிஸ்தவர்கள் சாதிவேறுபாடு காட்டமாட்டார்கள். சாதியத்தை

நம்புகிறவன் கிறிஸ்தவனாகவே இருக்க முடியாது. அந்த வியாதியில் இருந்துதான் இயேசு நமக்கு பூரண விடுதலை தந்துவிட்டாரே. ஜி.யு. போப்பை உண்மைக்கு மாறாக மோசமானவராக நூலாசிரியர்கள் சித்தரித்திருப்பது தவறு.

அத்தோடு பதினாறாம் நூற்றாண்டின் தலைசிறந்த சீர்திருத்தவாதியான மார்டின் லூத்தரையும் நூலாசிரியர்கள் விட்டுவைக்கவில்லை. அவர் யூதர்களை அடியோடு வெறுத்தார் என்று யாரோ சொன்னதை வைத்து இனத்துவேஷம் கொண்டவர் போல் அவரைக் குறைகூறி எழுதியிருக்கின்றனர். ஒரு பெரும் கிறிஸ்தவ தலைவரை இனவேறுபாடு காட்டியவர் என்று அவதூறாக எழுதுவது நியாயமானதல்ல. லூத்தரைப் பற்றி இந்த நூலாசிரியர்களுக்கு என்ன தெரியும்?

இந்துக்கள் பார்வையில் கிறிஸ்தவம் என்ற பெயர் கொண்டதெல்லாம் கிறிஸ்தவமாகத்தான் படும். அது எனக்குப் புரிகிறது. இருந்தாலும் நூலாசிரியர்கள் கிறிஸ்தவம் அதுவல்ல என்பதைத் தெரிந்துகொள்வது நல்லது. இதை நமக்காகவுந்தான் சொல்லுகிறேன். கத்தோலிக்க மதத்துக்கும் கிறிஸ்தவத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இந்தியாவில் கத்தோலிக்கர்கள் தங்களைக் கிறிஸ்தவர்களாக அழைத்துக்கொள்கிறார்கள். ஆனால் அது முழுத் தவறு. கிறிஸ்தவ வேதத்தை அவர்கள் நம்பிப் பின்பற்றுவதில்லை. பிராமணர்களைப்போல உடைதரித்து, பூணூல் அணிந்து வாழ்ந்து மதுரையில் மதமாற்றத்தில் ஈடுபட்ட டீ நொபிளி ஒரு முழுக் கத்தோலிக்கர். அவருக்கும் கிறிஸ்தவத்திற்கும் எந்த சம்பந்தமுமில்லை. கத்தோலிக்க மதம் கிறிஸ்தவ வேதத்தையும் அதன் போதனைகளையும் நிராகரிக்கும் ஒரு மதம் மட்டுமே. அது வழிபட்டு வரும் மேரியைக் கிறிஸ்தவம் தெய்வீகம் கொண்ட கடவுளாகப் பார்க்கவில்லை. கத்தோலிக்க மதத்திற்கும் கிறிஸ்தவத்திற்கும் அடிப்படையிலேயே இணைய முடியாத வேறுபாடு இருக்கிறது.

ஒரு மெய்க்கிறிஸ்தவ மிஷனரி டீ நொபிளி செய்ததைத் தன் வாழ்நாளில் செய்யமாட்டார். கிறிஸ்தவர்களான கேரியும் அவருக்கு முன்பு வந்த சீகன்பால்குவும், கேரிக்குப் பின்வந்தவருமான ஹென்றி மார்டினும் டீ நொபிளியின் மதமாற்ற முறைகளை ஒருபோதும் பின்பற்ற வில்லை. கிறிஸ்தவத்திற்கு இந்தப் போலிச்செய்கைகளிலெல்லாம் நம்பிக்கையில்லை. அது கிறிஸ்துவின் அன்பையும் அவர் மட்டுமே தரக்கூடிய இலவசமான நித்திய வாழ்க்கையையும் கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு அறிவிப்பதை மட்டுமே கடமையாகக் கொண்டிருக்கிறது. இந்நூலில் கத்தோலிக்கர்கள் செய்துவரும் கண்கூடான மதமாற்ற முயற்சிகள், அவர்களுடைய அநாதை இல்லங்களில் நடைபெற்று வருகின்ற தற்கொலைகள், பிஷப்புக்களின் கேவலமான செயல்களுக்கெல்லாம் நான் விளக்கமளிக்க வேண்டிய அவசியமில்லை. கத்தோலிக்க மதத்திற்கும் கிறிஸ்தவத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லாதபோது நூலாசிரியர்கள் அதைக் கிறிஸ்தவமாகக் கருதி எழுதி கிறிஸ்தவத்தைக் குறைகூறியிருப்பது முழுத் தவறு.

தாராளவாத கோட்பாடுகளைப் பின்பற்றும் World Council of Churches, அரசரடி இறையியல் கல்லூரி, லூதரன் குருக்குல் அமைப்பு போன்றவை கிறிஸ்தவ வேதத்தின் அதிகாரத்தை எப்போதோ நிராகரித்து லிபரலிசம், ஹியூமனிசம், புளூரலிசம் போன்ற கோட்பாடுகளை நம்ப ஆரம்பித்து அவற்றின் வழியில் போய்க்கொண்டிருப்பதால் அத்தகைய அமைப்புகளையும் மெய்க்கிறிஸ்தவ அமைப்புகளாகக் கருத முடியாது. இயற்கையைத் தாயாக வணங்கி மரத்தையும், செடியையும் கட்டி அழுதுகொண்டிருப்பது மெய்க்கிறிஸ்தவமல்ல. அத்தோடு 'தலித் கிறிஸ்தவம்' என்று பிரித்து அவர்களுக்கென ஒரு கிறிஸ்தவத்தை உருவாக்குவதும் கிறிஸ்தவ வேதபோதனைகளுக்கு அடிப்படையிலேயே முரணானது. இன அடிப்படையில் கிறிஸ்தவர்களைப் பிரித்து எந்த இனத்துக்கும் சலுகை காட்டுவதை கிறிஸ்தவ வேதம் அனுமதிக்கவில்லை. கிறிஸ்தவம் இனங்களை ஒன்று சேர்ப்பது; எல்லா இனத்தையும் ஓரினமாகப் பார்ப்பது. கிறிஸ்தவப் போர்வையில் இருக்கும் ஓநாய்களான சில கிறிஸ்தவப் பிரிவுகளும், அமைப்புகளும் சாதி அடிப்படையில் தமிழகத்தில் சபை அமைத்து வந்திருக்கின்றன. அது நமக்குத் தெரியும். அவைகளுக்கும் கிறிஸ்தவத்திற்கும் எந்த உறவும் இல்லை என்பதை அவர்களுடைய செயல்களே காட்டுகின்றன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. குருக்குல் லூதரன் அமைப்பு தலித் அரசியல் தலைவரான திருமாவளவனுக்கு இறையியல் முனைவர் (டாக்டர்) கௌரவப்பட்டம் கொடுத்திருப்பதில் இருந்தே அவர்களுடைய 'கிறிஸ்தவம்' எத்தகைய கிறிஸ்தவம் என்பதை இனங்காட்டி விடுகிறார்கள். இதையெல்லாம் அறிந்திராத நூலாசிரியர்கள் கிறிஸ்தவம் என்ற பெயரில் இருக்கும் அத்தனை அமைப்புகளையும் இணைத்துக் கிறிஸ்தவமாகப் பார்த்துக் கருத்துத் தெரிவிப்பது என்னைப் போன்ற வேத நம்பிக்கையுள்ள கிறிஸ்தவர்களுக்கு உடன்பாடில்லாதது மட்டுமல்ல; வருத்தத்தையும் தருகிறது. இந்துக்களான இவர்கள் இப்படி நினைப்பதற்கு கிறிஸ்தவ போலிவேடதாரிகள் இடமேற்படுத்தி விடுகிறார்கள்.

## திராவிட கிறிஸ்தவம்

தெய்வநாயகத்துக்கும், அவரது மகள் தேவகலாவுக்கும் நூலில் அதிகமாக இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் இருவரும் தமிழகத்து பாரம்பரிய சி.எஸ்.ஐ திருச்சபையை ஆரம்பத்தில் சேர்ந்திருந்தவர்கள். அந்தத் திருச்சபை வேத நம்பிக்கைகளைத் துறந்துவிட்டு தாராளவாத கோட்பாடுகளைப் பின்பற்றுகிற அமைப்பாக என்றோ மாறிவிட்டது. தெய்வநாயகத்துக்கு கிறிஸ்தவத்தில் பெரிய ஈடுபாடு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. சீ.எஸ்.ஐயோடு தன்னை தொடர்புபடுத்தி அவர் எந்தக் கிறிஸ்தவ பணியிலும் ஈடுபட்டிருக்கவில்லை. நூலில் தெய்வநாயகம் 'தீவிர கிறிஸ்தவராக' சித்தரிக்கப்பட்டிருப்பதே சிரிப்புக்கிடமானது. அவர் கிறிஸ்தவ வேத விளக்கங்கொடுத்தோ, கிறிஸ்துவை மகிமைப் படுத்தியோ எதையும் எழுதவில்லை. அவரை நூலாசிரியர்கள் ஓர் இவெஞ்சலிஸ்டாக வர்ணித்திருப்பதில் இருந்தே நூலாசிரியர்களுக்கு அவரைப்பற்றியோ இவெஞ்சலிக்கள் கிறிஸ்தவத்தைப் பற்றியோ எதுவும்

தெரியவில்லை என்றுதான் அர்த்தம். இருந்தபோதும் நூலாசிரியர்கள் வெளிப்படுத்தியிருப்பதுபோல் தெய்வநாயகமும் அவருடைய மகளும் சமூக, அரசியல் காரணங்களுக்காக இந்து மதத்தை வெறுத்து அதிலிருந்து திராவிட இனத்தைப் பிரித்து, திராவிட மக்கள் ஆரிய இந்துக் கலப்பில்லாத தமிழ் மதமொன்றை பின்பற்றித் தென்னிந்தியாவில் வாழ்ந்திருந்தார்கள் என்ற கருத்தை முன்வைக்கிறார்கள். இதை அவர்கள் முதன் முதலாக கண்டுபிடிக்கவில்லை. இதுபோல் வேறுபலரும் இவர்களுக்கு முன்பே கருத்துத் தெரிவித்திருந்தாலும் தெய்வநாயகமும், அவருடைய மகளுமே இதை அமெரிக்காவரை கொண்டுபோய் பிரபலப்படுத்தினார்கள். இந்த 'திராவிட தமிழ் சமயக்' கட்டுக்கதையில் கிறிஸ்தவத்தை நுழைத்ததுதான் தெய்வநாயகத்தின் பெருந்தவறு. தன்னுடைய திராவிடத் தமிழ் சமயப் பிரச்சாரத்தைத் தூக்கி நிறுத்த இவர் கிறிஸ்தவத்தைத் தூணாகப் பயன்படுத்திக்கொள்கிறார் என்பதுதான் உண்மை.

இந்தத் திராவிட தமிழ் சமயக் கோட்பாட்டிற்கு தெய்வநாயகத்துக்கு துணைபோகிற ஒரே விஷயம் அப்போஸ்தலன் தோமா மேற்கிந்திய கரையோரத்திற்கு வந்திருந்தார் என்ற வெறும் ஐதீகம் மட்டுமே. இந்த வரலாற்றால் நிரூபிக்கப்படாத, நம்பக்கூடிய எந்த ஆதாரமும் இல்லாத, வாய்வழிவந்த 'கர்ணபரம்பரைக்' கட்டுக்கதையை வைத்தே திராவிட தமிழ் சமயம், திராவிட கிறிஸ்தவம் என்பதெல்லாம் உருவாக்கப்பட்டது. இந்தக் கதையை ஆரம்பித்து வைத்தவர்கள் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்களே. இந்தியாவில் மேற்குக் கீழ்க்கரைப் பகுதியில் ஆரம்பித்த 'சீரியக் கிறிஸ்தவம்' கத்தோலிக்க மதக் கோட்பாட்டையும், சிலை வணக்கத்தையும் பின்பற்றிய ஒரு மதம். அவர்களை அடிப்படையாக வைத்தே தோமா கட்டுக்கதை ஆரம்பித்தது. இதுபற்றி எழுதும் வரலாற்றாசிரியரான ஸ்டீபன் நீல், 'பதினெட்டாம் நூற்றாண்டில் எழுந்த இந்த தோமா கதை இருண்ட, குழப்பமான, அநேக விஷயங்களில் அறிவுக்குப் புறம்பானதுமான ஒன்று' என்று குறிப்பிட்டிருக்கிறார். ஸ்டீபன் நீல் பிஷப் பிரவுனின் கருத்தையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை. 'ஜெக்கொபைட் சபையிடம் எந்த ஆதாரக்குறிப்பும் காணப்படாததால் ஒன்றுக்கொன்று முரணான தோமா கதைகளை ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருவதும் இலகுவானதல்ல' என்று பிரவுன் குறிப்பிட்டிருக்கிறார்.

கர்ணபரம்பரைக் கதைகளை – விக்கிரமாதித்தன் கதைகளைப்போல ஆராயாமல் அப்படியே நம்பிவிடுவது நம்மினத்தில் காலாகாலமாக இருந்துவரும் வழக்கமாதலால் தோமா கதையும் நிலைத்து நின்றுவிட்டது. இது தெய்வநாயகத்துக்கு உள்ளுக்குள் தெரியாமலிருந்திருக்காது. மேலை நாட்டவர்கள் எந்தளவுக்கு கீழைத்தேய மாயவலைகளுக்குள் சிந்தனையின்றி விழுந்துவிடுகிறார்கள் என்பதையே வேர்ல்ட் மெகசின் ஆசிரியர் மேர்வின் ஒலாஸ்கி தெய்வநாயகத்தின் கோட்பாட்டிற்கு ஆதரவளித்து அதை பத்திரிகையில் வெளியிட்டது சுட்டிக்காட்டுகிறது. தெய்வநாயகத்தின் 'திராவிட கிறிஸ்தவம்' கிறிஸ்தவத்தை இந்தியாவில் வளர்க்கவோ, மக்களை மதம் மாற்றவோ உருவாக்கப்படவில்லை. அதன் அடிப்படை நோக்கமே வேறு. பார்ப்பனியத்தையும், ஆரிய இந்து

செல்வாக்கையும் தமிழகத்தில் கால் பதியாமல் இருக்கச் செய்வதற்காக திராவிட இயக்கங்களுக்கு உதவும் ஒரு பிரசார ஆயுதம் மட்டுமே அது. திராவிட இயக்கத்தைச் சேர்ந்த தெய்வநாயகம் இதைச் செய்ததில் ஆச்சரியமில்லை. கிறிஸ்துவின் எந்த அப்போஸ்தலனும் வேதத்தைத் திரித்து ஒரு நாட்டுக்கும், இனத்துக்கும், கலாச்சாரத்துக்கும் ஏற்றவகையில் அந்தந்த பிரதேசத்திற்கேற்ற கிறிஸ்தவத்தை (தமிழ் சமயம்) உருவாக்க மாட்டான். இப்படிச் செய்தவராக தோமாவை சித்தரிப்பது அவரை இழிவுபடுத்தும் செயல்.

கிறிஸ்தவ வேதத்திலும், அதன் அதிகாரத்திலும் நம்பிக்கை வைத்திருக்கும் எவரும் தெய்வநாயகத்தின் வலைக்குள் விழுந்துவிட மாட்டார்கள். இதெல்லாம் தெரியாமல் ராஜிவ் மல்கோத்திராவும், அரவிந்தன் நீலகண்டனும் அமெரிக்காவும், கிறிஸ்தவர்களும் இணைந்து இந்தியாவைப் பிரிப்பதற்காக செய்யும் சதியே இது என்று எழுதியிருப்பது முழங்காலுக்கும் மொட்டைத்தலைக்கும் முடிச்சுப் போடுகிற செயலாகும். மெய்க்கிறிஸ்தவ சபைகள் எதுவுமே இந்தத் தோமா கட்டுக்கதையையும், திராவிட கிறிஸ்தவத்தையும் ஏற்றுக்கொள்ளாது.

இதைப்போலத்தான் இந்துமதக் கலப்புள்ள ‘சதிர்’ என்ற பெயருடன் தேவதாசிகளிடம் இருந்து ஆரம்பித்த தென்னிந்திய பரத நாட்டியம் போன்ற கலைகளைக் கிறிஸ்தவ மயப்படுத்தி கிறிஸ்தவ விளக்கங்கொடுக்கின்ற அநியாயங்களும். நூலில் அடையாளங் காட்டப்பட்டுள்ள பரத நாட்டியத்தைக் கிறிஸ்தவ மயமாக்கும் பாதிரியார் பர்போஸா கத்தோலிக்கர். பிரபல நர்த்தகரான சாஜு ஜார்ஜும் கத்தோலிக்கர். இவர் பாதிரியாராக இருக்கும் இயேசு சபை ஒரு கத்தோலிக்க மதப்பிரிவு. அது நடத்துவதுதான் கலைக்காவேரி கலைக்கல்லூரி. கிறிஸ்துவை அறியாத, இந்துவான கண்ணதாசன் எழுதிய ‘இயேசு காவியத்தை’ கலைக்கல்லூரி பதிப்பகம் எல்லோரும் வாசிக்கும்படி வெளியிட்டிருக்கிறது. மெய்க்கிறிஸ்தவர்கள் கிட்டேயும் போகமாட்டார்கள் கண்ணதாசனின் இயேசு காவியத்திடம். அவர்களுக்குத் தெரியும் கண்ணதாசன் உண்மையில் யாரென்று. கிறிஸ்தவ வேதத்தைத் தெளிவாகப் படித்து ஆராய்ந்து பார்க்கிறவர்களுக்கு இந்தப் பாவகரமான செயல்களையெல்லாம் வேதம் அருவருப்போடு வெறுக்கிறது என்பது தெரியவரும். இந்தப் போக்கெல்லாம் கிறிஸ்தவத்தைப் பொறுத்தவரையில் பிசாசின் சித்துவேலைகளில் ஒன்று மட்டுமே. இவர்களுக்கும் கிறிஸ்தவத்திற்கும் இடையில் இருக்கும் வித்தியாசங்களையே ஆராய்ந்தறியாமல் சகட்டுமேனிக்கு ஆட்களையும், நிறுவனங்களையும் பெயர் குறிப்பிட்டு கிறிஸ்தவத்திற்கு இழுக்கு ஏற்படுத்துகிறது இந்நூல்.

இதேபோல சாது செல்லப்பாவும் அவருடைய ‘அக்னி மினிஸ்டிரிஸும்’, ‘பிரஜாபதி பிராமணர்கள்’ என்ற குழுவினரும் தமிழகத்தில் இயங்கி வருகிறார்கள். ‘பிரஜாபதி பிராமணர்கள்’ என்ற பெயரே இது மெய்க்கிறிஸ்தவத்தோடு தொடர்பில்லாதது என்பதை அப்பட்டமாகத் தெரிவிக்கிறது. இவர்களுடைய போதனையும் நோக்கமும்

தெய்வநாயகத்தைவிட வேறுபட்டவை. தெய்வநாயகம் சமூக, அரசியல் காரணங்களுக்காக திராவிட இனப் பாதுகாப்பை நோக்கமாகக் கொண்டு அந்த இனத்தை மற்ற இனங்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டி அதை நிலைநாட்ட கிறிஸ்தவத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்த, இவர்கள் இந்து வேதங்களில் காணப்படும் 'பிரஜாபதி' இயேசுதான் என்று கூறி இயேசுவை இந்துக்கள் கிறிஸ்தவ வேதத்தை படிக்கவேண்டிய அவசியமில்லாமல் இந்துவேதங்களில் இருந்தும், பகவத்கீதையைப் படித்தும் கண்டுகொள்ளலாம் என்று விளக்கி தீவிர மதமாற்றத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதுவும் மெய்க்கிறிஸ்தவத்தை அடிப்படையிலேயே அவமதிக்கும் வேதவிரோதப் போக்கே. இந்திய வேதங்களில் இயேசுவைக் கண்டுகொள்ளலாம் என்பது சத்திய வேதத்தை நிராகரிப்பதற்கு சமமானது. அவற்றின் மூலம் இயேசுவைக் கண்டுகொள்ளலாம் என்றால் சத்திய வேதமும் அவையும் சம அதிகாரமுள்ளவை என்றாகிவிடும். சுயலாப நோக்கங்களுக்காக தீவிர மதமாற்ற முயற்சியில் ஈடுபடுபவர்களுக்கு சத்தியத்திலெல்லாம் அக்கறை இருக்காது.

இந்து சாமியார்களைப்போல உடைதரிப்பதும், பூணூல் அணிவது போன்றவையெல்லாம் ஏற்கனவே கத்தோலிக்கரான டீ நொபிளி செய்திருந்ததுதான். அம்மதமாற்ற முறைகளுக்கு மறுபடியும் உயிர்கொடுத்து கிறிஸ்தவ வேதத்தையும் அதன் அடிப்படைப் போதனைகளையும் ஒதுக்கி வைத்துவிட்டுவிட்டு இந்து வேதங்களிலும், சைவ சிந்தாந்த நூல்கள், திருக்குறள் போன்றவற்றில் இருந்தெல்லாம் தேடித்தேடி கிறிஸ்தவ விளக்கத்தை இவர்கள் கொடுத்து வருகிறார்கள் சாது செல்லப்பா போன்றவர்கள். அதையெல்லாம் தவறு என்று எதிர்வினை செய்ய அவற்றை எழுதிய நாயன்மார்களும், வள்ளுவரும் இன்று உயிரோடில்லை. இதெல்லாம் அடிப்படைக் கிறிஸ்தவ நம்பிக்கைகளுக்கும், போதனைகளுக்கும் எதிரானவை என்ற கவலையே இவர்களுக்கு இல்லை. இந்துக்களுக்கு இவர்கள் காட்டிவரும் 'இயேசு' கிறிஸ்தவ வேதம் அறியாத, கிறிஸ்தவ வேதத்தில் பார்க்க முடியாத ஓர் இயேசு. இந்தப் பிரச்சாரங்களும் நடவடிக்கைகளும்கூட பிசாசின் சித்துவேலைகளில் ஒன்றுதான். கர்ஜிக்கும் சிங்கம் போல் உலவிவருகின்ற பிசாசு கிறிஸ்தவத்தை மாசுபடுத்தி, இயேசுவின் பெயருக்கு களங்கத்தை உண்டாக்க எந்த நடவடிக்கையையும் எடுக்கத் தயங்க மாட்டான் என்பதை இவர்களுடைய செயல்கள் உணர்த்துகின்றன. ராஜீவ் மல்கோத்திரா, அரவிந்தன் நீலகண்டன் போன்றவர்களை கிறிஸ்தவத்தின் பெயரில் இந்த மனிதர்கள் செய்து வருவது கொதிப்படையச் செய்வதில் ஆச்சரியமில்லை. அந்தக் கொதிப்பின் விளைவாகவே இந்த நூலை அவர்கள் எழுதியிருக்கிறார்கள் என்பதும் எனக்குப் புரிகின்றது.

## சாதியம்

நாசுக்காக சுற்றிவளைத்து சாதியை நூலாசிரியர்கள் நியாயப் படுத்துவதை நூல் முழுவதிலும் காணாமல் இருக்க முடியாது. இந்தியன்

என்றால் இந்து, இந்து என்றால் அதோடிணைந்துள்ளதெல்லாம் சேர்ந்தே இருக்கும் என்பது அவர்களுடைய விளக்கம். இந்தியாவில் ஒருவர் கிறிஸ்தவராக இருந்தால் இந்தியனாக இருப்பதற்கு இவர்களைப் பொறுத்தவரையில் எதெல்லாம் அவசியமோ அதெல்லாம் இருக்க வேண்டுமாம். இதை சுப்பிரமணிய சுவாமியே இந்த நூல் வெளியீட்டில் சுட்டிக்காட்டியிருக்கிறார். இந்து சமுதாயத்தைச் சேர்ந்த உடன்கட்டை ஏறுதல், சாதியம், வரதட்சணைக் கொடுமை, அக்கிரகாரத்துக்குள் தீண்டத்தகாதவன் நுழைந்தால் அது தீட்டு, அவனுடைய நிழல் பட்டாலே தீட்டு என்பதெல்லாம் இவர்களைப் பொறுத்தவரையில் அருமையான இந்தியப் 'பண்பாடு'. இவற்றை சுட்டிக்காட்டித் தவறு என்று மேல்நாட்டவர்கள் சொன்னால் இந்தியப் 'பண்பாட்டை' அவர்கள் இழிவுபடுத்துகிறார்களாம். யாருக்கு இவர்கள் காதுகுத்துகிறார்கள் என்று தெரியவில்லை.

'சாதிகள் இல்லையடி பாப்பா' என்றும்,

'ஜாதி மதங்களைப் பாரோம் - உயர்
ஜன்மம் இத்தேசத்தில் எய்தின ராயின்
வேதியராயினும் ஒன்றே - அன்றி
வேறுகுலத்தினராயினும் ஒன்றே'
'ஈனப் பறையர்களெனும் - அவர்
எம்முடன் வாழ்ந்திங்கிருப்பவர் அன்றோ?' என்றும்,

'பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே' என்றும்,

'சாதி இரண்டொழிய வேறில்லை யென்றே
தமிழ் மகள் சொல்லிய சொல் அமிழ்தமென்போம்;' என்றும்

சாதியை இகழ்ந்து வெறுத்து அதற்கெதிராக அதிகமாகப் பாடியது மேல்நாட்டானா, இந்தியாவில் பிறந்து வாழ்ந்த தமிழ் பார்ப்பனரான பாரதியா? மேல்நாட்டான் நம்மைப் பண்பாடில்லாதவர்கள் என்று சொல்லுகிறான் என்று கூப்பாடு போடும் நூலாசிரியர்கள் நம் பண்பாட்டை இழிவுபடுத்தி நம்மைத் தலைகுனியவைக்கும் வகையில் பாரதி பாடியிருப்பதை வாசித்துப் பார்க்க வேண்டும் -

'சாத்திரங்கள் ஒன்றும் காணார் - பொய்ச்
சாத்திரப் பேய்கள் சொல்லும் வார்த்தை நம்பியே
கோத்திரம் ஒன்றாயிருந்தாலும் - ஒரு
கொள்கையிற் பிரிந்தவனைக் குலைத் திகழ்வார்;
தோத்திரங்கள் சொல்லி அவர்தாம் - தமைச்
சூதுசெய்யும் நீசர்களைப் பணிந்திடுவார்
ஆத்திரங் கொண்டே இவன் சைவன் - இவன்
அரிபக்தன் என்று பெருஞ் சண்டையிடுவார்
நெஞ்சு பொறுக்கு திலையே - இந்த
நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்'

என்று பாடினார் பாரதி. நம் நாட்டான் நம்மை இகழந்தால்

பரவாயில்லை, நம் பக்கம் தவறிருந்தாலும் அதை மேல்நாட்டான் சுட்டிக்காட்டக்கூடாது என்று மேல்நாட்டு பிரின்ஸ்டன் நகரில் சொகுசாக வாழ்ந்துகொண்டு மல்கோத்திரா எழுதுகிறார்.

'மண்ணில் தாழ்ந்தவர் என்றொரு சாதியுரைப்பவன் தீயன்' என்கிறார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். வள்ளலார் ராமலிங்க அடிகளும் வருணங்களும், சாதிகளும் இல்லாத சமுதாயத்தையே கனவாகக் கொண்டிருந்தார். வள்ளுவரின் திருக்குறள், 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்பதன் மூலம் எல்லோரும் பிறப்பில் சமமான நிலையிலேயே பிறந்திருக்கிறார்கள் என்கிறது. உண்மையில் நாயன்மார்கள்கூட சாதி வேற்றுமை பார்ப்பதை இகழ்ந்திருக்கிறார்கள். 'சாத்திரம் பல பேசும் சழுக்கர்காள், கோத்திரமும் குலமும் கொண்டென் செய்வீர்' என்று கேட்கிறார் திருநாவுக்கரசர். மாணிக்கவாசகருடைய திருவாசகமும் சாதியைச் சாடுகிறது. சாதியத்தால் உருவாகும் கொடுமைகளை இவர்கள் தங்கள் காலத்திலேயே கண்டு வெறுத்திருக்கிறார்கள். இதையே மேல்நாட்டார் சொன்னால் அவர்கள் நம் பண்பாட்டை 'ஹீதனிசம்' என்று அழைத்து அசிங்கப்படுத்துகிறார்களாம்; நம்மவர்கள் சொன்னால் அது சமுதாய சீர்திருத்தமோ? கௌதம புத்தர் இந்து மதத்தைவிட்டு விலகி புத்த தர்மத்தை உருவாக்க காரணமென்ன? இந்துசமுதாய மதப் பண்பாடுகளை அவர் வெறுத்துதான். அவை சாதியையும், வறுமையையும் இல்லாமலாக்கவில்லை என்றுதான் அவர் விலகியோடினார். சீக்கிய மதம் உருவாக என்ன காரணம்? இந்து சமுதாய சாதி அமைப்புத்தானே! அம்பேத்கார்கூட சாதிமுறையை ஏற்றுக்கொள்ளவில்லை.

சாதியை இந்தியனின் சுய அடையாளமாக, சமுதாய அடையாளமாக இருக்கவைக்க முயல்கிறது இந்துத்துவப் பார்வை. சாதியை அவசியமான தொன்றாகப் பார்க்கிறவரை இந்துப் பண்பாட்டு அவலங்களில் இருந்து ஓர் இந்தியனால் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முடியாது. சாதி இருக்கும்வரை சாதி வேறுபாட்டின் அடிப்படையில் இந்திய சமூகம் நடைபோடுவதும், சாதிச் சண்டைகள் பெருகுவதும், இனங்கள் தாழ்த்தப்படுவதும் தொடரும். திராவிட அமைப்பால் சாதியை இல்லாமல் ஆக்க முடியவில்லை. தாழ்ந்த சாதியை அரசியலாலும், பொருளாதாரத்தாலும் உயர்த்த மட்டுமே அவர்களால் முடிந்தது. இந்து மதம் சாதியை அடிப்படை சமூக அடையாளமாகப் பார்க்கிறது. சாதி இல்லாத இந்திய சமூகம் தேவை. இது மேல்நாட்டுத் தத்துவமல்ல. நம்மிலக்கியங்களை எழுதியிருப்பவர்கள் கண்ட கனவு. சாதி அடையாளம் இல்லாத இந்தியன் உருவாகிறபோதுதான் உண்மையான மத சுதந்திரத்துக்கும், தனிமனித உரிமைக்கும் வழியேற்படுகிறது. இந்தியப் பண்பாடு என்ற பெயரில் வருணாச்சிரம மனுநீதி தர்மத்திற்கு வக்காலத்து வாங்குகிறார்கள் நூலாசிரியர்கள். இந்த 21ம் நூற்றாண்டில் வாழ்கின்ற மானமுள்ள எந்த இந்தியனும் எதிர்வினையில்லாமல் இவர்களுடைய கருத்தை ஏற்றுக்கொள்ளுவான் என்று நினைப்பது நிச்சயம் தவறு.

## தலித்தியம்

*தலித் என்ற பிரிவு இருப்பதே தவறு என்கிறார்கள் நூலாசிரியர்கள். இதற்காக அது இருக்கவேண்டும் என்று நான் சொல்லவரவில்லை. தலித்துக்கள் தங்களுடைய உரிமைகளுக்காகக் குரல்கொடுப்பது இவர்களுக்குப் பிடிக்கவில்லை. 'மைனாரிட்டீஸ்' என்று எவரையும் பிரிப்பதும் அவர்களுக்கு சலுகைகள் அளிப்பதும் தவறு என்கிறார் நூலாசிரியர்களுக்கு ஒத்து ஊதும் மல்கோத்திராவின் நண்பரான சுப்பிரமணிய சுவாமி. தலித்துக்களை உருவாக்கிவிட்டது யார்? கீழ்சாதியைச் சேர்ந்தவன் நிழல் பட்டாலே பிராமணனுக்கு தீட்டுப் பட்டுவிடும் என்றும், அக்கிரஹாரத்து தெருவில் கீழ்ச்சாதியினர் நடக்கக்கூடாதென்றும், அவர்கள் பானம் அருந்தும் குவளையைத் தொட்டாலே தீட்டாகிவிடும் என்றும் சொல்லி அவர்களுக்கு 'தீண்டத்தகாதவர்கள்' என்று பெயர்கொடுத்தது மேல்நாட்டு வெள்ளையனா? தீண்டத்தகாதவர்கள் கோவிலுக்குள் நுழையக்கூடாது, கடவுளுக்கும் அவர்களுக்கும் சம்பந்தமில்லை என்றெல்லாம் அவர்களை சமுதாயத்தில் இழிவானவர்களாகப் பார்த்து விலக்கி வைத்தது மேல்நாட்டானா?*

*இன்றைக்கும் என் கண்முன்னால் நிற்கிறது ஒரு சிறுவயது சம்பவம். கோவில் பூசாரியான பிராமணன் வீட்டுக்கு வெளியில் என் தந்தையோடு சிறுவனாக நான் நின்றுகொண்டிருக்கிறேன். உயர் சாதியினரான என் தந்தையை எங்கள் குலக்கோயிலிலேயே இருக்கும் வீட்டுக்குள் அனுமதிக்காமல் வெளியில் நிற்க வைத்துப் பேசி குவளைத் தண்ணீரைக் கையில் படாமலேயே சுவற்றில் வைத்து அவருக்குக் குடிக்கக் கொடுத்த அந்த நிகழ்ச்சி இன்றும் கண்முன் நிற்கிறது. அந்தப் பிராமணனுக்கு படியளந்ததே என் தந்தையும் என் குலத்தாருந்தான். இதெல்லாம் நியாயமாகப் படுகிறதா? இதுவா வேண்டும் 'ஒளிரும் இந்தியாவுக்கு'?*

*தேவதாசி வழக்கத்தை இந்து சமுதாயத்தில் உருவாக்கிவிட்டது மேல்நாட்டானா? பெண்வர்க்கத்தையே இழிவுபடுத்தும் அந்த அவலட்சனமான, அசிங்கமான முறைக்கு ஆன்மீக விளக்கங் கொடுப்பதைப் போன்ற அக்கிரமம் இருக்க முடியுமா? இன்றைக்கும் வட நாட்டில் சில பகுதிகளில் கீழ்சாதி சமூகத்தில் ஒரு பெண் திருமணம் செய்தவுடன் நிலக்கிழாருடன் முதலிரவைக் கழித்தபிறகுதான் கணவனோடு வாழ முடியும் என்ற வழக்கம் சமூக வழக்கமாகத் தொடர்கிறதே. அது தெரியாதா? தீண்டத்தகாதவர்கள் என்று இவர்களைத் தள்ளிவைத்ததனால்தானே ஆரம்பத்தில் காந்தி அவர்களுக்கு மரியாதையான பெயரைக் கொடுப்போம் என்று 'ஹரிஜன்' என்று பெயரிட்டு அதுவும் சரிவரவில்லை என்று இன்று 'தலித்' வரை வந்து நிற்கிறது. இதெல்லாம் 'பண்பாடாக' இருந்தால் அந்தப் பண்பாடு இந்தியாவில் ஒழிய எத்தனை எதிர்ப்புக்குரல் எங்கிருந்து எழுந்தாலும் தப்பில்லை. இளவரசனுக்கும், திவ்யாவுக்கும் தர்மபுரியில் நிகழ்ந்தது இந்தப் பண்பாட்டு அவலத்தால்தான் என்பது நூலாசிரியர்களுக்கு புரியுமா?*

மேல்நாட்டாரும், கிறிஸ்தவர்களும் இந்தியாவை உடைக்கிறார்கள் என்று விபரம் புரியாமல் சொல்லுகிறவர்கள் இந்தியாவை இன்றைக்கு உடைத்துக்கொண்டிருப்பது இந்த இந்து சமூகப் பண்பாட்டு அவலந்தான் என்பதை இன்னும் உணராமல் இருக்கிறார்கள்.

## சோற்றில் கல்லிருக்கத்தான் செய்யும்

நூலாசிரியர்கள் அதிகமாகவே வேலை செய்து கிறிஸ்தவ நிறுவனங்களின் பட்டியல்களைச் சேகரித்து அவர்கள் செய்து வரும் பணிகளை ஆராய்ந்திருக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய பட்டியலில் இருப்பவை எல்லாமே இவெஞ்சலிக்கள் கிறிஸ்தவ நிறுவனங்கள் என்று சொல்ல முடியாது. அநேக சமூக சேவையில் ஈடுபட்டிருக்கும் செக்யூலர் லிபரல் நிறுவனங்களும், வேர்ல்ட் விஷன் போன்ற சமூக சேவை செய்யும் நிறுவனங்களும் அவர்களுடைய பட்டியலில் அடங்குகின்றன. அடிக்கடி 'இவெஞ்சலிக்கள்' என்ற பதத்தை நூலில் பயன்படுத்தும் ஆசிரியர்களுக்கு அதன் அர்த்தம் புரிந்ததோ தெரியவில்லை. இவெஞ்சலிக்கள் என்ற பதம் மெய்க்கிறிஸ்தவ வேத போதனைகளை விசுவாசித்துப் பின்பற்றுகிறவர்களை மட்டும் குறிக்கும் பதம். இன்றைக்கு அது கத்தோலிக்க மதத்தைத் தவிர்த்து கிறிஸ்தவமாக கண்ணுக்குத் தெரிகின்ற எல்லா அமைப்புகளுக்கும் உரித்தானதாக தவறாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

கிறிஸ்தவ நிறுவனங்கள் என்ற பெயரைச் சூட்டிக்கொண்டு மதமாற்றத்தில் ஈடுபட்டு வருகின்ற நிறுவனங்கள் நிச்சயம் உண்டு. இந்தியாவில் இயங்கும் அத்தகைய நிறுவனங்கள் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். சுலபமாக பணத்தைச் சேர்த்துக்கொள்ளும் சுயலாபத்துக்காக நிறுவனங்களை ஆரம்பித்து மேல்நாட்டாரிடம் பணம் கேட்டு வருகிறவர்கள் நிச்சயம் இருக்கிறார்கள். எந்தத் தகுதியும், ஆத்மீக பாரமும், வசதிகளும் இல்லாமல் அநாதைப்பிள்ளைகளுக்கு இல்லங்கள் நடத்தப் பணம் கேட்டு எனக்குக் கடிதம் அனுப்புகிறவர்கள் இருக்கிறார்கள். இதையெல்லாம் அடியோடு மறுத்துவிட முடியாது. இப்படிப்பட்ட செயல்கள் இந்துமத அமைப்புகளில் நடக்காமலா இருக்கிறது? அன்றாடம் டி.வியிலும், பேப்பரிலும் அவை பற்றிக் கேள்விப்பட்டுக்கொண்டுதான் இருக்கிறோம். அரிசியில் கல்லிருந்துவிடுவதுபோல் கிறிஸ்தவப் போர்வை போர்த்துக்கொண்டிருக்கும் ஓநாய்கள் இருந்துவிடுவதை நாம் ஒருபோதும் இல்லாமலாக்கிவிட முடியாது. அதையெல்லாம் உடனுக்குடன் இல்லாமலாக்கிவிட நாமென்ன கடவுளா? இதற்காக கிறிஸ்தவத்தையும், கிறிஸ்தவர்கள் எல்லோரையும் தவறான கண்ணோட்டத்தோடு பார்த்து அவர்கள் எல்லோருமே இப்படித்தான் என்று நினைப்பது அறிவீனம். சோற்றில் கல்லிருக்கிறது என்பதற்காக முழுச் சோற்றையுமா தூக்கி எறிந்துவிடுகிறோம்; கல்லைத்தானே எறிந்துவிடுகிறோம்.

அநாதைக் குழந்தைகளுக்காக கல்லூரிகளையும், நிலையங்களையும் நடத்துகிற எல்லோருமே தவறு செய்கிறார்கள் என்றில்லை. பெண்குழந்தைகளை ஈவு இரக்கமில்லாமல் இந்திய சமுதாயம் தெருவில்

எறிந்த கொடுமையைப் பார்க்க சகிக்காமலேயே ஏமி கார்மைக்கல் என்ற அயர்லாந்து நாட்டுக் கிறிஸ்தவப் பெண்மணி டோனாவூரில் அநாதைக் குழந்தைகளை வளர்க்க ஆசிரமத்தை அமைத்தார். வாழ்க்கையில் பல்வேறு தியாகங்களைச் செய்து அவர் வளர்த்த, வாழ்வளித்த குழந்தைகள்தான் எத்தனை. எல்லோருக்கும் அந்த தியாக மனப்பான்மை இருந்துவிடாதுதான். கிறிஸ்தவர்கள் இப்படி உயிரைக்கொடுத்து உழைத்து நம்மவர்களுக்காக செய்திருக்கும் பணிகள் எல்லாவற்றையும் சிலபேருடைய தவறுகளுக்காக கொச்சைப்படுத்திப் பேசுவதும், எழுதுவதும் தகாது. தவறு செய்கிறவர்கள் இருக்கிறார்கள்தான். சுயநலத்துக்காக பெனிஹின் போன்ற மனிதர்களை வைத்து பெருங்கூட்டங்களை நடத்தி பணத்தை சுரண்டுகிறவர்கள் கிறிஸ்தவர்களாக நிச்சயம் இருக்க முடியாது. அந்தமாதிரியான செயல்களை கிறிஸ்தவ ஊழியமாக கிறிஸ்துவோ அவருடைய வேதமோ கருதவில்லை.

கோவில்களை உடைப்பதும், இந்துக்களின் மனம் நோகுமாறு நடந்துகொள்வதும், கன்னியாகுமாரியை ‘கன்னிமேரி’ என்று பெயர் மாற்றம் செய்ய முயல்வதும் கிறிஸ்தவ அன்பைப் பகிர்ந்துகொள்வதற்கு எதிரானது. அத்தகைய செயல்களில் ஈடுபடுகிறவர்களின் கிறிஸ்தவ விசுவாசம் கேள்விக்குரியது. உண்மையில் அவர்கள் கிறிஸ்தவர்களாக இருக்க முடியாது. மெய்க்கிறிஸ்தவர்கள் அத்தகைய செயல்களில் ஈடுபட மாட்டார்கள். நூலாசிரியர்கள், சிலர் செய்யும் தவறுக்காக எல்லோரையும் தவறாகப் பார்த்து தங்களுடைய அரசியல், சமூக மத நோக்கங்களுக்கு ஒத்துப்போகும் விதமாக கிறிஸ்தவத்தைப் பற்றிக் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களுடைய உள் நோக்கங்களுக்கு இது துணைபோகலாம். அதற்காக அவர்கள் உண்மையை எழுதுகிறார்கள் என்று அர்த்தமில்லை.

## மெய்க்கிறிஸ்தவம் வன்முறை அறியாதது

ஆசிரியர்கள் கிறிஸ்தவர்களை அநாவசியத்துக்கு நக்ஸலைட்டுகளோடும், ஏனைய வன்முறை அமைப்புகளோடும் தொடர்புபடுத்தி அவர்களை வன்முறையை ஆதரிக்கிறவர்களாக சித்திரிக்கிறார்கள். கிறிஸ்தவம் வன்முறையை அடியோடு எதிர்க்கிறது. ஒரு கன்னத்தில் அறைபவனுக்கு மறுகன்னத்தைக் காட்டும்படி இயேசு கிறிஸ்து அறிவுரை சொல்லியிருக்கிறார். கிறிஸ்தவம் கத்தி, தோட்டாவைக் கையிலெடுக்காது. அமெரிக்கா ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் போரிட்டதையெல்லாம் வைத்து கிறிஸ்தவமும் அப்படிச் செய்யும் என்று ஆசிரியர்கள் கணக்கிடுகிறார்கள். அமெரிக்காவையும், மேற்கத்திய நாடுகளையும் கிறிஸ்தவ நாடுகளாகப் பார்ப்பதனாலேயே இந்தத் தவறு நேர்கிறது.

அமெரிக்கா அடிப்படையில் ஒரு கிறிஸ்தவ நாடல்ல. அங்கு ஒரு காலத்தில் கிறிஸ்தவ செல்வாக்கு அதிகம் இருந்தது உண்மைதான். அந்தச் செல்வாக்கால் அந்த நாட்டுக்குப் பல நன்மைகள் ஏற்பட்டதும் உண்மைதான். அதுவல்ல இன்றைய நிலைமை. கிளின்டன், ஒபாமா போன்றவர் களெல்லாம் தங்களை ஒருபோதும் கிறிஸ்தவர்களாக இனங்காட்டிக்

கொண்டதில்லை. ஓரினச் சேர்க்கைக்கு திருமண அந்தஸ்து வழங்கிய முதல் அமெரிக்க அதிபர் ஒபாமா. ஆசிரியர்களின் அடிப்படைத் தவறே அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளையும், ஐரோப்பாவையும் கிறிஸ்தவ நாடுகளாகக் கருதுவதுதான். அமெரிக்காவிலாவது ஓரளவுக்கு கிறிஸ்தவம் இன்னும் முற்றும் அழியாமல் இருக்கின்றபோதும், கனடாவும் ஐரோப்பாவும் முழு லிபரல் நாடுகளாக இருக்கின்றன. அங்கே கிறிஸ்தவத்திற்கு எந்த மதிப்புமில்லை. இதை கிறிஸ்தவ வரலாற்றை வாசித்தாலே அறிந்துகொள்ள முடியும். 15, 16ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் கத்தோலிக்க மதம் கிறிஸ்தவர்களைத் தேடித் தேடி வெட்டிச் சாய்த்திருக்கிறது. கிறிஸ்தவர்கள் அதை எதிர்த்துப் போராடவில்லை. மேலைநாட்டில் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள் என்பது மட்டுமே உண்மை; அந்நாடுகளில் எதுவும் கிறிஸ்தவ வேதத்தின் அடிப்படையில் இயங்கும் நாடுகளல்ல. அவை கிறிஸ்தவத்தை வளர்த்துக்கொண்டிருக்கும் நாடுகளுமல்ல. அவற்றை கிறிஸ்தவ நாடுகளாகப் பார்ப்பது தவறான கணிப்பின் விளைவு.

## மதசுதந்திரமும், தனி மனித உரிமையும்

அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற மேற்கத்திய நாடுகளில் எல்லா மதத்தவர்களும் சுமுகமாக வாழ்வதற்குக் காரணம் அங்கு மத சுதந்திரமும், தனி மனித உரிமையும் பாதுகாக்கப்படுவதால்தான். இவற்றிற்கு அந்நாடுகள் முக்கியத்துவம் கொடுக்கின்றன. யாரும் எந்த மதத்தைப் பின்பற்றவும், எல்லா மதங்களும் மதவேறுபாடின்றி தங்களுடைய நோக்கங்களை எவருக்கும் பாதகம் ஏற்படுத்தாமல் நிறைவேற்றிக்கொள்ளவும் அங்கே வசதிகள் இருக்கின்றன. தனிமனித சுதந்திரத்தில் மதம் தலையிடுவதில்லை. அந்நாடுகளில் இருக்கும் சட்டங்கள் மதங்களுக்கும், தனி மனித உரிமைகளுக்கும் பாதுகாப்பளிக்கின்றன. இது மல்கோத்திராவுக்கு நிச்சயம் தெரிந்ததே. இதற்கு என்ன அடிப்படைக் காரணம்? கிறிஸ்தவ சுவிசேஷம் தான். சுவிசேஷம் அந்த நாடுகளில் ஏற்படுத்திய தாக்கம் தனி மனித உரிமைகளைப் பாதுகாக்கும் அரசியலமைப்பை உருவாக்கியிருக்கிறது. அதெல்லாம் வருமுன் அவர்களும் 'பண்பாடில்லாத' செயல்களைத்தான் செய்து வந்திருக்கிறார்கள். நான் வாழ்ந்து வருகின்ற மேற்கத்திய நாடுகளில் ஒன்றான நியூசிலாந்திலும் அதேநிலைமைதான். என் நாடு முழு செக்கியூலர் நாடு. இங்கு கிறிஸ்தவத்திற்கு எந்த தனிப்பட்ட மதிப்பும் இல்லை. இருந்தாலும் மத சுதந்திரமும், தனிமனித உரிமைகளும் இங்கு பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இந்தியாவில் இன்றைக்கு தொடர்ந்தும் மதசுதந்திரம் அரசியல் சாசனத்தில் இருக்கிறது; அப்படி இருப்பதுதான் இந்தியாவுக்கும் நன்மையளிக்கும். இந்தியா எப்போதுமே இந்துக்களை மட்டும் கொண்டிருந்த நாடல்ல. அங்கே ஏனைய மதத்தவர்களும், இனத்தவர்களும் எப்போதும் இருந்திருக்கிறார்கள். மத சுதந்திரமும், தனி மனித உரிமையும் மட்டுமே இனங்களை அமைதியாக வாழ வழிவகுக்கும். இந்தியா என்பதும், இந்து என்பதும் ஒன்று என்று கருதுவதும் அதை நிலைநாட்ட முயல்வதும்தான் இனவேறுபாட்டை ஏற்படுத்தும். அதைத்தான்

நூலாசிரியர்கள் எதிர்பார்க்கிறார்கள். அது இந்துத்துவக் கோட்பாடு. இந்தியாவுக்கு அது அமைதி தராது. இந்துக்களும், முஸ்லீம்களும், கிறிஸ்தவர்களும் ஏனைய மதத்தவர்களும் இனத்தவர்களும் இணைந்து வாழ வழிகளைத் தேடுவதே மேலானது.

உண்மையான மத சுதந்திரம் இருக்குமானால் மனிதன் அவனுடைய மனச்சாட்சியின்படி நடக்கக்கூடிய தனி மனித உரிமையும், எதையும் ஆராய்ந்து பின்பற்றும் வசதியும் இருக்க வேண்டும். தன்னுடைய மத நம்பிக்கைகளையும், குல வழக்கங்களையும் ஆராய்ந்து பார்க்கவும், விரும்பினால் விட்டுவிடவும் அவனுக்கு உரிமையும் வசதியும் இருக்க வேண்டும். இப்படியெல்லாம் விட்டால் சமூகம் பாதிக்கப்படும் என்பார்கள். சமூகத்துக்காக தனிமனிதன் தன்னுரிமைகளை இழந்து வாழ வேண்டியிருக்கிறது இந்திய சமுதாயத்தில். தனி மனிதன் சமூகத்திற்கு ஆபத்தில்லாமல், பொதுவான நாட்டுச் சட்டத்திலுள்ள விதிகளை மீறாமல் வாழ்வது அவசியம். எல்லோருக்கும் பொதுவான விதிகளை அந்தச் சட்டங்கள் பாதுகாக்கின்றன. அவை அனைத்து சமூகங்களுக்கும் பாதுகாப்பாக இருக்கின்றன. அதற்கு அப்பால் போய் எழுத்திலில்லாத சம்பிரதாயங்களையும், கட்டுப்பாடுகளையும் தனி மனிதன் பின்பற்றி வாழ வேண்டும் என்று எதிர்பார்ப்பது அவனை சமூகத்துக்கும், பத்தாம் பசலிப் பண்பாட்டுக்கும் பலிகடா ஆக்கும் செயல். மார்க்ஸீயம் இதைத்தான் செய்தது. கம்யூனுக்காக வாழ வேண்டுமே தவிர தனிமனிதன் தனக்காக வாழமுடியாதபடி அது செய்தது. பொது உடமை என்பதே இதனால் வந்ததுதான். இதெல்லாம் இன்றைக்கு செல்லாக்காசாக மாறி வருவதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம்.

மனிதன் தன் உரிமைகளில் எவரும் தலையிடுவதை இன்று விரும்பவில்லை. சாதியம், புத்திக்கெட்டாத சம்பிரதாயம், சடங்குகளையெல்லாம் இன்றைக்கு பெருநகரப்புறத்தைச் சேர்ந்தவர்கள் புறக்கணிக்கவில்லையா? தொழில் நுட்ப வளர்ச்சியும், வாழ்க்கைத் தர உயர்வும், கல்வியறிவும், எதையும் ஆராய்ந்து சிந்தித்து முடிவெடுக்கும் கம்பியூட்டர், இணைய யுக சிந்தனைப் போக்கும் இன்றைக்கு பெருநகர்ப்புற இந்தியனை மாற்றிக்கொண்டிருக்கின்றன. இதை நிச்சயமாக 'பண்பாட்டுச் சீரழிவாக' ஒரு கூட்டம் பார்க்கத்தான் செய்கிறது. அதற்காக அவர்கள் சரியென்று ஆகிவிடுமா? சமுதாய வளர்ச்சியின் ஒரு அங்கத்தைத்தான் இன்றைக்கு பெருநகர்ப்புறங்களில் கண்டுவருகிறோம். பெண்கள் வேலைக்குப் போவதும், குடும்பத்தோடு வாழாமல் தனியாக அப்பார்ட்மென்டில் வாழுவதும், பலரோடு எங்கும் பொதுவாக நட்பாகப் பழகுவதும் இத்தகைய மாற்றங்களில் ஒன்று. இதிலெல்லாம் அத்துமீறுதல் இல்லாமலிருக்காது. ஒரு சிலருடைய அத்துமீறுதலுக்காக பெண்கள் அனைவரையும் வாயைக் கட்டி வீட்டில் போட்டு எத்தனை காலத்துக்குப் பூட்டி வைக்கப்போகிறீர்கள்? எத்தனையோ பாரம்பரிய இந்து சமூகக் கட்டுப்பாடுகளை வைத்திருந்தும் பலதார மணமும், 'சின்ன வீடு' வைப்பதும், பரவலாக ஊரெல்லாம் இன்றும் தொடர்கிறதே. இது 'பண்பாட்டுச் சீரழிவு' இல்லையா?

*இந்தியனை இந்துவாகவும், வருணாச்சிரம மனுநீதிக் கோட்பாடுகளை மட்டும் பின்பற்றுபவனாக இருக்க வைக்கப் பார்ப்பது மதசுதந்திரத்துக்கும் தனி மனித உரிமைக்கும் எதிரானது. இது இருபத்தியோராம் நூற்றாண்டிலும் அவனைப் பழைய பஞ்சாங்கமாக இருக்க வைக்கும் முயற்சி. இதைத்தான் தலிபான் ஆப்கானிஸ்தானில் செய்யப் பார்த்தது. அடிப்படைவாத இஸ்லாமும் இன்று இதையே செய்யப் பார்க்கிறது. இந்துத்துவாக்களுக்கும், நூலாசிரியர்களுக்கும் இதுதான் வேண்டும் போலிருக்கிறது. இது இந்தியாவுக்குத் தேவையில்லை.*

**முடிவாக . . .**

Breaking India *கிறிஸ்தவர்களை சிந்திக்க வைக்க வேண்டும். கிறிஸ்துவின் அன்பைக் கொச்சைப்படுத்தாமல் அர்ப்பணிப்போடு நாம் எதிர்ப்புகளுக்கு மத்தியில் தொடர்ந்தும் வெளிப்படுத்த நமக்கு உதவவேண்டும். கிறிஸ்தவத்தை இந்தளவுக்கு வெறுப்போடு பார்த்து எழுதுகிறவர்களையும் இயேசு மன்னிக்கிறார். 'அவர்கள் அறியாமல் செய்கிறார்கள், அவர்களை மன்னித்து விடுங்கள்' என்று பிதாவைப்பார்த்து இயேசு கேட்கவில்லையா? அதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நம்முடைய இருதயத்தையும், செயல்களையும் ஆராய்ந்து பார்த்து மனச்சாட்சியை சுத்தமாக வைத்திருந்து கிறிஸ்தவ சுவிசேஷ ஊழியத்தை எந்தவிதத்திலும் கொச்சைப்படுத்தாமல் கிறிஸ்துவின் மகிமைக்காக இந்திய நாட்டில் தொடர வேண்டும்.*

*பாரதி தேடிய மெய்யான விடுதலை இந்தியாவுக்கு இயேசு மூலம் மட்டுமே வரமுடியும், ஏன் எந்த நாட்டுக்கும் அது மட்டுமே வழி. அந்த விடுதலை மக்களுக்கு கிடைக்க சுவிசேஷத்தில் நம்பிக்கை வைத்து அதை மட்டுமே சுத்தமாக பிரசங்கிக்க வேண்டியதே நம் கடமை. 'கிறிஸ்து மனிதனாக வந்த இறைகுமாரன் என்ற நம்பிக்கை இவர்களுக்கு இருக்கும் பட்சத்தில் அந்த ஒரே வரியைச் சொல்லியே இவர்கள் மதத்தைப் பரப்பலாமே? . . . தியாகத்தின் சிலுவையுடன் கிறிஸ்து வரட்டும் . . .' என்று எழுத்தாளர் ஜெயமோகன் போன்றோர் கேட்குமளவுக்கு இன்றைக்கு கிறிஸ்தவத்தை சிலர் கொச்சைப்படுத்தி இயேசுவின் பெயருக்கு களங்கம் கற்பிக்கிறார்கள். இவர்களால் இந்துக்களுக்கு நம்மீது தவறான எண்ணம் ஏற்படுகிறது. தியாகத்தோடும் பாரத்தோடும் அர்ப்பணிப்போடும் கிறிஸ்தவப் பணி செய்ய வேண்டிய பெருங்கடமை இன்று மலைபோல் நம்முன் நிற்கிறது. அத்தகைய பணி மட்டுமே* Breaking India *போன்ற நூல்களுக்கு நல்ல பதிலாக அமைய முடியும்.*

**அறிவுப் பசி**

**வயிறாவது வலித்து தன் பசியைத் தெரிவிக்கும்;**
**அறிவு என்ன செய்யும் பாவம்! - சுபி.**

# பெற்றோரின் கடமைகள்

- ஜெ. சி. ரைல் -

*பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து. அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான். - நீதி 22:6*

## 8. உங்களுடைய வார்த்தைகளில் நம்பிக்கை வைக்கும்படி பிள்ளைகளுக்கு பயிற்சி கொடுங்கள்

உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் சொல்லுவதை அவர்கள் நம்பும் படியாகக் கற்றுக்கொடுங்கள். தங்களுடைய சொந்தக் கருத்துக்களையும், ஆராய்ந்தறியும் திறனையும் காட்டிலும் பெற்றோராகிய உங்களுடைய கருத்துக்களும் அறிவும்தான் மேலானது என்கிற நம்பிக்கை அவர்களுக்கு உருவாகும்படியாக செய்ய வேண்டும். நீங்கள், அவர்களுக்கு நல்லதல்ல என்று குறிப்பிடும் காரியங்கள் நல்லதல்ல என்றும், நீங்கள் சரியென்று சொல்வது சரியாகத்தான் இருக்குமென்றும் அவர்கள் நம்பும்படியாக அவர்களைப் பழக்கப்படுத்த வேண்டும். சுருக்கமாகக் கூறினால், உங்களுடைய அறிவு அவர்களுடையதை விட மேலானதென்றும், நீங்கள் எதையாவது கூறினால் அதற்கு அவர்கள் உடனடியாகக் கீழ்ப்படிய வேண்டுமென்றும் அவர்களுக்குப் பயிற்சி அளியுங்கள். நீங்கள் அவர்களிடம் எதிர்பார்க்கிறவைகள் இப்போது அவர்களுக்கு சரியாக விளங்காவிட்டாலும் எதிர்காலத்தில் அவர்கள் விளங்கிக்கொள்வார்களென்றும், இப்போதைக்கு நீங்கள் சொல்கிறபடி கேட்டு நடந்தால் போதுமானது என்றும் அவர்கள் உணர்ந்துகொள்ளும்படியாகச் செய்யுங்கள்.

உண்மையாக நம்பிக்கை வைப்பதில் எவ்வளவு ஆசீர்வாதம் அடங்கியுள்ளது என்பதை யாரால் விவரிக்க முடியும்? நம்பிக்கை வைக்காமல் போனதால் உலகத்திற்கு எவ்வளவு கேடு ஏற்பட்டது என்று தெரியுமா? நம்பிக்கையின்மைதான் ஏவாளை அந்த விலக்கப்பட்ட கனியைப் புசிக்க வைத்தது. "சாகவே சாவீர்கள்" என்று தேவன் கூறிய வார்த்தையிலுள்ள உண்மையை சந்தேகப்பட்டதால் ஏற்பட்ட விளைவு அது! நோவாவின் வார்த்தைகளில் இருந்த எச்சரிப்பை நம்ப மறுத்ததால் பழைய உலகம் பாவத்தில் அழிந்தது. அவநம்பிக்கைதான் இஸ்ரவேலரை வனாந்தரத்தில் அலைய வைத்தது. வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்தில் அவர்களை நுழைய விடாமல் தடுத்தது அவர்களுடைய நம்பிக்கையின்மையே. நம்பிக்கை வைக்காததால் யூதர்கள் மகிமையின் கர்த்தரை சிலுவையில் அறைந்தனர். அவர்கள் மோசேயின் ஆகமங்களையும் தீர்க்கதரிசனங்களையும் நாள்தோறும் படித்து வந்தாலும் அவைகளை நம்பவில்லை. மனிதனின் இருதயத்தை இந்த நொடி வரையிலும் ஆண்டு கொண்டிருக்கிற பாவம் நம்பிக்கையற்ற தன்மைதான்.

மனிதன் கடவுளின் வாக்குத்தத்தங்களை நம்புவதில்லை. கடவுளின் எச்சரிப்புகளை நம்புவதில்லை. நம்முடைய சொந்த பாவநிலையை நம்புவதில்லை. நாமிருக்கும் ஆபத்தான நிலையை நம்புவதில்லை. பெருமையும், உலகப்பிரகாரமான எண்ணங்களும் கொண்ட நமது பொல்லாத இருதயத்தில் நம்பிக்கையின்மையும் இணைந்து இருக்கிறது. பெற்றோர்களின் வார்த்தைகளில் நம்பிக்கை வைப்பதிலும், அவர்கள் சொல்லுவது சரியாகத்தான் இருக்கும் என்று நம்புவதிலும், நீங்கள் உங்கள் பிள்ளைகளைப் பழக்கவில்லையென்றால், நீங்கள் கற்றுத் தருகிற மற்ற நற்காரியங்களால் அதிக பலன் இருக்காது.

பிள்ளைகளால் விளங்கிக்கொள்ள முடியாத காரியங்களை அவர்கள் செய்யும்படியாக பெற்றோர் எதிர்பார்க்கக் கூடாது என்று சிலர் சொல்லுவதைக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்கள் செய்யும்படியாக நீங்கள் எதிர்பார்க்கிற ஒவ்வொரு காரியத்தையும் நீங்கள் அவர்களுக்கு விளக்கி, காரணம் காட்டிய பிறகே அதை அவர்களை செய்ய வைக்க வேண்டும் என்கிறார்கள் இவர்கள். இந்தவிதமான கருத்துக்களைக் குறித்து நான் உங்களை எச்சரிக்கிறேன். இது ஆரோக்கியமில்லாத, மிகவும் மோசமான கொள்கை. அதற்காக நீங்கள் செய்வதெல்லாவற்றையும் மர்மமாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கூறவில்லை. அது அசட்டுத்தனமானது. நீங்கள் பிள்ளைகளிடம் எதிர்பார்ப்பவைகளில் பலவற்றை அவர்களுக்கு விளக்கிக் கூற முடியும். நீங்கள் கூறுவது எவ்வளவு சரியானது, சிறந்தது என்பதை அவர்களும் உணர்ந்துகொள்ளக்கூடும். ஆனால், நீங்கள் செய்யச் சொல்லுகிற காரியம் ஒவ்வொன்றிலும் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டால்தான் அதை அவர்கள் செய்யலாம் என்கிற சலுகையை அளித்தீர்களானால் அது ஆபத்தானது. பெற்றோர் கூறுவதற்கு கீழ்ப்படிய வெறும் நம்பிக்கை மாத்திரம் போதுமானது என்கிற எண்ணத்தை அவர்கள் இழந்து விடுவார்கள். தங்களுடைய பலவீனமான, குறைந்த அறிவை வைத்துக் கொண்டு, நீங்கள் கூறுகிற ஒவ்வொரு காரியத்துக்கும் "ஏன்" "எதற்கு" என்கிற கேள்வி கேட்க அனுமதித்தீர்களானால் நீங்கள் மிகப் பெரும் தவறு செய்கிறவர்களாவீர்கள். அது அவர்களுடைய மூளையில் தீங்கான விளைவுகளை உருவாக்கிவிடும்.

நீங்கள் விரும்பினால் சில வேளைகளில் அவர்களுக்கு காரணங்களை விளக்கிக் காட்டலாம். ஆனால் நீங்கள் உண்மையிலேயே உங்கள் பிள்ளைகளை நேசிப்பவராக இருந்தால், என்ன இருந்தாலும் அவன் ஒரு சிறுபிள்ளைதான் என்பதை மனதிலே வைத்துக்கொள்ள ஒருபோதும் மறவாதீர்கள். அவன் சிறுபிள்ளையைப் போலத்தான் யோசிப்பான். சிறுபிள்ளைக்கேற்ற விதத்தில்தான் புரிந்துகொள்வான். ஆகவே எல்லாவற்றிற்கும் உரிய காரணங்களை அவன் உடனடியாக விளங்கிக்கொள்வான் என்று எதிர்பார்க்காதீர்கள்.

ஈசாக்கின் உதாரணத்தை அவனுக்கு முன்பாக வையுங்கள். ஈசாக்கை பலியிடுவதற்கு ஆபிரகாம் ஈசாக்கை மோரியா மலைக்குக் கூட்டிச் சென்றார் (ஆதி 22). ஈசாக்கு தன் தகப்பனிடம் கேட்டது ஒரே ஒரு

கேள்விதான்: "தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே?" அதற்கு ஆபிரகாம், "தேவன் தமக்கு தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்வார்" என்பதைத் தவிர வேறொன்றையும் பதிலாக சொல்லவில்லை. எப்படி, எங்கே, எப்பொழுது, எந்தவிதமாக, யார் மூலமாக என்றெல்லாம் ஆபிரகாம் ஈசாக்குக்கு விளக்கவில்லை. ஆபிரகாம் கூறிய அந்த பதிலே ஈசாக்குக்குப் போதுமானதாக இருந்தது. தகப்பன் கூறினால் எல்லாம் சரியாகத்தான் இருக்கும் என்று ஈசாக்குக்கு நம்பிக்கை இருந்தது. அதில் திருப்தியாயிருக்க முடிந்தது.

ஆரம்ப நாட்களில் நாம் எல்லோரும் கற்றுக்கொள்கிறவர்களாகத்தான் இருக்கிறோம் என்பதை உங்கள் பிள்ளைகளுக்குக் கூறுங்கள். எந்தவிதமான படிப்பைப் பெற வேண்டுமானாலும் அதற்கு ஆரம்பமாக எழுத்துக்களைக் கற்பதில் தேர்ச்சி பெற வேண்டியிருக்கிறது. உலகத்திலேயே மிகச் சிறந்த குதிரையாக இருந்தாலும் அதன் ஆரம்ப நாட்களில் அதற்குப் பயிற்சி கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகவே இப்போது பெற்றோராகிய நாங்கள் உனக்கு அளிக்கும் பயிற்சியிலுள்ள சிறப்பை நீ பெரியவனாகும் போதுதான் காண்பாய் என்பதை அவனுக்கு உணர்த்துங்கள். அதுவரைக்கும் நீங்கள் ஒரு விஷயத்தை நல்லதென்று கூறினால் அதுவே அவர்களுக்குப் போதுமானது. அதை அப்படியே நம்பி, திருப்தியோடு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை அவர்களுக்கு உணர்த்துங்கள்.

பெற்றோரே! பிள்ளைகளை வழிநடத்துவதில் இது மிகவும் முக்கியமான விஷயம். அவர்கள் மீது நீங்கள் வைத்திருக்கிற அன்பின் காரணமாக நான் கூறுகிறேன்: அவர்கள் நம்பிக்கை வைப்பதற்கு பயிற்சியளிக்கும்படி எல்லா சந்தர்ப்பங்களையும் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

## 9. கீழ்ப்படியும் வழக்கத்தைக் கொண்டவர்களாக இருக்கும்படி பிள்ளைகளுக்கு பயிற்சி கொடுங்கள்.

இது நிறைவேறுவதற்கு எவ்வளவு உழைத்தாலும் தகும். கீழ்ப்படிதலைப் போல நமது வாழ்க்கையில் மிகுந்த பலன் தரக்கூடிய நற்பழக்கம் வேறெதுவும் இருக்குமா என்பது சந்தேகம்தான். பெற்றோரே! உங்களுக்கு எவ்வளவு சிரமமாக இருந்தாலும், பிள்ளைகளை உங்களுக்குக் கீழ்ப்படியச் செய்ய வேண்டும் என்பதில் உறுதியாய் இருங்கள். அதன் காரணமாக அவர்கள் எவ்வளவு வேண்டுமானாலும் கண்ணீர் சிந்தலாம். அதனால் பரவாயில்லை. கேள்வி கேட்பதோ, காரணம் காட்டுவதோ, வாக்குவாதம் செய்வதோ, தாமதிப்பதோ, எதிர்த்துப் பேசுவதோ அந்தப் பயிற்சிக்கு இடையூறாக வராதபடிக்குப் பார்த்துக்கொள்ளுங்கள். நீங்கள் ஒரு கட்டளையைக் கொடுத்தால் அதை மறு பேச்சின்றி நிறைவேற்றினாலொழிய விடமாட்டீர்கள் என்பதை அவர்கள் உணரும்படியாகச் செய்யுங்கள்.

கீழ்ப்படிதல் மாத்திரமே உண்மையானது. கீழ்ப்படிதலில் விசுவாசம் தெளிவாகத் தெரிகிறது; விசுவாசம் செயல்படுகிறது; விசுவாசம் உருவாகிறது. அது கர்த்தருடைய ஜனங்கள் யாரென்பதை வெளிப்படச்

*செய்கிற பரீட்சையாயிருக்கிறது. "நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால் என் சிநேகிதராயிருப்பீர்கள்" (யோவான் 15:14) என்றார் இயேசு. நன்றாக பயிற்றுவிக்கப்பட்ட பிள்ளைக்கு கீழ்ப்படிதலே அடையாளமாக இருக்கிறது. அவர்கள் தங்கள் பெற்றோர் கட்டளையிடுகிற யாவற்றையும் செய்வார்கள். பெற்றோருக்கு சந்தோஷத்தோடும், முழுமனதோடும், உடனடியாகவும் கீழ்ப்படியாவிட்டால், பத்துக் கட்டளைகளில் ஐந்தாம் கட்டளையான தாய் தகப்பனுக்குரிய கனத்தை அவர்கள் எவ்வாறு காண்பிக்க முடியும்?*

*ஆரம்பகாலத்திலேயே பிள்ளைகள் கீழ்ப்படிதலோடு வளர வேண்டுமென்பதை வேதம் எல்லா இடங்களிலும் வலியுறுத்துகிறது. அதை ஆபிரகாமின் புகழ்ச்சியில் காணலாம். ஆபிரகாம் தனது குடும்பத்தாரை நன்றாக பயிற்றுவித்தது மட்டுமல்லாமல், "தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின் வரும் தன் வீட்டாருக்கும் . . . கட்டளையிடுவான்" (ஆதி 18:19) என்று கர்த்தர் குறிப்பிடுகிறார். இளம் பாலகனாயிருந்த இயேசு கிறிஸ்துவைக் குறித்தும்கூட இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது: "அவர் அவர்களுக்கு (மரியாள்-யோசேப்பு) கீழ்ப்படிந்திருந்தார்" (லூக் 2:51). இளம்பிராயத்திலிருந்த யோசேப்பும் தன் தகப்பனாகிய யாக்கோபின் வார்த்தைகளுக்கு உடனடியாகக் கீழ்ப்படிந்ததை ஆதி 37:13ல் கவனியுங்கள். "வாலிபன் முதிர்வயதுள்ளவனுக்கு இடும்பு (அகங்காரத்தோடு நடப்பான்) செய்வான்" (ஏசாயா 3:5) என்று ஏசாயா கீழ்ப்படியாமையை ஒரு தீமையான காரியமாக முன்னுரைத்திருப்பதைப் பாருங்கள். பிள்ளைகள் பெற்றோருக்கு அடங்காமல் கீழ்ப்படியாமல் போவதை கடைசி நாட்களில் வரும் கொடிய தீங்காக அப்போஸ்தலனாகிய பவுல் அடையாளங் காட்டுவதைப் பாருங்கள் (2 தீமோ 3:2). ஒரு கிறிஸ்தவ ஊழியனிடம் காணப்பட வேண்டிய குணங்களில் ஒன்றாக, பிள்ளைகளைக் கீழ்ப்படியச் செய்வதை பவுல் வலியுறுத்துவதைப் பாருங்கள்: "கண்காணியானவன் . . . தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளை சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப்பண்ணுகிறவனுமாய் இருக்க வேண்டும்" (1 தீமோ 3:4). "மேலும் உதவிக்காரரானவர்கள் . . . தங்கள் பிள்ளைகளையும் சொந்தக் குடும்பங்களையும் நன்றாய் நடத்துகிறவர்களுமாய் இருக்க வேண்டும்" (1 தீமோ 3:12). "துன்மார்க்கரென்றும் அடங்காதவர்களென்றும் பேரெடுக்காத விசுவாசமுள்ள பிள்ளைகளை உடையவனாயிருந்தால்" (தீத்து 1:6) அவனையே மூப்பராக ஏற்படுத்தும்படி பவுல் அறிவுறுத்துகிறார்.*

*பெற்றோரே, உங்கள் பிள்ளைகள் மகிழ்ச்சியாக வாழ்வதைப் பார்க்க விரும்புகிறீர்களா? அப்படியானால், நீங்கள் சொன்ன சொல்லுக்குக் கீழ்ப்படிவதற்கும், உங்கள் கட்டளைகளின்படி செய்வதற்கும் அவர்களைப் பழக்கப்படுத்துங்கள். நம்மில் யாருமே முழுச் சுதந்திரத்தோடு இருக்கும்படியாக படைக்கப்படவில்லை. இதை நம்புங்கள். அப்படி இருப்பதற்கு நாம் தகுதியானவர்கள் அல்ல. கிறிஸ்துவில் சுதந்தரவாளியாக இருப்பவனுங்கூட ஒரு நுகத்தின் கீழாகத்தான் இருந்து,*

*"கர்த்தராகிய இயேசுவை சேவிக்கிறான்" (கொலோ 3:24). நமது நலனை விரும்புகிறவர்களுக்கு நாம் கீழ்ப்படிந்து நடக்கப் பழகாவிட்டால் நாம் சிறந்த நிலையை அடைய முடியாது என்பதை நம் பிள்ளைகள் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் கற்றுக்கொள்வார்கள். அவர்கள் சிறுவயதினராய் இருக்கும்போதே கீழ்ப்படிதலை அவர்களுக்கேற்றளவுக்குக் கற்றுக் கொடுத்துவிடுங்கள். இல்லையென்றால் அவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் கர்த்தருக்கு விரோதமாகவே செயல்பட்டுக் கொண்டிருப்பார்கள். தேவனுடைய ஆளுகைக்கு அடங்காமல் சுதந்திரமாக வாழ்வதாக வீணான எண்ணம் கொண்டு தங்களைத் தாங்களே அழித்துக்கொள்வார்கள்.*

*இந்தக் காலத்தில் அநேக பெற்றோர், தங்கள் பிள்ளைகள் சரியான வயதை அடைவதற்கு முன்னால், தாங்களாக எதையும் தெரிவு செய்துகொள்ளுகிற சுதந்திரத்தை அவர்களுக்குக் கொடுத்து விடுகிறார்கள். பிள்ளைகள் கீழ்ப்படியாமல் இருப்பதைக் குற்றமாக பார்க்கக் கூடாது என்கிற எண்ணத்தில் பெற்றோரே அவர்களுடைய தவறுகளுக்கு சாக்குப்போக்குச் சொல்லிவிடுகிறார்கள். எப்போதுமே பிள்ளைகளுக்கு விட்டுக்கொடுத்துக் கொண்டிருக்கிற பெற்றோரைத்தான் நான் அடிக்கடி பார்க்கிறேன். பிள்ளைகள் தங்களுடைய இஷ்டத்தின்படி இந்தக் காலத்தில் நடந்துகொள்ளுகிறார்கள். என்ன மோசமான துக்கமளிக்கின்ற செயல்! ஏன் அது துக்கத்தைத் தருகிறது தெரியுமா? பெற்றோர்களின் இந்தத் தவறால் அந்தப் பிள்ளை சுயநலம், பெருமை, தன்னையே ஏமாற்றிக்கொள்ளுதல் ஆகிய கேடான குணங்களைக் கொண்ட மனிதனாக மாறிவிடுகிறது. பிள்ளைகள் சிறுவர்களாக இருக்கும்போது தங்கள் தகப்பனுக்குக் கீழ்ப்படியாமல் வளருவதை நீங்கள் அனுமதித்தால், அவர்கள் பெரியவர்களாகும்போது பரலோகத்தின் தகப்பனுக்குக் கீழ்ப்படியாமல் போவதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டியதில்லை.*

*பெற்றோரே, நீங்கள் உங்கள் பிள்ளைகள் மீது அன்பு காட்டுவீர்களானால், அவர்களைக் கீழ்ப்படியச் செய்வதை உங்கள் குறிக்கோளாகக் கொண்டு பிள்ளை வளர்ப்பில் ஈடுபடுங்கள்.*

### 10. எப்போதும் உண்மையே பேச வேண்டுமென்கிற பழக்கத்தைக் கொண்டிருப்பவர் களாக இருக்கும்படி அவர்களுக்கு பயிற்சியளியுங்கள்.

*உண்மை பேசுதல் என்பது நாம் நினைப்பதைவிட இந்த உலகில் மிகவும் குறைவாகவே இருக்கிறது. பேசுவதெல்லாம் உண்மையே, உண்மையைத் தவிர வேறில்லை என்கிற பொன்னான விதியை நினைவில் வைத்திருப்பவர்கள் வாழ்க்கை நன்றாக இருக்கும். பொய் சொல்லுவதும், மழுப்பலாகப் பேசுவதும் மிகவும் பழமையான பாவங்கள். பொய்க்கு பிதாவாக இருப்பவன் சாத்தான். ஏவாளிடம் ஒரு துணிச்சலான பொய்யைக் கூறி ஏவாளை ஏமாற்றினவன். பாவத்தில் மனிதகுலம் விழுந்து போனது முதற்கொண்டு, ஏவாளின் பிள்ளைகள் யாவரும் இந்தப் பாவத்திலிருந்து தங்களைக் காத்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.*

உலகத்தில் எவ்வளவு பொய்யும் புரட்டும் நிரம்பி இருக்கிறதென்பதை நினைத்துப் பாருங்கள்! மிகைப்படுத்திப் பேசுவது என்பது எந்தளவுக்கு சமுதாயத்தில் பெருகிக் காணப்படுகிறது! ஒரு சாதாரண விஷயத்தைச் சொல்ல அதற்கு எத்தனை ஜோடனைகள் செய்கிறார்கள்! ஒரு விஷயத்தை சொல்கிறவருக்கு அதை அப்படியே இருப்பதுபோல் சொல்ல விருப்பமில்லையென்றால் அதிலுள்ள எத்தனை காரியங்களை ஒதுக்கிவிட்டு சொல்லுகிறார்கள்! இந்த மனிதருடைய வார்த்தைகள் முழுவதையும் நாம் நம்பலாம் என்று சொல்லக்கூடிய நபர்களை நாம் இன்றைக்கு விரல்விட்டு எண்ணிவிடலாம். உண்மை பேசுவதை பிள்ளைப் பிராயத்திலிருந்து அக்கறையோடு சொல்லி வளர்க்க வேண்டியிருக்கிறது என்றால் பாவத்தில் மனிதனுடைய நிலையைக் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்!

பழைய ஏற்பாட்டில் கடவுளைப் பற்றி சொல்லும்போது எத்தனை இடங்களிலே அவர் உண்மையுள்ளவராய் இருப்பதாய் குறிப்பிடப்பட்டிருக்கிறது தெரியுமா? மனிதனோடு அவர் உடன்படிக்கை செய்கிறபோதெல்லாம், உண்மையுள்ளவராகவே அவருடைய குணாதிசயம் நமக்கு அறிமுகப்படுத்தப்படுகிறது. அவர் தமது உண்மை நிலையிலிருந்து ஒருபோதும் வழிவிலகுவதில்லை. பொய்கூறுதலையும், மாய்மாலத்தையும் அவர் வெறுக்கிறார். இதை எப்போதும் உங்கள் பிள்ளைகளுடைய மனதில் பதியும்படியாக தொடர்ந்து சொல்லிக் கொண்டே வாருங்கள். உண்மையை சற்றுக் குறைத்து கூறினாலும் அது பொய்தான் என்பதை அவர்களுக்கு உணர்த்துங்கள். தட்டிக்கழிப்பது, எதற்கும் காரணம் கொடுப்பது, மிகைப்படுத்துவது, மழுப்புவது எல்லாமே பொய்யோடு சேர்ந்தவை என்பதை அவர்களுக்குக் கற்றுக் கொடுங்கள். அவைகளை விட்டு விலக வேண்டுமென்பதை அவர்களுக்கு வலியுறுத்துங்கள். என்ன ஆனாலும், எந்த சந்தர்ப்பத்திலும் உண்மையையே பேச வேண்டும் என்று அவர்களை உற்சாகப்படுத்துங்கள்.

நான் இந்த விஷயத்தை உங்களுக்கு வலியுறுத்துவது, பிள்ளைகள் நற்குணங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்பதற்காக மட்டுமல்ல, இது உங்களுக்கும் ஆறுதலைக் கொண்டுவருவதோடு அவர்களை எப்படி நடத்த வேண்டுமென்பதில் உங்களுக்கும் உதவியாக இருக்கும். உங்கள் பிள்ளைகளின் வார்த்தைகளில் நம்பிக்கை வைப்பதற்கு இந்த பயிற்சி உங்களுக்குப் பேருதவியாக இருக்கும். பிள்ளைகளிடம் சில சமயங்களில் காணப்படுகின்ற ஒளிவுமறைவுகளைத் தடுப்பதற்கும் இது உதவியாக இருக்கும். சிறுவயதில் இந்த விஷயத்தில் நீங்கள் அவர்களை எப்படி நடத்துகிறீர்கள் என்பதைப் பொறுத்துத்தான் அவர்கள் உங்களிடம் வெளிப்படையாகவும் உண்மையோடும் நடந்துகொள்ளுவார்கள்.

### 11. எப்போதும் நேரத்தை மீதப்படுத்துகிறவர்களாக இருக்கும்படி அவர்களைப் பழக்கப் படுத்துங்கள்.

இந்த வார்த்தைகள் வேதத்தில் காணப்படுகிறவை. இதற்கு அர்த்தம் பெரியது. நேரத்தை மீதப்படுத்திக்கொள்ளுகிறபோதுதான்

அதை வீணாக்காமல் நம்மால் நல்லபடியாக பயன்படுத்திக்கொள்ள முடிகிறது. சோம்பேறித்தனம் எப்போதுமே சாத்தானுக்கு நல்ல நண்பன். நமக்கு தீங்கு செய்வதற்கேற்ற சந்தர்ப்பங்களை சாத்தானுக்குத் தருகிற நிச்சயமான வழியாக சோம்பேரித்தனம் இருக்கிறது. சோம்பலுள்ள மனம் திறந்த வீட்டைப்போல இருக்கிறது. சாத்தான் அதன் வழியாக உள்ளே நுழையாவிட்டாலுங்கூட, நமது ஆத்துமாவுக்கு கேடு விளைவிக்கக் கூடிய தீமையான எதையாவது நமக்குள்ளே திணிக்கப் பார்ப்பது நிச்சயம்.

சிருஷ்டிக்கப்பட்டிருக்கிற எந்தப் படைப்பும் சோம்பலாக இருக்கும்படியாக படைக்கப்படவில்லை. ஊழியம் செய்வதும், வேலையில் ஈடுபடுவதும் ஒவ்வொரு படைப்புயிருக்கும் கடவுளால் நியமிக்கப்பட்டிருக்கும் ஒழுக்கமாயிருக்கிறது. பரலோகத்தில் இருக்கின்ற தூதர்களுக்கும் அன்றாடம் வேலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. கடவுளின் சித்தத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிற ஊழியர்கள் அவர்கள். ஏதேன் தோட்டத்தில் ஆதாம் வேலை செய்யவேண்டியிருந்தது. நிலத்தைப் பண்படுத்தும்படியாக ஆதாம் நியமிக்கப்பட்டிருந்தார். மீட்கப்பட்ட பரிசுத்தவான்களுக்கும் பரலோகத்தில் வேலை இருக்கிறது. தங்களை மீட்டுக் கொண்டவரை துதித்து அவர்கள் இரவும் பகலும் ஓயாமல் பாடுவார்கள். பாவநிலையில் பலவீனத்தோடு இந்த உலகத்திலுள்ள ஒவ்வொரு மனிதனும் அன்றாடம் செய்வதற்கு ஏதாவதொரு வேலை இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவனுடைய ஆத்துமா ஆரோக்கியமில்லாததாகப் போய்விடும். நமது கைகளுக்கும் மனதுக்கும் எப்போதும் ஏதாவதொரு வேலையைக் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் சோம்பேரித்தனத்தில் நாம் எதையாவது கற்பனை செய்து ஆபத்தில் மாட்டிக்கொள்வோம்.

நமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் இந்த ஒழுக்கநிலை நமது பிள்ளைகளுக்கும் பொருந்தும். ஒன்றையும் செய்யாமல் சும்மா இருக்கும் மனிதனின் நிலை பரிதாபகரமானது! சோம்பேறித்தனத்தை யூதர்கள் எப்போதுமே பாவமாகக் கருதினார்கள். ஒவ்வொரு யூதனும் தன்னுடைய மகனை ஏதாவதொரு தொழில் செய்யப் பழக்க வேண்டும் என்பதை யூத இனம் சட்டமாகக் கொண்டிருந்தது. அதுதான் சரியானது. நம்மைவிட அவர்கள் மனிதனுடைய இருதயத்தை நன்றாக அறிந்து வைத்திருந்தார்கள்.

சோம்பேறித்தனம்தான் சோதோமை அதன் பாவநிலைக்குக் கொண்டு வந்தது. “இதோ கர்வமும், ஆகாரத் திரட்சியும், நிர்விசாரமான சாங்கோபாங்கமுமாகிய இவைகளே உன் சகோதரியாகிய சோதோமின் அக்கிரமம்” (எசேக் 16:49) என்கிறது வேதம். (இந்த வசனத்தில் “நிர்விசாரமான சாங்கோபாங்கம்” என்பது அளவற்ற சோம்பேரித்தனத்தைக் குறிக்கும் வடமொழி தழுவிய வார்த்தைப் பிரயோகம்). உரியாவின் மனைவியினிடத்தில் தாவீது செய்த பயங்கரமான பாவத்திற்கும் அவனுடைய சோம்பேறித்தனத்தையே காரணமாகப் பார்க்கிறோம் (2 சாமு 11). யோவாப், அம்மோன் புத்திரரோடு போரிட யுத்தகளம் சென்றிருக்கிறான். ஆனால் “தாவீதோ எருசலேமில் இருந்துவிட்டான்”. அது எத்தனை பெரிய சோம்பேறித்தனம் தெரியுமா? அந்தவேளையில்தான்

தாவீது பத்சேபாளைத் தவறான கண்ணோட்டத்தோடு பார்க்கிறான். அதற்குப் பின் தாவீது அடைந்த பெரும் வீழ்ச்சியை நாம் தொடர்ந்து அங்கே வேதத்தில் வாசிக்கிறோம்.

வேறு எதையும்விட அநேக பாவங்களைச் செய்ய வைக்கும் வழக்கமாக மனிதனின் சோம்பேறித்தனம் இருக்கிறது என்பதை நான் உறுதியாக சொல்லுவேன். மாம்சத்தின் கிரியைகளுக்கெல்லாம் அதுதான் தாயாக இருக்கிறது. விபச்சாரம், அசுத்தம், குடி, இருளின் செயல்பாடுகள் போன்ற இன்னும் அநேக பாவங்களுக்கெல்லாம் அது தாயாக இருக்கிறது. அவைகளைப் பட்டியல்போட்டுக் காட்ட எனக்கு இங்கு நேரமில்லை. நான் சொல்லுவது உண்மையா இல்லையா என்பதை உங்கள் மனசாட்சியே தீர்மானிக்கட்டும். நீங்கள் எதுவும் செய்யாமல் சும்மா இருக்கும்போது, உடனடியாக சாத்தான் உங்கள் மனக்கதவைத் தட்டி உள்ளே நுழைந்துவிடுவான்.

நம்மை சுற்றிலும் இருக்கிற காரியங்களும் நமக்கு இந்த பாடத்தைப் போதிக்கிறது என்று நான் நம்புகிறேன். தேங்கி நிற்கிற தண்ணீர்தான் எப்போதும் மாசு படிந்து அசுத்தமாகும். ஓடிக்கொண்டிருக்கிற தண்ணீர் எப்போதும் சுத்தமாக இருக்கும். உங்களிடம் ஏதாவது மின்சாரக் கருவி இருக்குமானால் அதை நீங்கள் அடிக்கடி பயன்படுத்த வேண்டும். அதை வெறுமனே சும்மா வைத்திருந்தால் அது சீக்கிரமாகவே பயன்படுத்த முடியாததாகப் போய்விடும். உங்களுக்கு ஒரு குதிரை இருந்தால் அதற்கு நீங்கள் உடற்பயிற்சி கொடுக்க வேண்டும். அந்தக் குதிரை சுறுசுறுப்பாக இருக்கும்போதுதான் ஆரோக்கியமாக இருக்கும். உங்களுடைய உடல் ஆரோக்கியமாக இருக்கவேண்டுமானால் நீங்கள் உடற்பயிற்சி செய்ய வேண்டும். எப்போதும் அசையாமல் ஓரிடத்தில் நீங்கள் உட்கார்ந்து கொண்டேயிருப்பீர்களானால் வெகுவிரைவிலேயே உங்கள் சரீரம் ஒத்துழைக்க மறுக்கும். அதைப் போலத்தான் நம்முடைய ஆத்துமாவும். சுறுசுறுப்போடு இயங்கி ஆத்மீக வாழ்க்கையில் முன்னேறிப் போய்க்கொண்டேயிருக்கிற ஆத்துமாவைத் தாக்குவது சாத்தானுக்கு எளிதல்ல. எப்பொழுதும் ஏதாவது உபயோகமான ஆத்மீகக் காரியங்களை செய்து கொண்டிருங்கள். அதனால் உங்கள் விரோதியான சாத்தானுக்கு உங்களுடைய இருதயத்தில் பாவக்களைகளை விதைப்பதற்கு முடியாமற் போகும்.

பெற்றோரே, இந்த காரியங்களை உங்கள் பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுங்கள். நேரத்தின் அருமையை அவர்களுக்கு விளக்குங்கள். அதை எப்படிப் பயனுள்ளவிதத்தில் பயன்படுத்துவது என்பதைக் கற்றுக் கொடுங்கள். பிள்ளைகள் சோம்பலாக இருப்பதைப் பார்த்தால் எனக்கு வருத்தமாயிருக்கும். அவர்கள் சுறுசுறுப்போடிருக்கவும், எதைச் செய்தாலும் தங்கள் முழு மனதையும் அதில் செலுத்தி அதைச் செய்கிறவர்களாகவும் இருப்பதைப் பார்ப்பதே என் விருப்பம். படித்தாலும் முழுமனதோடு படிப்பதும், விளையாடினாலும் முழுமனதோடு விளையாடுவதும் எப்போதும் சிறந்தது.

*நீங்கள் உங்கள் பிள்ளைகள் மீது அதிக அன்புகாட்டுவீர்களானால், உங்கள் குடும்பத்தில் இருக்கும் சோம்பேறித்தனத்தை முதலில் பாவமாகக் கருத ஆரம்பியுங்கள்.*

## 12. அதிக செல்லம் கொடுத்துவிடக் கூடாதென்ற பயத்தோடு பிள்ளைகளுக்கு பயிற்சி அளியுங்கள்.

இந்த விஷயத்தில்தான் நீங்கள் வேறு எந்த விஷயத்திலும் இல்லாதளவுக்கு மிகவும் கவனமாக இருக்க வேண்டும். நமது சொந்தப் பிள்ளைகளின் மீது நாம் கனிவும், பாசம் வைத்திருப்பதும் இயற்கைதான். ஆனால் அது அளவுக்கதிகமாகப் போய்விடாதபடிக்கு நீங்கள் கவனத்தோடிருக்க வேண்டும். உங்களுடைய பிள்ளைப் பாசம், உங்கள் பிள்ளைகளின் குற்றங்களை நீங்கள் கவனிக்க முடியாதபடி செய்துவிடாமலிருக்க எச்சரிக்கையாயிருங்கள். அது அவர்களைக் குறித்து மற்றவர்கள் கொடுக்கின்ற புத்திமதிகளை நீங்கள் கேட்கமுடியாதபடி செய்துவிடாமலிருக்க கவனமாயிருங்கள். பாசத்தின் காரணமாக ஆரம்பத்திலேயே அவர்களுடைய தவறான நடத்தையை நீங்கள் திருத்தாமல் போனீர்களானால், பின்னால் மனக்கஷ்டத்தோடு அவர்களைத் தண்டித்து திருத்தவேண்டிய நிலை உங்களுக்கு ஏற்படும். தண்டனை கொடுப்பதும் திருத்துவதும் யாருக்குமே மனதுக்கு சந்தோஷம் தராத ஒரு காரியம் என்பதை நான் அறிவேன். நாம் மிகவும் நேசிக்கிற ஒருவருக்கு துயரத்தைக் கொடுத்து அவர் கண்களில் கண்ணீர் வடிவதைப் பார்ப்பதைக் காட்டிலும் அதிக துக்கமான விஷயம் வேறொன்றில்லை. ஆனால் மனித இருதயம் பாவத்தோடு இருக்கிறவரையில், அதை சுமந்துகொண்டிருக்கிற பிள்ளைகளைத் திருத்தாமலேயே வளர்த்துவிடலாம் என்று கனவு காண்பது வீணான காரியம்.

கெடுத்துவிடுதல் என்ற வார்த்தை பொருளாழம் கொண்ட வருத்தந்தரும் வார்த்தை. பிள்ளைகளைக் கெடுத்துவிடுவதற்கான சுலபமான குறுக்குவழி அவர்கள் விரும்பும் வழியில் அவர்களை வளரவிடுவதுதான். அவர்களைத் தவறு செய்ய அனுமதித்து அந்தத் தவறுகளைத் தண்டித்துத் திருத்தாமல் விட்டுவிடுவது அவர்களைப் கெடுப்பதற்கான சுலபமான வழி. என் வார்த்தைகளை நம்புங்கள்! இந்தத் தவறான காரியத்தை நீங்கள் ஒருபோதும் செய்யக்கூடாது. உங்கள் பிள்ளைகளுடைய ஆத்துமாவைக் கெடுப்பது உங்கள் நோக்கமாக இருந்தாலொழிய எந்தத் துன்பம் உங்களுக்கு ஏற்பட்டாலும் உங்கள் பிள்ளைகளை அவர்கள் போக்கில் வளர விட்டுவிடாதீர்கள்.

இந்த விஷயத்தைக் குறித்து வேதாகமம் வெளிப்படையாக எதுவும் சொல்லவில்லை என்று உங்களால் கூறவே முடியாது. பின்வரும் வசனங்களைக் கவனியுங்கள். "பிரம்பைக் கையாடாதவன் தன் மகனைப் பகைக்கிறான். அவன்மேல் அன்பாயிருக்கிறவனோ அவனை ஏற்கனவே தண்டிக்கிறான்" (நீதி 13:24). "நம்பிக்கை இருக்குமட்டும் உன் மகனை சிட்சை செய். ஆனாலும் அவனைக் கொல்ல உன் ஆத்துமாவை

*எழும்பவொட்டாதே" (நீதி 19:18). "பிள்ளையின் நெஞ்சில் மதியீனம் ஒட்டியிருக்கும். அதைத் தண்டனையின் பிரம்பு அவனைவிட்டு அகற்றும்" (நீதி 22:15). "பிள்ளையை தண்டியாமல் விடாதே. அவனைப் பிரம்பினால் அடித்தால் அவன் சாகான். நீ பிரம்பினால் அவனை அடிக்கிறதினால் பாதாளத்துக்கு அவன் ஆத்துமாவைத் தப்புவிப்பாயே" (நீதி 23:13, 14). "பிரம்பும் கடிந்துகொள்ளுதலும் ஞானத்தைக் கொடுக்கும். தன் இஷ்டத்துக்கு விடப்பட்ட பிள்ளையோ தன் தாய்க்கு வெட்கத்தை உண்டு பண்ணுகிறான்." "உன் மகனை சிட்சை செய். அவன் உனக்கு ஆறுதல் செய்வான். உன் ஆத்துமாவுக்கு ஆனந்தத்தையும் உண்டாக்குவான்." (நீதி 29:15, 17).*

எவ்வளவு ஆணித்தரமானதும் வல்லமையானதுமான வார்த்தைகள் இவைகள்! அநேக கிறிஸ்தவ குடும்பங்கள் இந்த வசனங்கள் இருப்பதையே அறியாமல் இருப்பது எவ்வளவு வருத்தந்தரும் காரியம்! பிள்ளைகள் கடிந்துகொள்ளப்பட வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். ஆனால், அதை செய்பவர்களின் தொகை மிகக் குறைவு. பிள்ளைகள் திருத்தப்பட வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். ஆனால், அதை அநேகர் ஒருபோதும் செய்வதேயில்லை. பழைய ஏற்பாட்டில் இருக்கும் நீதிமொழிகள் நூல் கிறிஸ்தவர்களுக்கு பொறுத்தமற்றதோ, உபயோகமில்லாததோ அல்ல. அது பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு நமக்கு நன்மையளிப்பதற்காக எழுதப்பட்ட நூல். பவுல் எழுதிய ரோமர், எபேசியர் போன்ற நிருபங்களைப் போலவே, நாம் கற்றுக்கொள்வதற்காக கொடுக்கப்பட்டிருக்கும் நூல் நீதிமொழிகள். இந்நூல் சொல்லுகிற அறிவுரையின்படி தன்னுடைய பிள்ளைகளை வளர்த்து வராத விசுவாசி, அதில் சொல்லப்பட்டிருப்பவற்றைவிடத் தனக்கு அதிகம் தெரியும் என்று நினைத்து மாபெரும் தவறு செய்கிறான்.

தகப்பன்மார்களே, தாய்மார்களே, நான் உங்களுக்கு வெளிப்படையாகவே சொல்லுகிறேன். உங்கள் பிள்ளைகள் தவறு செய்யும்போது அவர்களை நீங்கள் ஒருபோதும் தண்டிக்கவில்லையென்றால், நீங்கள் அவர்களுக்கு பெரும் தீங்கு செய்கிறவர்களாயிருக்கிறீர்கள். உங்களை எச்சரிக்கிறேன்! ஒவ்வொரு தலைமுறையிலும் விசுவாசிகளில் பலர் இந்த விஷயத்தில்தான் அதிக தடவைகள் தவறு செய்து தங்கள் குடும்பக் கப்பலைக் கவிழ்த்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த எச்சரிப்பை விளங்கிக்கொண்டு தகுந்த நேரத்தில் புத்திசாலிகளாக நடந்து இந்த ஆபத்தை வரவழைத்துக்கொள்ளாதீர்கள் என்று உங்களுக்கு அறிவுரை சொல்லுகிறேன். ஏலி இந்தத் தவற்றைச் செய்ததை வேதத்தில் வாசிக்கிறோமல்லவா. ஏலியின் குமாரர்களாகிய ஓப்னியும் பினெகாசும் "தங்கள் மேல் சாபத்தை வரப்பண்ணுகிறதை அவன் அறிந்திருந்தும், அவர்களை அடக்காமற்போன பாவத்தினிமித்தம்" கடவுள் அக்குடும்பத்தை தண்டிக்கிறார். தன் பிள்ளைகள் செய்கிற பாவங்களுக்காக அவர்களைக் கடினமாகக் கடிந்துகொள்ளுவதை விட்டுவிட்டு, ஏலி அவர்களை மிகவும் மென்மையாகக் கண்டிக்கிறார். ஒரே வார்த்தையில் சொல்லுவதானால், ஏலி கடவுளைக் காட்டிலும் தன் குமாரர்களை அதிகமாக மதிக்கிறார்.

அதன் முடிவு என்ன? யுத்தத்தில் தன் இரண்டு குமாரர்களும் இறந்து போனதை அவர் கேட்கும்படியான நிலை ஏற்பட்டது. அவரது நரை மயிரானது துக்கத்தோடே பாதாளத்தில் இறங்கும்படியான நிலைமை ஏற்பட்டது (1 சாமு 2:22-29, 3:13) என்கிறது வேதம்.

தாவீதின் குடும்பத்திலும் இது நிகழ்ந்ததைப் பார்க்கிறோம். தாவீதின் பிள்ளைகளையும், அவர்களுடைய பாவங்களையும் வாசிக்கும்போது யாரால் வருத்தப்படாமல் இருக்க முடியும்? அம்னோனின் தகாத இச்சை, அப்சலோமின் கொலைகாரத்தனமும் கலகக் குணமும், அதோனியாவின் சதித் திட்டம் ஆகியவைகளைக் குறித்து மனவேதனைப்படாமல் இருக்க முடியுமா? கர்த்தருடைய இருதயத்துக்கேற்றவனாகிய தாவீது, தன் குடும்பத்தாரின் மூலமாக அடைந்த மனவேதனைகள் இவை. ஆனால் தாவீதின் மீது தவறே இல்லையா? தவறு இருக்கிறதென்றுதான் நான் நினைக்கிறேன். இதற்கான பதிலை அதோனியா பற்றிய சம்பவத்தில் என்னால் பார்க்க முடிகிறது. "அவனுடைய தகப்பன்: நீ இப்படி செய்வானேன் என்று ஒருக்காலும் அவனைக் கடிந்துகொள்ளவில்லை" (1 இராஜா 1:6) என்று சொல்லப்பட்டிருப்பதை அங்கே வாசிக்கிறோம். எல்லா துயரங்களுக்கும் ஒரு மூலகாரணம் இருக்கிறது. தாவீது அளவுக்கதிகமான பாசமுள்ள ஒரு தகப்பன். தன் பிள்ளைகளை அவர்களுடைய இஷ்டத்தின்படியே நடக்கவிட்ட தகப்பன். அதனால்தான் தான் விதைத்ததையே அறுக்கும்படியான நிலைமை அவனுக்கு ஏற்பட்டது.

பெற்றோரே, உங்கள் பிள்ளைகளுடைய நன்மைக்காக சொல்லுகிறேன், அவர்களிடம் அளவுக்கதிகமாக செல்லம் கொடுத்து அன்பு காட்டுவதைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். அவர்களுக்கு உண்மையில் எது நன்மையானதோ அதைத் தேடுவதே உங்களுடைய தலையாய கடமையாக இருக்கிறது என்பதை நினைவில் வையுங்கள். அதைவிட்டுவிட்டு அவர்களுடைய மனப்போக்கின்படியும், விருப்பங்களுக்கேற்றபடியும் அவர்களை வளர விடாதீர்கள். அவர்களுக்கு பயிற்சி கொடுங்கள், வேடிக்கைப் பொருளாக்காதீர்கள். அவர்களை வெறும் சந்தோஷத்திற்காக அல்ல, அவர்கள் நல்வாழ்க்கை வாழ்வதற்காக வளருங்கள்.

நீங்கள் எவ்வளவுதான் உங்களுடைய பிள்ளைகள் மேல் அன்பு காட்டினாலும், அவர்களுடைய சலன புத்திக்கும், மாறுகின்ற விருப்பங்களுக்கும் ஏற்றவிதத்தில் அவர்களுக்கு விட்டுக்கொடுத்துக் கொண்டேயிருக்கக் கூடாது. அவன் நினைத்தது நடந்துவிடும் என்பது போலவும், அவன் ஒன்றை விரும்பிவிட்டால் அது அவனுக்கு அடுத்த நொடியிலேயே கிடைத்துவிடும் என்பது போலவும் அவனை எண்ண விடாதீர்கள். உங்கள் பிள்ளைகளை சிலைகளைப் போலப் பயன்படுத்தி ஆராதிக்காதபடி எச்சரிக்கையாயிருங்கள். அப்படி அவர்களை உங்களுக்கு விக்கிரகங்களாக நடந்த ஆரம்பித்தீர்களானால், அவற்றை உடைத்து, அவர்களை உங்கள் கைகளிலிருந்து பறித்துக் கொண்டு, உங்கள் முட்டாள்தனத்தை தேவன் உங்களுக்கு வெளிப்படுத்தாமல் விடமாட்டார்.

“இல்லை” என்கிற வார்த்தையை பிள்ளைகளிடம் சொல்லுவதற்குக் கற்றுக்கொள்ளுங்கள். அவர்களுக்கு எது சரியானதில்லையோ அதை மறுப்பதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறதென்பதை அவர்களுக்குக் சுட்டிக் காட்டுங்கள். கீழ்ப்படியாவிட்டால் அவர்களைத் தண்டிப்பதற்கும் தயாராக இருப்பதை அவர்களுக்கு உணர்த்துங்கள். அவர்களைத் தண்டிக்க வேண்டும் என்ற நிலை ஏற்படுகிறபோது, அது வெறும் மிரட்டலல்ல, அதை நிச்சயம் செய்வீர்கள் என்பதை அவர்களுக்கு உணர்த்துங்கள். அநாவசியத்துக்கு மிரட்டிக்கொண்டே இருக்காதீர்கள். வெறும் மிரட்டல்கள் குற்றங்களையும் குற்றவாளிகளையும் இல்லாமலாக்காது; அதிகரிக்கவே செய்யும். கொடுக்க வேண்டிய வேளையில் மட்டும் தண்டனையைக் கொடுங்கள். ஆனால், அதை உண்மையோடும் உறுதியோடும் செய்யுங்கள். அநாவசியத்துக்கு எடுத்ததற்கெல்லாம் தண்டிப்பதும், இல்லாவிட்டால் கொடுக்கும் தண்டனை வெறும் தடவலாக இருப்பதும் மோசமான பிள்ளை வளர்ப்பு முறையாகும்.

சில பெற்றோரும், பிள்ளைகளைக் கவனிப்பவர்களும் சின்ன விஷயத்துக்கெல்லாம் பிள்ளைகளை ஒரு காரணமும் இல்லாமல் “குழப்படிக்காரர்கள்” என்று சொல்லுவதை வழக்கத்தில் வைத்திருக்கிறார்கள். அது முட்டாள்தனமான செயல். காரணங்களில்லாமல் எவரைப் பார்த்தும் குற்றப்படுத்துகின்ற வார்த்தைகளைப் பயன்படுத்தக் கூடாது.

பிள்ளைகளைத் தண்டிக்கும் விஷயத்தில் பொதுவான ஒரு திட்டத்தை என்னால் தர முடியாது. பிள்ளைகளின் குணாதிசயங்கள் ஒருவருக்கொருவர் மாறுபட்டுக் காணப்படுவதால் ஒரு பிள்ளைக்குக் கொடுக்கப்படும் கடுந்தண்டனை இன்னொரு பிள்ளைக்கு தண்டனையாகவே படாது. பிள்ளைகளை ஒருபோதும் பிரம்பைப் பயன்படுத்தி சரீரத்தில் அடிக்கக்கூடாது என்ற இந்தக்காலத்து எண்ணத்தை நான் அடியோடு எதிர்க்கிறேன். சில பெற்றோர்கள் பிரம்பைத் தேவைக்கு மேல் அதிகமாகவும், கடுமையாகவும் பயன்படுத்தி விடுகிறார்கள் என்பதை நான் அறிவேன். அது முழுத் தவறுதான். ஆனால், ஏனையோர் அதைப் பயன்படுத்த வேண்டிய அளவுக்கு பயன்படுத்துவதே இல்லை.

உங்களுடைய பிள்ளைகள் செய்யும் சிறிய சிறிய தவறுகளை “சின்ன விஷயம்தானே” என்று ஒதுக்கிவிடாதீர்கள். பிள்ளை வளர்ப்பில் அவர்களுக்கு கொடுக்கும் பயிற்சியில் சின்ன விஷயங்கள் என்று ஒன்றுமேயில்லை; எல்லா விஷயங்களும் முக்கியமானவை. எல்லாக் களைகளைப் போலவே சின்னச் சின்னக் களைகளையும் வயலில் பிடுங்கியாக வேண்டும். சின்னக் களைகளை அப்படியே விட்டுவிடுகிறபோதுதான் அவை பெரிதாகி பிரச்சனையை ஏற்படுத்தும்.

நீங்கள் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டிய விஷயங்களில் இது மிக மிக முக்கியமானது என்பதை நீங்கள் உணர வேண்டும். இந்த விஷயந்தான் உங்களுக்கு கஷ்டமானதாக இருக்கும் என்பது எனக்குத் தெரியும். சின்ன வயதிலேயே உங்கள் பிள்ளைகளின் வளர்ப்பு முறையில்

*நீங்கள் கஷ்டப்பட்டு அக்கறை காட்டாவிட்டால் வளர்ந்த பிறகு அவர்கள் உங்களுக்கு பெரிய பிரச்சனைகளை ஏற்படுத்துவார்கள். இதில் எது உங்களுக்குப் பிடித்தது என்பதை நீங்களே தீர்மானித்துக்கொள்ளுங்கள்.*

## 13. கடவுள் தம்முடைய பிள்ளைகளுக்கு எப்படி பயிற்சியளிக்கிறார் என்பதைத் தொடர்ந்து நினைத்துப் பார்த்து உங்களுடைய பிள்ளைகளுக்கு பயிற்சி கொடுங்கள்.

*கடவுள் தனக்கென மனித குலத்தில் ஒரு பகுதியைத் தெரிந்து கொண்டிருக்கிறார் என்கிறது கர்த்தரின் வேதம். அவர்கள் இந்த உலகத்தில் வாழ்கின்ற கடவுளின் குடும்பமாக இருக்கிறார்கள். தங்களுடைய பாவத்தை உணர்ந்து இயேசு கிறிஸ்துவிடம் சமாதானத்துக்காக ஓடுகின்ற பாவிகள் அனைவரும் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். இரட்சிப்புக்காக இயேசு கிறிஸ்துவை மெய்யாகவே விசுவாசிக்கின்ற நாமெல்லோருமே அவருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறோம்.*

*பரலோகத்தில் தம்மோடு இணைந்து நித்தியத்துக்கும் வாழ்வதற்காக தன்னுடைய குடும்பத்திற்கு அவர் விடாமல் பயிற்சியளித்து வருகிறார். அவர்கள் அதிகம் கனிகொடுக்கும்படியாக அவர்களைத் தொடர்ந்து திருத்தியமைக்கும் திராட்சைத் தோட்டக்காரனாக அவர் செயல்பட்டு வருகிறார். அவருடைய குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருடைய குணாதிசயங்களையும் அவர் அறிந்து வைத்திருக்கிறார். நம்முடைய மோசமான பாவங்கள், பலவீனங்கள், குறிப்பிட்ட சரீர அல்லது மனநிலை சம்பந்தமான பலவீனங்கள், நம்முடைய விசேஷ தேவைகள் எல்லாமே அவருக்குத் தெரியும். அவருக்கு நம்முடைய வேலைகள், நாம் வாழுமிடம், நம் வாழ்க்கையில் நமக்குத் துணையாக இருப்பவர்கள், நம்முடைய துன்பங்கள், நம்மைத் தாக்கும் சோதனைகள், நம்முடைய ஆசீர்வாதங்கள் அனைத்துமே தெரியும். இவற்றையெல்லாம் அவர் அறிந்திருந்து இவையெல்லாவற்றையுமே நம்முடைய நன்மைக்காக அவர் பயன்படுத்தி வருகிறார். தம்முடைய பராமரிப்பாகிய கிரியையின்படி நாம் ஒவ்வொருவரும் கனிகொடுப்பதற்கு அவசியமானவற்றை நம்முடைய தேவைகளின்படி அவர் நமக்காக நியமித்திருக்கிறார். எந்தளவுக்கு சூரிய கிரகணங்களைத் தாங்கி மழையை நம்மால் சமாளிக்க முடியுமோ, எந்தளவுக்கு கசப்பையும் இனிப்பையும் நம்மால் அநுபவிக்க முடியுமோ அந்தளவுக்கு நம் தேவைகளை அறிந்து நமக்குத் தேவையானவற்றைத் தந்து அவர் நம்மைப் பராமரிக்கிறார். இதை வாசிக்கும் பெற்றோர்களே! உங்களுடைய பிள்ளைகளை ஞானத்தோடு நீங்கள் வளர்க்க வேண்டுமானால் கடவுள் நமக்கு எப்படிப் பயிற்சியளித்துப் பராமரித்து வருகிறார் என்பதைப் பார்த்துக் கற்றுக்கொள்ளுங்கள். அவர் சகலத்தையும் நன்றாக செய்து முடிக்கிறார். ஏன் தெரியுமா? அனைத்தையும் செய்வதற்கு அவர் ஏற்றுக்கொண்டிருக்கும் திட்டம் சரியாக இருப்பதால்தான்.*

*கடவுள் தன்னுடைய மக்களுக்குத் தராமல் விட்டுவைத்திருக்கின்ற காரியங்கள் எத்தனை என்பதை எண்ணிப் பாருங்கள். சில விஷயங்களை*

சிலர் அடைய ஆசைப்பட்டும் அவற்றைக் கடைசிவரை அவர்களுக்கு கொடுக்க கடவுள் சித்தமில்லாதவராக இருக்கிறார். சிலருக்கு ஏதோ ஒன்றை வாழ்க்கையில் அடையவேண்டுமென்ற ஆசையிருந்தும், அதை அடைய முடியாதபடி எப்போதும் ஏதோவொரு தடையிருந்துகொண்டே இருக்கும். கடவுளே அதைக் கைக்கெட்டாத தூரத்தில் வைத்துவிட்டு, “இது உனக்கு நல்லதல்ல; இதை நீ அடையக்கூடாது” என்று சொல்வது போலிருக்கும். மோசே யோர்தானைக் கடந்து சென்று கர்த்தர் வாக்குத்தத்தம் செய்திருந்த அந்த செழிப்பான தேசத்தைப் பார்க்க ஆவலாயிருந்தார். ஆனால் அவருடைய விருப்பம் பூர்த்தி செய்யப்படவேயில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள்.

நம்முடைய கண்களுக்கு இருண்டதாகவும், புதிராகவும் தென்படுகின்ற பாதைகளின் வழியாக கடவுள் தன்னுடைய பிள்ளைகளை எத்தனை தடவை வழிநடத்திச் சென்றிருக்கிறார் என்பதை நினைத்துப் பாருங்கள். நம்மை அவர் வழிநடத்திச் செல்லும் முறைகளின் அர்த்தத்தை நம்மால் புரிந்துகொள்ள முடியாமலிருக்கும். வாழ்க்கையில் நாம் நடந்து போகின்ற வழிகளின் தன்மையை நாம் விளங்கிக்கொள்ளாமல் இருப்போம். சில வேளைகளில் எத்தனையோ துன்பங்கள் நம்மைத் தாக்கியிருக்கின்றன; எத்தனையோ கஷ்டங்கள் நம்மைச் சுற்றி வளைத்திருக்கின்றன. அவையெல்லாம் நம் வாழ்க்கையில் ஏன் நடக்க வேண்டும் என்பதற்கான காரணங்களை நம்மால் அறிந்துகொள்ள முடியாமல் போயிருக்கின்றது. நம் பிதா நம் கைகளைப் பிடித்து இருண்ட ஓரிடத்திற்கு அழைத்துப்போய், “கேள்விகள் எதுவும் கேட்காமல் என்னைப் பின்தொடரு” என்று சொல்லுவது போலிருக்கிறது. எகிப்திலிருந்து கானானுக்குச் செல்ல சுலபமான பாதை இருந்திருக்கிறது. ஆனால் இஸ்ரவேலரோ அந்த வழியிலே அழைத்துச் செல்லப்படவில்லை. வனாந்திரம் வழியாக சுற்றிக்கொண்டு போகவேண்டியிருந்தது. பல சமயங்களில் இது நமக்கு மிகவும் கடினமானதாக இருக்கிறது. “வழியினிமித்தம் ஜனங்கள் மனமடிவடைந்தார்கள்” (யாத் 13:17, எண் 21:4) என்று வேதம் சொல்லுவதை நாம் வாசிக்கிறோம்.

துன்பங்களின் மூலமாகவும், துயரங்களின் மூலமாகவும் கடவுள் தம்முடைய ஜனங்களை எப்படியாக சிட்சிக்கிறார் என்பதைப் பாருங்கள். அவர்கள் சுமக்கும்படியாக வாழ்க்கையில் சிலுவைகளையும், ஏமாற்றங்களையும் அனுப்புகிறார். நோய்களின் மூலமாக அவர்களைத் தாழ்த்துகிறார். அவர்களுடைய சொத்துக்களையும், நண்பர்களையும் இல்லாமல் செய்கிறார். அவர்களை ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைமைக்கு மாற்றுகிறார். சரீரத்தில் தாங்க முடியாத அனுபவங்களை அவர்கள் அனுபவிக்கும்படிச் செய்கிறார். நமக்கு ஏற்படும் அப்படியான அனுபவங்களைத் தாங்க முடியாமல் நம்மில் சிலர் மயக்கமடையும் நிலைக்குக் கூட வந்துவிடுகிறோம். நம் வல்லமைகளுக்கெல்லாம் மேலான அத்தகைய துன்பங்களைத் தாங்க முடியாமல் இவற்றை அனுமதித்து நம்மைச் சிட்சை செய்யும் கரத்தை நோக்கி நாம் முறுமுறுக்க ஆரம்பித்து விடுகிறோம். அப்போஸ்தலனாகிய பவுலுக்கு வாழ்க்கையில் ஒரு முள்

கொடுக்கப்பட்டிருந்தது. அது மிகவும் கசப்பான ஏதோவொரு சரீர கஷ்டம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அது என்னவென்பது உண்மையில் நமக்குத் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் நமக்குத் தெரியும். அது தன்னைவிட்டு நீங்கும்படியாக, பவுல் மூன்று முறை கடவுளிடம் வேண்டிக் கொண்டார். ஆனாலும் அது நீக்கப்படவேயில்லை (2 கொரி 12:8, 9).

இதை வாசிக்கின்ற பெற்றோர்களே, இவை எல்லாம் இப்படியாக இருந்தபோதும், தேவனுடைய பிள்ளைகளில் யாராவது, தங்களுடைய பிதா தங்களை ஞானமாக நடத்தவில்லை என்று நினைத்ததுண்டா? இல்லவேயில்லை. நீங்களும்கூட அப்படி நினைக்க மாட்டீர்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். தங்களுடைய விருப்பத்தைக் கடவுள் நிறைவேற்றாமல் போனது மிகவும் நல்லதாகப் போயிற்று என்றும், தங்களுக்கு தாங்களாகவே செய்துகொள்ளுகிற நன்மைகளைவிடக் கடவுள் மிகப் பெரியளவுக்கு ஆசீர்வாதங்களை அளித்திருக்கிறார் என்றும் கடவுளின் பிள்ளைகள் நிச்சயமாகச் சொல்லுவார்கள். கடவுளின் வழிநடத்தலால் பெற்றுக்கொண்டிருக்கும் சந்தோஷமே, தங்களுடைய இஷ்டத்தின்படியாக வரக்கூடிய சந்தோஷங்களைவிட அதி மேன்மையானது என்பதையும் அவர்கள் தெரிவிப்பார்கள். சில சமயங்களில் அவருடைய வழிநடத்தல் விளங்கிக்கொள்ள முடியாதபடி இருந்தாலும், அவருடைய வழிகளே சந்தோஷமானவையும், சமாதானப் பாதையாகவும் இருக்கின்றது என்பார்கள்.

கடவுள் தம்முடைய பிள்ளைகளை நடத்துகின்ற விதத்தின் மூலம் உங்களுக்கு கற்றுக் கொடுக்கின்ற பாடத்தை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். உங்களுடைய பிள்ளைகளுக்கு தீங்கு விளைவிக்கும் என்று நீங்கள் கருதுகின்ற எதையும் உங்கள் பிள்ளைகள் அடையாதபடி நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள். உங்கள் பிள்ளைகள் அதைப்பற்றி என்ன நினைத்தாலும் நீங்கள் இதைச் செய்யத்தான் வேண்டும். அதுவே கர்த்தருடைய திட்டம்.

உங்களுடைய கட்டளைகளில் இருக்கின்ற ஞானத்தை விளங்கிக் கொள்வதற்குத் தேவையான அறிவு உங்களுடைய பிள்ளைக்கு இப்போது இல்லையென்றாலும் கட்டளையிடத் தயங்காதீர்கள். நீங்கள் காட்டுகின்ற வழிமுறைதான் சரியானதென்று இப்போது அவனுடைய மனது ஏற்க மறுத்தாலும், உங்கள் வழிமுறைகளைக் கைவிடாதீர்கள். இதுவே கடவுளின் திட்டம்.

பிள்ளையின் ஆத்மீக நலனுக்குத் தேவையான சிட்சைகளையும், திருத்துதல்களையும் தேவையான வேளைகளில் செய்வதற்கு ஒருபோதும் தயங்காதீர்கள். அது எவ்வளவுதான் உங்களுக்கு மனக்கஷ்டத்தைக் கொடுத்தாலும் அதைச் செய்யாமல் விட்டுவிடாதீர்கள். ஆத்மீக நலனுக்குத் தேவையான மருந்துகளை, அவை எவ்வளவுதான் கசப்பானதாக இருந்தாலும் பிள்ளைகளுக்குக் கொடுக்காமல் விட்டுவிடக்கூடாது என்பதை நினைவில் வைத்திருங்கள். இது கடவுளின் திட்டம்.

எல்லாவற்றிற்கும் மேலாக, இந்தவிதமான பயிற்சியைக் கொடுப்பது உங்களுடைய பிள்ளைகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தாது என்பதை நினைத்துப் பயப்படாதீர்கள். இந்த மாயையான எண்ணத்தைப் பற்றி நான் உங்களை எச்சரிக்க விரும்புகிறேன். நமது சொந்த விருப்பப்படி நடப்பதே நமக்கு அதிக துக்கத்தை உண்டுபண்ணும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. நம்முடைய விருப்பங்கள் சோதிக்கப்பட்டு அவை அனுமதிக்கப்படாவிட்டால் அதுவே நமக்கு ஆசீர்வாதமானது. இது நடக்கும்போதுதான் உண்மையான சந்தோஷத்தை நாம் மதிக்கக் கற்றுக்கொள்வோம். தொடர்ந்து சுய இச்சைப்படி நடப்பது சுயநலத்துக்கு அடையாளம். சுயநலவாதிகளும், திருத்தத்தோடு வளர்க்கப்படாத பிள்ளைகளும் மகிழ்ச்சியாக இருந்ததேயில்லை.

இதை வாசிக்கிறவர்களே, கடவுளைவிட நீங்கள் புத்திசாலிகள் என்று எண்ணாமலிருங்கள். அவர் தம்முடைய பிள்ளைகளுக்கு பயிற்சி கொடுப்பது போல நீங்களும் உங்கள் பிள்ளைகளுக்குப் பயிற்சி அளியுங்கள்.

## 14. உங்களுடைய இடைவிடாத முன்மாதிரியான நடத்தை உங்களுடைய பிள்ளைகளில் ஏற்படுத்தக்கூடிய செல்வாக்கை மனதில் வைத்திருந்து பிள்ளைகளுக்குப் பயிற்சி அளியுங்கள்.

உங்களுடைய வாழ்க்கையின் மூலம் மற்றவர்களுக்கு நீங்கள் முன்மாதிரியாய் இருக்காவிட்டால் எந்தப் போதனையாலும், புத்தி சொல்லுதலாலும், கட்டளையாலும் எவருக்கும் பயனிருக்க முடியாது. உங்களுடைய வாழ்க்கை நடவடிக்கைகள் நீங்கள் கொடுக்கும் ஆலோசனைகளுக்கு எதிர்மறையாக இருக்குமானால் நீங்கள் கொடுக்கும் கட்டளைகளுக்கு கீழ்ப்படிய வேண்டுமென்று நீங்கள் உண்மையிலேயே விரும்புகிறீர்கள் என்று உங்கள் பிள்ளைகள் நம்ப மாட்டார்கள். டிலொட்சன் (Tillotson) என்கிற ஆர்ச் பிஷப் ஓர் அருமையான கருத்தைச் சொல்லியிருக்கிறார்: “பிள்ளைகளுக்கு நல்ல அறிவுரைகளை வழங்கிவிட்டு அவர்களுக்கு மோசமான முன்மாதிரியாக நடப்பது எப்படி இருக்கிறது தெரியுமா? தலையை உயர்த்தி அவர்களுக்கு மோட்சத்தின் பாதையைக் காண்பித்துவிட்டு, கைகளால் அவர்களைப் பிடித்துக் கொண்டு நரகத்தின் பாதையில் அழைத்துச் செல்வதற்கு ஒப்பாக இருக்கிறது.”

முன்மாதிரிக்குள்ள சக்தியையும் வலிமையையும் பற்றி நமக்கு அதிகம் தெரியாது. இந்த உலகில் யாருமே தனக்குத் தானே வாழ முடியாது. ஏதாவதொரு வகையில் நாம் நம்மைச் சுற்றி இருப்பவர்களில் பாதிப்பை ஏற்படுத்துகிறோம். அந்தப் பாதிப்பு நல்லதாகவோ அல்லது கேடானதாகவோ, கடவுளுக்காகவோ அல்லது பாவத்திலோ போய் முடியும். நம்மைச் சுற்றி இருப்பவர்கள் நமது வழிகளைப் பார்க்கிறார்கள், நமது குணத்தை கவனிக்கிறார்கள். நமது நடத்தையைக் காண்கிறார்கள். நாம் பின்பற்றுகிற வழிமுறைகளைப் பார்த்து, நாம் ஒருவிதத்தில் சரியானபடிதான் சிந்திக்கிறோம் என்று தீர்மானிக்கிறார்கள்.

முன்மாதிரியின் வலிமையை நான் வேறெதிலும் இல்லாத விதத்தில் பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக இருக்கும் விஷயத்தில் காண்கிறேன்.

தாய், தகப்பன்மாரே, பிள்ளைகள் தங்கள் காதுகளால் கேட்டுக் கற்றுக்கொள்வதைக் காட்டிலும் கண்களால் பார்த்துக் கற்றுக்கொள்வதே அதிகம். வீடு பிள்ளைகளின் குணத்தில் ஆழமாகப் பதிக்கும் முத்திரையைப்போல பள்ளிக்கூடம் பதிப்பதில்லை. அடுப்படியில் இருந்து பிள்ளைகள் உங்களிடம் கற்று மனதில் பதிய வைத்துக்கொள்கிறவைகளை மிகச் சிறந்த பாடசாலை ஆசிரியர்களாலும் அவர்களுக்குக் கொடுக்க முடியாது. மனனம் செய்து கற்பதை விட ஒருவருடைய நடத்தையைப் பார்த்துக் கற்றுக்கொள்வது பிள்ளைகள் விஷயத்தில் நல்ல கொள்கையாகும். பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுத்து செய்ய வைப்பதைவிட, நாம் செய்து காண்பிப்பது அதிக பலனைத் தரும்.

நீங்கள் பிள்ளைகளுக்கு முன் எப்படி நடந்துகொள்கிறீர்கள் என்பதைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். “பிள்ளைக்கு முன்பாக பாவம் செய்கிறவன் இரு மடங்கான பாவம் செய்கிறான்” என்பது உண்மையான பழமொழி. உங்கள் குடும்பத்தார் எளிதாக உங்களைப் படித்து விளங்கிக்கொள்ளக்கூடிய கிறிஸ்துவின் நிருபமாக வாழுவதற்கு நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். கடவுளின் வார்த்தைக்கு மதிப்புக்கொடுப்பதில் உதாரணமாக இருங்கள். ஜெபத்தில் முன்னுதாரணமாக இருங்கள். கிருபையின் சாதனங்களை மதித்துப் பயன்படுத்துவதில் எடுத்துக்காட்டாக இருங்கள். கர்த்தருடைய நாளுக்கு மதிப்புக்கொடுத்து அதை அநுசரிப்பதில் நற்சாட்சியாக இருங்கள். வார்த்தையிலும், பொறுமையிலும், சுறுசுறுப்பிலும், தன்னடக்கத்திலும், விசுவாசத்திலும், கருணையிலும், அன்பிலும், தாழ்மையிலும் நல்ல எடுத்துக்காட்டாக இருங்கள். நீங்கள் செய்து காண்பிக்காத எந்த காரியத்தையும் உங்கள் பிள்ளைகள் செய்வார்கள் என்று எதிர்பார்க்காதீர்கள். நீங்கள்தான் அவர்களுடைய மாதிரிப் படிவம். உங்களைப் பார்த்துத்தான் அவர்களும் நடப்பார்கள். நீங்கள் கொடுக்கும் காரணங்கள், உங்களுடைய உபதேசங்கள், உங்களுடைய ஞானமுள்ள கட்டளைகள், இவை எல்லாவற்றையும் அவர்கள் விளங்கிக்கொள்ளாவிட்டாலும், உங்களுடைய வாழ்க்கையைப் பார்த்து அவர்கள் கற்றுக்கொள்வார்கள்.

பிள்ளைகள் மிக சீக்கிரமாக எதையும் கவனித்து உணர்ந்துகொள்ளக் கூடியவர்கள். ஏதாவது மாய்மாலம் தென்பட்டால் உடனே அறிந்துகொள்வார்கள். உங்கள் சிந்தனைகளையும், உணர்ச்சிகளையும் விரைவில் கண்டுபிடித்து விடுவார்கள். உங்களுடைய வழிகளையும், கருத்துக்களையும் வெகு சீக்கிரமாக ஏற்று நடக்கக்கூடியவர்கள். தகப்பன் எப்படியோ மகனும் அப்படித்தான் என்பதை அடிக்கடி கவனிப்பீர்கள்.

போரின்போது மாவீரன் சீஸர் தனது போர்வீரர்களிடம் எப்போதும் சொல்கிற வார்த்தையை மனதில்கொள்ளுங்கள். அவர்களிடம் “நீங்கள்

முன்னால் போங்கள்" என்று சொல்லாமல் "வாருங்கள்" என்றுதான் சீஸர் எப்போதும் சொல்வாராம். உங்கள் பிள்ளைகளை வளர்க்கும் பயிற்சியிலும் நீங்கள் இதைத்தான் கடைப்பிடிக்க வேண்டும். நீங்கள் வெறுக்கின்ற பழக்கவழக்கங்களை அவர்கள் சிறிதும் கற்றுக்கொள்ள மாட்டார்கள். நீங்கள் செல்லாத பாதையிலே அவர்கள் செல்ல மாட்டார்கள். தான் பின்பற்றாத பழக்கவழக்கங்களை தனது பிள்ளைகளுக்கு போதிக்கிறவன், முன்னோக்கிப் போகாத ஒரு வேலையை செய்கிறவனைப் போல இருப்பான். தாம் நல்ல முன்மாதிரியாக இருக்காமல், பிள்ளை வளர்ப்பில் ஈடுபடுகிற பெற்றோர் எதற்கு ஒப்பாயிருக்கிறார்களென்றால் ஒரு கையால் ஒரு கட்டிடத்தைத் கட்டி, மறு கையால் அதை இடித்துத் தள்ளுகிறவனுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்.

## 15. பாவத்தின் வல்லமையை எப்போதும் உணர்ந்தவர்களாக பிள்ளைகளுக்குப் பயிற்சி கொடுங்கள்.

வேத போதனைகளை மீறிய எதிர்பார்ப்புகள் எதுவும் உங்களில் இருந்துவிடாதபடி இதை சுருக்கமாக விளக்கப் போகிறேன்.

உங்களுடைய பிள்ளைகளின் மனது சுத்தமான வெள்ளைக் காகிதமாக இருப்பதாகவும், சரியான சாதனங்களை மட்டும் உபயோகித்தால் எந்த பிரச்சனையும் ஏற்பட வழி இல்லை என்ற கற்பனையோடு வாழாதீர்கள். அது வெறும் கற்பனையென்று வெளிப்படையாகவே உங்களை நான் எச்சரிக்க விரும்புகிறேன். இளம் பிள்ளையின் இருதயத்தில் எவ்வளவு களங்கமும், தீங்கும் இருக்கிறதென்பதையும், அது எத்தனை வேகமாக தன்னுடைய கனிகளைக் கொடுக்க ஆரம்பிக்கிறது என்பதையும் நாம் வெளிப்படையாகவே பார்க்க முடியும். முரட்டுத்தனமான கோபங்கள், பிடிவாதம், பெருமை, பொறாமை, பேச மறுத்தல், இச்சை, சோம்பல், சுயநலம், ஏமாற்றுதல், தந்திரம், நேர்மையின்மை, மாய்மாலம், தீயவைகளைக் கற்றுக்கொள்ள மிகுந்த சுறுசுறுப்பு காட்டுதல், நல்லவைகளைக் கற்றுக்கொள்ள மிதமிஞ்சிய தாமதம் காட்டுதல், தங்கள் விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்ள எதை வேண்டுமானாலும் செய்கிற தன்மை, இவைகளில் ஒரு சிலவற்றையோ அல்லது அனைத்தையுமோ உங்களுடைய சரீரமும், இரத்தமுமாயிருக்கின்ற உங்களுடைய பிள்ளைகளிடம் காண்பதற்கு தயாராக இருங்கள். மிகச் சிறு வயதிலேயே இவைகள் அவர்களில் வெளிப்படுவதைக் காண்பீர்கள். எத்தனை இயல்பாக இவைகள் அவர்களில் துளிர்விட்டு எழுகின்றன என்பதைக் காண அதிர்ச்சியாயிருக்கிறது. பாவத்தைக் கற்றுக்கொள்வதற்கு பிள்ளைகளுக்கு ஒரு பள்ளிக்கூடம் அவசியம் இல்லை.

ஆனால், நீங்கள் உங்கள் பிள்ளைகளில் பார்ப்பவற்றைக் குறித்து சோர்வடைந்தோ மனம் முறிந்தோ போகக்கூடாது. அந்த சின்னஞ்சிறு இருதயம் பாவத்தினால் நிரம்பி இருப்பதைப் பார்த்து அதை இருக்கக் கூடாததொன்றாகவோ அல்லது இயற்கைக்குப் புறம்பான அதிசயமான

*காரியமாகவோ எண்ணக்கூடாது. நமது ஆதிப்பிதாவாகிய ஆதாம் நமக்கு அளித்திருக்கும் ஒரே பங்கு அதுதான். அந்த பாவ இயல்போடுதான் நாம் இந்த உலகில் பிறந்திருக்கிறோம். நம் எல்லோருக்கும் சொந்தமான சொத்து அது. இந்த உண்மை கடவுளின் ஆசீர்வாதத்தோடு இன்னும் அதிகமாக கிருபையின் சாதனங்களை நீங்கள் உபயோகித்து பாவத்தோடு போராட உங்களைத் தூண்டட்டும். உங்கள் பிள்ளைகள் சோதனைகளில் விழுந்துவிடாதபடிக்குத் தடுப்பதற்கு நீங்கள் மேலும் மேலும் அதிக கவனமுள்ளவர்களாக இருக்க இந்த உண்மை உதவட்டும்.*

*உங்கள் பிள்ளைகள் நல்லவர்களென்றும், அவர்கள் நன்றாக வளர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்றும், அவர்கள் நம்பத் தகுந்தவர்களென்றும் உங்களிடம் எவராவது சொன்னால் அதை நம்பாதீர்கள். அதற்கு மாறாக, உங்கள் பிள்ளைகளின் இருதயம் எளிதில் தீப்பற்றிவிடக் கூடிய கந்தகம் போலிருக்கிறது என்பதை நினைவில் வைத்திருங்கள். அவர்களுடைய கபடம் வெடித்துச் சிதற ஒரு தீப்பொறி மட்டுமே தேவை என்பதை உணருங்கள். இக்காலங்களில் பெற்றோர்கள் மிகவும் எச்சரிக்கையாயிருப்பதைக் காண்பது அரிதாயிருக்கிறது. பிள்ளைகள் சுபாவத்திலேயே வழிவிலகினவர்களாக இருக்கிறார்கள் என்பதை மறவாது எச்சரிக்கையாயிருங்கள்.*

## 16. வேத வாக்குத்தத்தங்களை எப்போதும் நினைவில் வைத்தவர்களாக பிள்ளைகளுக்கு பயிற்சியளியுங்கள்.

*நீங்கள் உற்சாகமிழந்து விடாதபடிக்கு இதையும் சுருக்கமாகக் கூறுகிறேன்.*

*உங்களுக்கு எளிமையான வாக்குத்தத்தமொன்று கொடுக்கப் பட்டிருக்கின்றது: "பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து. அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்" (நீதி 22:6). இம்மாதிரியான உறுதிமொழிகளை நீங்கள் பெற்றிருப்பது பற்றி சிந்தித்துப் பாருங்கள். வேதாகமம் எழுதப்படுவதற்கு முன்பாக, இம்மாதிரியான வாக்குத்தத்தங்களே நமது ஆதிப்பிதாக்களின் இருதயத்திற்கு நம்பிக்கையைக் கொடுக்கும் வெளிச்சமாக இருந்திருக்கிறது. ஏனோக்கு, நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு போன்றவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஒரு சில வாக்குத்தத்தங்களை நம்பி வாழ்ந்தே ஆவியில் ஆசீர்வாதமுடையவர்களாக இருந்தனர். வாக்குத்தத்தங்கள்தான் ஒவ்வொரு சந்ததியிலுமுள்ள விசுவாசிகளுக்கு ஆதரவையும் பெலனையும் அளிக்கும் பானமாக இருந்திருக்கிறது. இம்மாதிரியான எளிமையான வசனங்கள் ஒருவனுக்கு இருக்கும்போது அவன் சோர்வடைய வேண்டியதில்லை. பெற்றோர்களே, உங்களுடைய இருதயம் சோர்வுற்று, இனியும் முடியாது என்று நீங்கள் எண்ணும்போது இந்த வார்த்தைகளை வாசித்துப் பார்த்து ஆறுதல் அடையுங்கள்.*

*இந்த வாக்குத்தத்தத்தை தந்திருக்கிறவர் யாரென்று சிந்தித்துப்*

*பாருங்கள். பொய் சொல்லவும், மனம் மாறவும் கூடிய மனிதனுடைய வார்த்தைகளல்ல இவை. என்றென்றும் மாறாதவராயிருக்கிற ராஜாதி ராஜாவினுடைய வார்த்தைகள் இவை. அவரொன்றைச் சொல்லி அதைச் செய்யாமலிருந்திருக்கிறாரா அல்லது அவரொன்றைப் பேசி அதை நல்லவிதமாக நிறைவேறாமல் செய்திருக்கிறாரா? அவரால் நிறைவேற்ற முடியாதது எதுவுமேயில்லை. மனிதனால் முடியாத அனைத்தையும் கடவுள் நிறைவேற்றுவார். வாசகர்களே! நாம் வாசிக்கின்ற வாக்குத்தத்தங்களின் பலனை நாம் அடையாமல் இருந்தால் தவறு கடவுளில் இல்லை; நம்மில்தான் இருக்கிறது.*

*வாக்குத்தத்தங்களின் மூலம் ஆறுதலடைவதை விட்டுவிடுவதற்கு முன் அவற்றில் என்ன சொல்லியிருக்கிறது என்று ஒரு தடவை சிந்தித்துப் பாருங்கள். பிள்ளைகளுக்கு கொடுக்கப்படும் நல்ல பயிற்சியின் காரணமாக பலன் கிடைக்கும் ஒரு குறிப்பிட்ட காலத்தை அது விளக்குகிறது. "அவன் முதிர் வயதிலும்" என்றிருப்பதை சிந்தியுங்கள். இந்த வார்த்தைகளில் நிச்சயம் ஆறுதல் இருக்கிறது. கவனத்தோடு பிள்ளைகளை வளர்க்கும்போது அதன் பலனை நீங்கள் கண்கூடாக உடனடியாகப் பார்க்க முடியாமல் போகலாம். ஆனால், நீங்கள் மடிந்துபோன பிறகு அத்தகைய வளர்ப்பு முறை என்னவிதமான ஆசீர்வாதமான கனிகளைத் தரும் என்பது உங்களுக்குத் தெரியாது. எதையும் உடனடியாகக் கொடுத்துவிடுவது கடவுளின் வழக்கம் அல்ல. "பிற்பாடு" தான் அவர் எதையும் செய்யத் தீர்மானிக்கிறவராக இருக்கிறார். இயற்கையைப் பொறுத்தவரையிலும், கிருபையைப் பொறுத்தவரையிலும் இந்தவிதத்தில்தான் கடவுள் செயல்படுகிறார். சிட்சையானது "பிற்காலத்தில்தான்" நீதியாகிய சமாதான பலனைத் தரும் (எபி 12:11) என்கிறது வேதம். தகப்பனுடைய திராட்சைத் தோட்டத்திலே வேலை செய்ய மறுத்த மகன், "பின்பு" தான் மனந்திருந்தி தகப்பனிடம் போனான் (மத் 21:29). உடனடியாக பலனைக் காணாவிட்டாலும் "பிற்பாடு" அதை அடைய முடியும் என்று பெற்றோர் எதிர்பார்ப்போடு காத்திருக்க வேண்டும். நீங்கள் நம்பிக்கையோடு விதைக்க வேண்டும். நம்பிக்கையோடு நடக்க வேண்டும்.*

*"உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள்மேல் போடு. அநேக நாட்களுக்குப் பின்பு அதன் பலனைக் காண்பாய்" (பிரசங்கி 11:1) என்று ஆவியானவர் சொல்லுகிறார். பெற்றோர் உயிரோடிருந்த காலத்தில் நல்ல பிள்ளை வளர்ப்பின் அடையாளங்களை வாழ்க்கையில் காட்டாத அநேக பிள்ளைகள் நியாயத்தீர்ப்பு நாளில் எழும்பி, தங்களுக்கு நல்ல பயிற்சி அளித்த பெற்றோருக்கு நன்றி தெரிவிப்பார்கள் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. ஆகவே நம்பிக்கையோடு அவர்களுக்கு பயிற்சி அளியுங்கள். நீங்கள் செய்கின்ற எதுவும் பலனில்லாமல் போகாது. அந்த விதவையின் பிள்ளையின் மீது எலியா மூன்று முறை குப்புறப்படுத்து எழுந்த பின்புதான் அந்தப் பிள்ளைக்கு உயிர் வந்தது. இதை உதாரணமாக வைத்து விடாமுயற்சி செய்யுங்கள்.*

## 17. இறுதியாக, நீங்கள் எடுக்கின்ற அத்தனை முயற்சிகளும் ஆசீர்வதிக்கப்படும்படி தொடர்ந்து ஜெபத்தோடு பிள்ளைகளுக்கு பயிற்சி அளியுங்கள்

*கடவுளின் ஆசீர்வாதம் இல்லாமல் நீங்கள் எவ்வளவுதான் நல்ல முயற்சி எடுத்தாலும் பிரயோஜனமில்லை. எல்லா மனுஷருடைய இருதயமும் அவருடைய கைகளில் இருக்கிறது. தமது பரிசுத்த ஆவியினால் அவர் உங்கள் பிள்ளைகளுடைய இருதயத்தைத் தொடாவிட்டால், உங்கள் முயற்சி பலனற்று நீங்கள் சோர்ந்து போவீர்கள். நீங்கள் விதைத்த விதை வளரும்படியாக இடைவிடாமல் அவர்களுடைய இருதயத்தில் ஜெபம் என்கிற தண்ணீரை ஊற்றுங்கள். நாம் ஜெபிப்பதைக் காட்டிலும் அதிகமாக செய்வதற்கு கடவுள் விரும்புகிறார். நாம் கேட்பதற்கும் மேலாக ஆசீர்வாதங்களை அள்ளிக் கொடுப்பதற்கு அவர் தயாராக இருக்கிறார். இருந்தாலும் நாம் நமது பிள்ளைகளுக்காக ஜெபிப்பதைக் கேட்பதற்கு அவர் விரும்புகிறார். ஜெபமாகிய இந்த விஷயத்தை நீங்கள் செய்கிற எல்லா காரியத்துக்கும் தலையானதாகவும், முத்திரையாகவும் வைக்கும்படி புத்தி சொல்லுகிறேன். அதிகமான ஜெபத்தோடு வளர்க்கப்பட்ட பிள்ளை கைவிடப்படுவது மிகவும் அரிது என்பது என் கருத்து.*

*யாக்கோபு தன்னுடைய பிள்ளைகளை பார்த்த விதமாகவே நீங்களும் உங்கள் பிள்ளைகளைப் பாருங்கள். யாக்கோபு ஏசாவிடம் சொல்லுகிறார்: "தேவன் உமது அடியானுக்கு அருளின பிள்ளைகள்" (ஆதி 33:5) என்று. யோசேப்பு தன் பிள்ளைகளைப் பார்த்தது போல உங்கள் பிள்ளைகளைப் பாருங்கள். அவர் தன் தகப்பனிடம் சொல்லுகிறார், "இவர்கள் இவ்விடத்திலே தேவன் எனக்கு அருளின குமாரர்" (ஆதி 48:9) என்று. சங்கீதக்காரன் சொல்லுவது போல "பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம். கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்" (சங் 127:3) என்று எண்ணுங்கள். அதன் பின் கர்த்தரிடம், பரிசுத்த தைரியத்துடனே, அவர் அருளின இந்த வெகுமதிகளிடம் கிருபையும் இரக்கமும் காட்டுமாறு வேண்டிக்கொள்ளுங்கள். ஆபிரகாம் இஸ்மவேலை நேசித்தபடியினால் அவனுக்காக எப்படி வேண்டிக்கொள்கிறாரென்று பாருங்கள். "இஸ்மவேல் உமக்கு முன்பாகப் பிழைப்பானாக" (ஆதி 17:18) என்று ஆபிரகாம் கேட்கிறார். சிம்சோனைக் குறித்து மனோவா தூதனிடம் என்ன கேட்கிறாரென்று கவனியுங்கள். "அந்தப் பிள்ளையை எப்படி வளர்க்க வேண்டும்? அதை எப்படி நடத்த வேண்டும்?" (நியா 13:12) என்று கேட்பதைப் பார்க்கிறோம். தனது பிள்ளைகளின் ஆத்துமாக்களைக் குறித்து யோபு எவ்வளவு அக்கறையாக இருக்கிறார் என்று பாருங்கள். "ஒருவேளை என் குமாரர் பாவம் செய்து, தேவனைத் தங்கள் இருதயத்திலே தூஷித்திருப்பார்கள் என்று சொல்லி, அவர்களை அழைத்தனுப்பி, பரிசுத்தப்படுத்தி, அதிகாலமே எழுந்து, அவர்கள் எல்லாருடைய இலக்கத்தின்படியேயும் சர்வாங்க தகனபலிகளை செலுத்துவான். இந்தப் பிரகாரமாக யோபு அந்த நாட்களி லெல்லாம் செய்து வருவான்" (யோபு 1:5) என்கிறது வேதம். பெற்றோரே, நீங்கள் உங்கள் பிள்ளைகள் மேல் அன்பு காட்டுவீர்களானால் இவர்களைப் போலவே ஜெபியுங்கள். உங்கள் பிள்ளைகளுக்காக கடவுளுக்கு முன்பாக நீங்கள் ஜெபிக்க வேண்டிய ஜெபங்களுக்கு எல்லையேயில்லை.*

## முடிவுரை

வாசகர்களே, கடைசியாக உங்கள் பிள்ளைகளை பரலோகத்துக்குரிய வாழ்க்கைக்கு பயிற்சி கொடுத்து வளர்க்க வேண்டுமானால், உங்கள் அதிகாரத்துக்குட்பட்டிருக்கிற சகலவிதமான கிருபையின் சாதனங்களையும் நீங்கள் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

கடவுள் சர்வ வல்லமையுடையவர் என்பதையும், தன் சித்தத்தின் ஆலோசனையின்படி சகலத்தையும் செய்கிறவர் என்பதையும் நான் அறிவேன். ரெகொபெயாம் சாலமோனின் குமாரன் என்பதையும், மனாசே எசேக்கியாவின் குமாரன் என்பதையும் தேவபக்தியுள்ள பெற்றோருக்கு எப்போதும் தேவபக்தியுள்ள பிள்ளைகள் பிறப்பார்கள் என்பது நிச்சயமல்ல என்பதையும் நான் அறிவேன். அதேநேரம் கடவுள் சில கருவிகளைக் கொண்டு தன்னுடைய காரியங்களை நிறைவேற்றிக்கொள்ளுகிறவர் என்பதும் எனக்குத் தெரியும். நான் இதுவரை விளக்கிய கிருபையின் கருவிகளை நீங்கள் அலட்சியப்படுத்துவீர்களானால் உங்கள் பிள்ளைகள் நல்லபடியாக வளர்ந்து வருவதற்கு வாய்ப்பில்லை.

பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகள் ஞானஸ்நானம் பெற்று திருச்சபையில் அங்கத்தவராகுவதற்கு நீங்கள் அவர்களை அழைத்துச் செல்லலாம். அவர்களுக்காக பரிந்துரைக்கிற தேவபக்தியுள்ளவர்களை நியமிக்கலாம்; உங்களுக்காக ஜெபிக்கிறவர்களின் உதவியை நாடலாம். பிள்ளைகளை நல்ல பாடசாலைக்கு அனுப்பலாம். அவர்களுக்கு வேதாகமத்தையும், ஜெபப் புத்தகங்களையும் அளித்து வெறும் அறிவை மட்டும் வழங்குபவர்களாக இருக்கலாம். இவை யாவும் இருந்தாலும், வீட்டில் இடைவிடாமல் அவர்களுக்கு பயிற்சி கொடுக்காமல் இருப்பீர்களேயானால், முடிவில் அவர்கள் ஆத்துமாக்களுக்கு கேடுதான் ஏற்படும் என்று நான் வெளிப்படையாகவே உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன். வீட்டில்தான் நல்ல பழக்கவழக்கங்கள் உருவாகின்றன. வீட்டில்தான் குணாதிசயங்களுக்கு அத்திவாரம் போடப்படுகிறது. விருப்பங்கள், கருத்துக்கள் எல்லாவற்றுக்கும் வீடுதான் ஆதாரமாக இருக்கிறது. ஆகவே வீட்டில் அவர்களுக்கு கவனத்தோடு நல்ல வளர்ப்புப் பயிற்சி அளிக்க சகல முயற்சிகளையும் செய்யுங்கள் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். போல்டன் (Bolton) என்கிற ஒரு மனிதன் தனது மரணப்படுக்கையிலே தனது பிள்ளைகளிடம் சொன்னதைப் போல சொல்லக் கூடிய மனிதன் மகிழ்ச்சி நிறைந்தவனாயிருப்பான். அவர் என்ன சொன்னார் தெரியுமா? “கிறிஸ்துவின் நியாயஸ்தலத்திலே, உங்களில் ஒருவராவது மறுபடியும் பிறக்காதவர்களாக என்னை சந்திக்கத் துணிய மாட்டீர்கள் என்று நம்புகிறேன்” என்றார் அவர்.

தாய், தகப்பன்மாரே, நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாகவும், கடவுளுக்கு முன்பாகவும் நான் உங்களுக்கு சொல்லுகிறேன் – உங்கள் பிள்ளைகளை அவர்கள் நடக்க வேண்டிய வழியிலே நடத்துவதற்கு தேவையான எல்லா முயற்சிகளையும் எடுத்து பயிற்சி கொடுங்கள். இதை

நீங்கள் அவர்களுடைய ஆத்துமாக்களுக்காக மாத்திரமல்ல, எதிர்காலத்தில் உங்களுடைய ஆறுதலுக்கும் சமாதானத்திற்காகவும் செய்ய வேண்டும். அதிலேயே உங்களுடைய உண்மையான சந்தோஷம் தங்கியிருக்கிறது. வில்லிலிருந்து புறப்படும் அம்பு மனிதனுடைய இதயத்தைத் தாக்கிக் காயப்படுத்துவது போல பிள்ளைகள் அநேக பெற்றோரின் இதயங்களைக் காயப்படுத்திக் கொண்டிருப்பதை எங்கும் காண்கிறோம். பிள்ளைகளால் உண்டாகும் கசப்பான பானத்தை அநேகர் அருந்த வேண்டியதாக இருக்கிறது. பிள்ளைகளே அநேக மனிதர்களுடைய கண்ணீருக்குக் காரணமாக இருந்துவிடுகிறார்கள். இதை ஆதாமில் நாம் பார்க்கிறோம். யாக்கோபுவில் பார்க்கிறோம். தாவீதின் வாழ்க்கையிலும் பார்க்கிறோம். பிள்ளைகளால் பெற்றோருக்கு ஏற்படுகிற துயரத்தைக் காட்டிலும் அதிகமான துயரம் இந்த உலகத்தில் வேறில்லை. நீங்கள் கவனமாக இருங்கள்! இவற்றை அலட்சியப்படுத்தினால் உங்களுடைய வயோதிப காலத்தில் இத்தகைய கஷ்டங்களை நீங்களும் அனுபவிக்க நேரிடும். இதுவரை நான் விளக்கிய உண்மைகளை சிந்தியுங்கள். இல்லாவிட்டால் வயோதிபத்தில் நீங்கள் உங்கள் பெலனை இழந்து, கண் பார்வை மங்கும் காலத்தில், நன்றிகெட்ட உங்கள் பிள்ளைகளால் இழிவாக நடத்தப்பட்டு, கண்ணீர் வடிக்க நேரிடும்.

உங்கள் பிள்ளைகள் உங்களுடைய வயோதிப காலத்தில் உங்களுக்கு பக்கபலமாக இருந்து உங்களை போஷிக்க வேண்டுமென்று விரும்புகிறீர்களா? அவர்கள் சாபத்தை அடையாமல் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால், துயரத்தை அனுபவிக்காமல் சந்தோஷத்தை அடைய வேண்டுமானால், ரூபனாக இல்லாமல் யூதாவாக வாழ வேண்டுமானால், ஓர்பாளாக இல்லாமல் ரூத்தாக இருக்க வேண்டுமானால், நோவாவைப் போல பிள்ளைகளின் செயல்களைக் கண்டு அவமானம் அடையாமலிருக்க வேண்டுமானால், வாழ்க்கையே வெறுத்துப் போன ரெபெக்காளைப் போன்ற நிலையை அடையாமலிருக்க வேண்டுமானால், நான் தந்திருக்கும் புத்திமதிகளை கருத்தோடு சிந்தித்துப் பாருங்கள். பிள்ளைகளை சிறுவயதிலிருந்தே சரியான வழியில் நடக்க பயிற்சி அளியுங்கள்.

இந்த ஆக்கத்தை வாசிக்கிற ஒவ்வொருவரும், உங்களுடைய ஆத்துமாவின் மதிப்பை உணர்ந்துகொள்ளும்படியாக கடவுள் உங்களுடன் தன் வார்த்தை மூலமாகப் பேச வேண்டும் என்று ஜெபித்து இதை முடிக்க நான் விரும்புகிறேன். இதை சரியாக உணராதபடியால்தான் ஞானஸ்நானம் என்பது பல நேரங்களில் வெறும் சடங்காகி விடுகிறது. கிறிஸ்தவ பயிற்சி முறைகள் யாவும் அலட்சியப்படுத்தப்பட்டு மதிப்பில்லாமல் போய்விடுகின்றன. அநேக சமயங்களில் பெற்றோர்கள் தங்களுடைய சொந்த ஆத்துமாவைக் குறித்த உணர்வே இல்லாமலிருக்கிறபடியால்தான் அவர்களுடைய பிள்ளைகளின் ஆத்துமாக்களைக் குறித்து அவர்கள் உணர்வற்றவர்களாயிருக்கிறார்கள். மனிதனுடைய இயல்பான சுபாவ நிலைக்கும், கிருபையின் நிலைக்கும் இடையிலுள்ள மாபெரும் வித்தியாசத்தை பெற்றோர் உணராமலிருக்கின்றபடியால்தான் தங்களுடைய பிள்ளைகளை அவர்கள் போகிற வழியில் விட்டுவிட்டு சும்மாயிருக்கிறார்கள்.

பாவத்தை கடவுள் அறவே வெறுக்கிறார் என்பதை அவரே உங்கள் அனைவருக்கும் கற்றுக் கொடுக்கட்டும். அப்போதுதான் நீங்கள் உங்களுடைய பிள்ளைகளின் பாவங்களைக் குறித்து துக்கத்தோடு அழுது, நெருப்பில் கிடக்கும் கொள்ளிக்கட்டையைப் போல இருக்கும் அவர்களை வெளியே இழுத்து காப்பாற்ற முயற்சிப்பீர்கள்.

கிறிஸ்து எவ்வளவு விலையேறப்பெற்றவர் என்பதையும், நமது இரட்சிப் பிற்காக அவர் எவ்வளவு பெரிய பூரணமான, மகத்தான காரியத்தை செய்து முடித்திருக்கிறார் என்பதையும் கர்த்தர் உங்கள் அனைவருக்கும் கற்றுக் கொடுக்கட்டும். அப்போதுதான், நீங்கள் கிருபையின் சாதனங்கள் எல்லாவற்றையும் பயன்படுத்தி பிள்ளைகளை இயேசு கிறிஸ்துவிடம், அவர்கள் கிறிஸ்து மூலமாக பிழைக்கும்படி கொண்டு வருவீர்கள்.

உங்கள் ஆத்துமாக்களைப் புதுப்பிக்கவும், பரிசுத்தப்படுத்தவும், தூண்டி விடவும் பரிசுத்த ஆவியானவரின் உதவி எத்தனை அவசியம் என்பதை கர்த்தர் உங்கள் அனைவருக்கும் கற்றுக்கொடுக்கட்டும். அப்போதுதான் பரிசுத்த ஆவிக்காக இடைவிடாமல் ஜெபிக்குமாறு உங்கள் பிள்ளைகளை நீங்கள் ஊக்கப்படுத்துவீர்கள். பரிசுத்த ஆவியானவர் அவர்கள் இதயத்திலே வல்லமையோடு வந்து, அவர்களை புது சிருஷ்டியாக்கும் வரைக்கும் ஓய்வின்றி ஜெபிக்கக் கற்றுக் கொடுப்பீர்கள் என்று நான் நம்பமுடியும்.

தேவன் இவற்றையெல்லாம் உங்களுக்குத் தரும்போதுதான், நீங்கள் உங்கள் பிள்ளைகளை கவனத்தோடு பயிற்றுவிப்பீர்கள் என்ற நம்பிக்கையை நான் அடைவேன். இந்த உலகத்தில் வாழ்வதற்கு மட்டுமல்ல, வரப்போகின்ற உலகில் வாழ்வதற்கும் அவர்களுக்கு நல்ல பயிற்சியளியுங்கள். இந்த உலகத்தில் வாழவும், பரலோகத்திற்குமாக நல்ல பயிற்சி அளியுங்கள். கடவுளுக்காகவும், கிறிஸ்துவுக்காகவும், நித்திய வாழ்க்கைக்காகவும் பயிற்சி கொடுங்கள்.

**வாசகர்கள் பலரின் வேண்டுகோளுக்கிணங்க போதகர் பாலா அவர்களின் பிரசங்கங்களை வீடியோவிலும் வெளியிட்டிருக்கிறோம்.**
**இந்த வருடத்தில் அவர் பிரசங்கித்த இரண்டு சுவிசேஷப் பிரசங்கங்கள் தற்போது வெளி வந்திருக்கின்றன.**

**இறப்பதற்கு முன் இயேசுவை சந்தித்தவன்**




**அறியப்படாத தேவன்**




**பத்திரிகையில் கொடுக்கப்பட்டுள்ள சென்னை முகவரியோடு தொடர்பு கொண்டு இந்த DVDக்களை பெற்றுக்கொள்ளலாம்.**

**இணைய வசதியுள்ளவர்கள் இப்பிரசங்கங்களை திருமறைத்தீப வலைப்பூவில் (biblelamp.org) இலவசமாக பதிவிறக்கம் செய்து கேட்டுப் பயனடையலாம்.**

**சவரின் கிரேஸ் வெளியீட்டின் புத்தகங்கள் தமிழகத்திலுள்ள கீழ் வரும் ஐந்து முகவரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.**

| எண் | புத்தகப் பெயர் | ஆசிரியர் | ரூ.பை. |
|---|---|---|---|
| 1. | வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்க்கை | A.N. மார்டின் | 25.00 |
| 2. | கர்த்தரின் வேதம் | ஆர். பாலா | 35.00 |
| 3. | அங்கத்துவ அமைப்பில்லாத திருச்சபையா? | ஆர். பாலா | 15.00 |
| 4. | பிரசங்கிகளும் பிரசங்கமும் | ஆர். பாலா | 55.00 |
| 5. | சிறுவர்களுக்கான வேத உபதேசம் | ஆர். பாலா | 20.00 |
| 6. | குடும்ப ஆராதனை | ஆர். பாலா | 20.00 |
| 7. | தாம்பத்திய உறவில் நெருக்கம் | அலன் டன் | 75.00 |
| 8. | அழிவில்லாத ஆத்மீக ஆலோசனைகள் | A.N. மார்டின் | 75.00 |
| 9. | ஆதிசபையின் அற்புத வரங்கள் | ஆர். பாலா | 50.00 |
| 10. | திருச்சபை வரலாறு (பாகம் 1) | ஆர். பாலா | 50.00 |

திரு. K. அருள் செல்வம்,
4/630, கிருபை இல்லம்,
ஆண்டவர் நகர், நாமக்கல் 637002.
கைப்பேசி 9443798315

திரு. டேவிட் பிரகாசா,
14 சுந்தரம் 3வது தெரு, PN புதூர்,
கோயமுத்தூர் 641041.
கைப்பேசி 9500748128

போதகர் S.D. ஜெரால்டு,
(கிருபை சபை)
5B/9/8 - தன்ராஜ் ஸ்டோர்,
சுப்ரமணியபுரம், விசாலபாகம்
2வது தெரு, மதுரை 625011.
கைப்பேசி 9994874077

போதகர் T. அண்ணாதுரை,
(கிருபை சுவிசேஷ சபை)
வீரியபாளையம் (PO),
பஞ்சப்பட்டி (via),
K.R. புரம் (TK),
கரூர் 639119.
கைப்பேசி 9789741732

போதகர் M. ஜேம்ஸ்
(கிருபை சீர்திருத்த சபை)
6/87 காமராஜர் தெரு,
திருவள்ளுவர் நகர்,
அயனாவரம்,
சென்னை 600023.
கைப்பேசி 9445671113

தபாலில் பெற விரும்புபவர்கள் உங்களுடைய பெயர், முழு முகவரியோடு உங்களுடைய தொலைபேசி எண்ணையும் தவறாமல் குறிப்பிடுங்கள். - ஆசிரியர்

# திருமறைத்தீபம் இணைய தளம்




**திருமறைத்தீபம் [PDF/Unicode]**

**தமிழ் ஆடியோ, வீடியோ பிரசங்கங்கள்**


**கிறிஸ்தவ இலக்கியங்கள்**

**இறையியல் பூங்கா**

**இத்தளம் உங்களுக்குப் பயனளிக்கும் என்று நம்புகிறோம். இது பற்றிய உங்கள் கருத்துக்களையும் எங்களுக்கு அறிவியுங்கள். அது தளத்தை மேலும் உங்களுக்குப் பயன்படும் விதத்தில் அமைக்க எங்களுக்குத் துணை புரியும்.**

**http://www.biblelamp.me (or) www.biblelamp.org**

---




"கிறிஸ்தவ திருச்சபை வரலாறு" (பாகம் 1)


முதன் முறையாக கிறிஸ்தவ திருச்சபை வரலாறு இலகுவான தமிழில், படங்களோடு தெளிவான விளக்கங்களுடன் வெளிவந்திருக்கிறது.

---

"ஆதிசபையின் அற்புத வரங்கள்"

என்ற புத்தகம் மறுபதிப்பு செய்யப்பட்டிருக்கிறது.

1 கொரிந்தியர் 12-14 வரையுள்ள வேதப்பகுதி வேதபூர்வமாக ஆராயப்பட்டு இன்றைய கால நடைமுறை விளக்கங்களோடு புத்தகமாக வெளிவருகிறது.




---

**ஸ்ரீ லங்காவிலுள்ளவர்கள் திருமறைத்தீபம் இதழைப் பெற கீழுள்ள முகவரியோடு தொடர்புகொள்ளவும்:**

**கிருபை வேதாகம சபை, 19 இராஜசிங்க வீதி, கொழும்பு, ஸ்ரீ லங்கா**
**தொலைபேசி: 2503519**

**ஸ்ரீ லங்காவிலுள்ளவர்கள் சவரின் கிரேஸ் வெளியீட்டின் புத்தகங்களைப் பெற கீழுள்ள முகவரிகளோடு தொடர்புகொள்ளவும்:**

**திரு. மில்டன் மஸ்கிறெங்ஞு,**
**25 ஷூ ரோடு,**
**கொழும்பு 13,**
**ஸ்ரீ லங்கா.**
**தொலைபேசி: 2345654;**
**கைப்பேசி 0722818296**

**Rev. S.N. பார்த்தீபன்,**
**195/1 ஸ்டேசன் வீதி,**
**வைரவப்புளியங்குளம்,**
**வவுனியா, ஸ்ரீ லங்கா**
**தொலைபேசி: 024 2226977;**
**கைப்பேசி: 0777577766**

திருமறைத்தீபம்

மலர் 19 அக்டோபர் - டிசம்பர் 2013 இதழ் 4

1. எழுபத்தைந்து
 - முதிரும் வயதல்ல, இளமை ததும்பும் இதழின் எண்
2. அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்
3. பெற்றோரின் கடமைகள் - ஜெ. சி. ரைல்

## புதிய வெளியீடுகள்




ரூ. 60

### “கிறிஸ்தவ திருச்சபை வரலாறு” (பாகம் 2)

திருச்சபை வரலாற்றில் திருச்சபை சீர்திருத்தம் எப்படி ஆரம்பித்து ஐரோப்பாவெங்கும் பரவியது என்ற அற்புதமான வரலாற்று நிகழ்வுகளை இந்த இரண்டாம் பாகம் விளக்குகிறது.

முதல் பாகத்தைப் போலவே இதுவும் படங்களோடு எளிமையான, தெளிவான விளக்கங்களுடன் வெளிவந்திருக்கிறது.




ரூ. 40

### ஆவிக்குரிய பிள்ளை வளர்ப்பு

19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த, போதகரும் எழுத்தாளருமான ஜெ. சி. ரைல் எழுதிய “Duties of Parents” என்ற நூல் இப்போது தமிழில் வெளியிடப்படுகிறது.

இது கிறிஸ்தவ பெற்றோர்களுக்கு எக்காலத்திற்கும் அவசியமான வேத போதனைகளைத் தருகிறது.

---

பத்திரிகையிலுள்ள தமிழக முகவரிகளில் இப்புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளலாம். தபால் கட்டணம் தனி.

# பொருளடக்கம்


1. முன் அட்டை

2. ஆசிரியர் கடிதம்

3. எழுபத்தைந்து
   - முதிரும் வயதல்ல, இளமை ததும்பும்
   இதழின் எண்

4. அரண்டவன் கண்ணுக்கு
   இருண்டதெல்லாம் பேய்

5. பெற்றோரின் கடமைகள் - ஜெ. சி . ரைல்

6. பின் அட்டை